# சந்தானாசாரியர் சரிதையும் சைவ சித்தாந்த சாத்திரங்களும்





டாக்டர் மா. வேதநாதன் M.A., Ph.D.,



JPL
C10466



வெளியீடு
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
யாழ்ப்பாணம்
2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 NOV 2012

# சந்தானாசாரியர் சரிதையும் சைவ சித்தாந்த சாத்திரங்களும்

சித்தாந்தஇரத்தினம்
டாக்டர். மா. வேதநாதன் *M.A., Ph.,D.,*
தலைவர்
இந்துநாகரிகத்துறை,
இணைப்பாளர்,
சைவசித்தாந்த முதுகலைமாணி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

KOHA JPL
104bb c.c
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

வெளியீடு
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
2008.

229600
229,600 cc
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் குறிப்பு


நூற் தலைப்பு :- சந்தனாசாரியர் சரிதையும் சைவசித்தாந்த சாத்திரங்களும்

நூலாசிரியர் :- டாக்டர்.மா.வேதநாதன்

பதிப்புரிமை :- கலாநிதி.(திருமதி.) புஸ்பராணி வேதநாதன்

பதிப்பாண்டு :- 2008

எழுத்து :- 13 புள்ளி

பக்கங்கள் :- 117

படிகள் :- 600

விலை :- 200/=

அச்சிடல் :- சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

வெளியீடு :- சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்.

*ISBN No.* :-

Title :- Santhanasariyar Sarithaiyum Saivasiththantha Saththirankalum.

Author :- Dr.M.Vethanathan

Copy right :- Dr.(Mrs.) Pushparani Vethanathan

Edition :- 2008

Price :- 200/=

Published by :- Saiva Siddhanta Research Center

Printed by :- Sairam Printers, Chankanai.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையுறை

**எனது ஆளுமை உருவாக்கத்தில்
பெரும் பங்காற்றிய மதிப்புயர்
பேராசிரியர்,
கலாநிதி.திருமதி.கலைவாணி இராமநாதனுக்கு
மணிவிழா நினைவுக்கையுறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துநாகரிகதுறைத் தலைவரும் பட்டப்பின் படிப்புக்கள் பீட சைவசித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளரும் எனது வழிகாட்டலில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தத்துவ மையத்தில் "கந்தபுராணத்தில் சைவசித்தாந்தக் கோட்பாடுகள்" என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மிகவும் சிறப்பாக நிறைவு செய்து பலராலும் பராட்டப்பட்டவருமான முனைவர் மா.வேதநாதன் அவர்களின் "சந்தனாசாரியர் சரிதையும் சைவசித்தாந்த சாத்திரங்களும்" என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் அகமகிழ்வு அடைகின்றேன்.

சைவசித்தாந்தக் கொள்கைகளை வரையறுத்து உணர்த்தும் நோக்கில் பதினான்கு சாத்திரங்கள் அமைந்தன. அவை மெய்கண்ட சாத்திரங்கள் எனப் பெயர் பெற்றன. மெய்கண்டாரை முதல்வராகக் கொண்டு மெய்கண்ட சந்தானம் அமைந்தது. அவ்வழியில் மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர் மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்ற நால்வர் புறச் சந்தானாசாரியர்களாக அமைந்தனர். இந்நால்வரின் வாழ்வு சித்தாந்த சைவவாழ்வாகும். இவர்களின் வாக்கு சைவசித்தாந்த சாத்திரங்களாயின.

சந்தானாசாரியர்களின் வாழ்க்கை வரலாற்றையும் சைவசித்தாந்த அடிப்படைகளையும், மிகவும் தெளிவாகவும் அறிந்து எளிமையாகவும் அறிந்து கொள்ளும் வண்ணம் இந்நூலை எழுதிய முனைவர் மா.வேதநாதன் அவர்களை வாழ்த்துகிறேன். பாராட்டுகின்றேன். சைவசித்தாந்தம் பற்றி அறிய விரும்புகின்றவர்களுக்கு இது ஓர் அரிய நூலாகும். சைவசித்தாந்தம் பயிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டு மன்றி சைவசித்தாந்தத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்புகின்றேன்.

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக தத்துவமையத்தில் வருகைதரு பேராசிரியராகக் கடமையாற்றிய இவர், திருவாவடுதுறை சைவசித்தாந்த நேரடிப்பயிற்சி மையத்தில் மூன்றாண்டுகள் முறையாகப் பயின்று "சித்தாந்த இரத்தினம்" என்ற பட்டத்தை பெற்ற பெருமைக்குரியவர். சர்வதேசக் கருத்தரங்குகள் பலவற்றில் கலந்துகொண்ட சிறப்பும் இவருக்குண்டு. இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மனநிறைவு அடைவதோடு இவரின் நூலாக்கப்பணி மென்மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

முனைவர்.க.பாஸ்கரன்
பேராசிரியர் மற்றும் இயக்குனர்
தத்துவமையம்,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

யாழ்பாணத்தில் "சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்" என்னும் அமைப்பு 2005 தைத்திங்களில் தொடங்கப்பெற்றது. இன்று அந்த நிறுவனம் தனது முதலாவது நூலாக சந்தனாசாரியர் சரிதையும் சைவசித்தாந்த சாத்திரங்களும்" எனும் எனது நூலை வெளியிடுவது மனமகிழ்வைத் தருகின்றது.

சந்தனாசாரியர் தமிழகத்தில் தமிழ்மொழியில் வழங்கிய சைவமே சைவசித்தாந்தம் என்றும் சித்தாந்தசைவம் என்றும், தத்துவச் சைவமென்றும் வழங்கப்பெறுகின்றது. சந்தனாசாரியர் நிலைநிறுத்திய சைவசித்தாந்த மெய்யியலுக்கு சிவாகமங்களும் சைவத்திருமுறைகளும் பிரதான பிரமாணப் பனுவல்களாக விளங்குகின்றன.

இந்நூல் உருவாக்கத்திற்கு மூலகர்த்தாவாக இருந்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களுக்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பேராசான் பேராசியர் முனைவர் க.பாஸ்கரன் அவர்களுக்கு காலமெல்லாம் என் செஞ்சாந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளிவர உளமகிழ்வோடு உதவும் என் அன்பு மாணவன் றஜீபனுக்கு என் நன்றி. மற்றும் இந்நூலை நல்லமுறையில் அச்சிட உதவிய சங்கானை சாயிராம் பிறிண்டேர்ஸ் அச்சகத்தினருக்கும் எனது நன்றி.

ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருளை நினைத்துப் பார்க்கின்றேன். திகைத்து நிற்கின்றேன்.

நயினாதீவு
2008.

டாக்டர்.மா.வேதநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **i. சந்தனாசாரியர்கள்** | **01** |
| 01. மெய்கண்டதேவர் | 02 |
| 02. அருணந்தி சிவாசாரியர் | 07 |
| 03. மறைஞானசம்பந்தர் | 09 |
| 04. உமாபதி சிவாசாரியர் | 13 |
| **ii. சித்தாந்த சாத்திரங்கள் தோன்றிய தத்துவப் பின்னணி** | **24** |
| 01. திருவுந்தியார் | 26 |
| 02. திருக்களிற்றுப்படியார் | 30 |
| 03. சிவஞானபோதம் | 34 |
| 04. சிவஞானசித்தியார் | 44 |
| 05. இருபா இருபஃது | 48 |
| 06. உண்மை விளக்கம் | 50 |
| 07. சிவப்பிரகாசம் | 54 |
| 08. திருவருட்பயன் | 57 |
| 09. வினாவெண்பா | 67 |
| 10. போற்றிப்பஃறொடை | 69 |
| 11. கொடிக்கவி | 69 |
| 12. நெஞ்சுவிடுதூது | 71 |
| 13. உண்மைநெறி விளக்கம் | 73 |
| 14. சங்கற்ப நிராகரணம் | 74 |
| **iii. துணைநூற்பட்டியல்** | **81** |
| **iv. பின்னிணைப்பு** | |
| 01. சித்தாந்த சாத்திரங்கள் பற்றிய விபரங்கள் | 81 |
| 02. சந்தானசாரிய புராண சங்கிரகம் | 83 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தானா சாரியர்கள்

***

சைவ சமய ஆசாரியர்களை, சமயாசாரியர்கள் என்றும் சந்தானாசாரியர்கள் என்றும் இரு வகையாக வழங்குவது சைவ மரபு ஆகும். அவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் சமயாசாரியர். இவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டுக்குட்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். இக்காலத்தில் தமிழ்நாட்டில் பௌத்தம், சமணம் என்னும் சமயங்கள் மேலோங்கி இருந்தன. இச் சமயங்களை இறையருளால் வாதில் வென்று தேவார திருவாசகங்களாகிய தோத்திரப் பாடல்களால் மீண்டும் பழைய வைதீக சைவ நெறியைத் தமிழகத்தில் தழைத்தோங்கச் செய்த பெருமை இச் சமயாசாரியார்களுக்கே உரியது.

சைவசமய மரபில் சந்தானம் என்பது இருவகையாக வைத்துக் கூறப்படும். அவை அகச்சந்தானம், புறச் சந்தானம் என்று இருவகைப்படும்.

மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவானார் என்ற இந்நால்வரும் சந்தானாசாரியராவர். இந்த சமயாசாரியார்களால் தழைத்தோங்கச் செய்யப்பெற்ற சைவசமயத்தின் கொள்கைகளாகிய முப்பொருள் உண்மையை வரையறுத்து ஒழுங்குபடுத்திச் சிவஞானபோதம் முதலாக உள்ள சாத்திர நூல்களால் தெளிவாக விளங்கியவர் களாவார்கள். ஒருவருக்குப் புத்திர சந்தானம் போல, இடையறவுபடாமல் வழிவழியாக ஞானபுத்திரர்களாய் உபதேசக் கிரமத்தில் சைவமரபினைக் காத்தவர்களாதலின், இவர்கள் சந்தான குரவர்கள் என்றும் சந்தானாசாரியர்கள் என்றும் வழங்கப் பெறுகின்றனர். இவர்களது பரம்பரையில் வந்தவைகளே தமிழ்நாட்டில் விளங்கும் சைவ ஆதீனங்கள் ஆகும்.

திருக்கைலாயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகண்ட பரமசிவன் நந்தியெம்பெருமாளுக்கு உபதேசிக்க, அவர் சனற்குமாரர் முதலியோருக்கு உபதேசிக்க, சனற்குமாரர் சத்தியஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனிகளுக்கு உபதேசிக்க அவர் பரஞ்சோதி மாமுனிகளுக்கு உபதேசிக்க, அவர் மெய்கண்ட தேவருக்கு உபதேசிக்க, அவரது பரம்பரையில் பல கிளைகளாக வந்ததே நந்தி மரபு என்றும், மெய்கண்ட சந்தானம் என்றும், திருக்கயிலாய பரம்பரை என்றும் வழங்கப்பெறும். ஆதீனங்கள், நந்தி, சனற்குமாரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதிமாமுனிகள் என்ற நால்வரும் திருக்கைலையிலேயே வாழ்பவர்களாதலின், இவர்கள் அகச்சந்தானச் சாரியர்கள் அகச்சந்தான குரவர்கள் என அழைக்கப் பெறுவர். நால்வரும் மண்ணுலகில் வாழந்து, மக்கள் மாசினைப் போக்கி சித்தாந்த சைவ மாண்பினை வளர்த்தவர்களாதலின், இந்நால்வரும் புறச் சந்தானகுரவர்கள் எனப் பெறுவர்.

# மெய்கண்ட தேவர்

***

## திருவவதாரம்

தொண்டை நன்னாட்டிற்கும், சோழ வளநாட்டிற்கும் நடுவில் இருப்பது நடுநாடு எனப் பெறும். திருமுனைப்பாடி நாடு. இந்நாடு சமயாசாரியார்களுள் திருநாவுக்கரசரும், ஆலால சுந்தரரும் பிறந்தருளும் பெரும்பேறு பெற்றிலங்குவது. இந்தநடு நாட்டிலே திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற திருப்பெண்ணாகடம் என்ற திருத்தலத்திலே, சைவவேளாளர் குலத்திலே, அச்சுதகாளப்பர் என்னும் அருந்தவப் பெரியார் ஒருவர் இருந்தார். அவருக்கு எல்லா நலமும் வாய்த்திருந்தும், புத்திரப்பேறு மட்டும் வாய்க்காதிருந்தது. சித்தாந்த சைவ மரபு தழைக்கவும், மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கவும், ஒரு சற்புத்திரன் வேண்டுமே என்று மனம் கவன்ற அவர், தமது குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதரிடம் தம் குறையைத் தெரிவித்தார். அவரும் அப்பொழுதே சைவ சம்பிரதாயப்படி திருமுறைகளைப் பூசித்து அடங்கன் முறையில் கயிறு சாத்திப் பார்த்தார்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ(டு) உள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோள் உமைபங்கன், வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவந் தீவினையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாட்டு உதயமாயிற்று. இப்பாடலில் மகப்பேறும் நினைத்தவைகளும் கிடைக்கும் என்றும், அதற்காகத் திருவெண்காட்டிலுள்ள முக்குடநீரில் முழுக வேண்டும் என்றும் குறிக்கப்பட்டிருத்தலின் ஆசிரியர் அதன்படி நடக்குமாறு அச்சுதக் காளப்பாளருக்குக் கட்டளையிட்டார். அவரும் ஆசாரியர் ஆணையைச் சிரமேற்கொண்டு அருந்தவ மனைவியோடும் திருவெண்காடு சென்றார். இருவரும் ஒரு மண்டலகாலம் (48 நாள்) முக்குள நீரில் முழ்கி முழுமுதற் பரம்பொருளை நாள்தோறும் வணங்கி வழிபட்டு வந்தார்கள். முடிவில் இறைவன் அச்சுதக்களப்பாளர் கனவில் தோன்றி, "உனக்கு இப்பிறப்பில் புத்திரப்பேறு இல்லை" என்றருளினார். அஃதுணர்ந்த அச்சுதக்களப்பாளர் "எம்பெருமான் திருக்குறிப்பின்படி நிற்கக் கடவேன். ஆயினும் திருஞானசம்பந்தர் திருப்பாடல் பொய்யாது என்னும் துணிவுடையேன்" என்று விண்ணப்பித்தார். அது கேட்ட இறைவன் வினைப்பயனால் உனக்குப் புத்திரப்பேறு இப்பிறப்பில் இல்லையாயினும், திருஞானசம்பந்தன் பாடல்களை நம்பி நம்மை வழிபட்டமையால், ஞானசம்பந்தனைப் போல உனக்கு ஒரு மகவை அளிக்கின்றோம் என்றருளிச் செய்து மறைந்தார். இறையருள் பெற்ற காளப்பாளர் கடந்தைநகர் போந்து வசித்து வரும் காலத்து ஒரு நன்னாளில் சித்தாந்த சைவச் செந்நெறி செழித்து விளங்க மெய்கண்டார் மகவாக அவதரித்தார்.

## இளமைப்பெயர்

மெய்கண்டாரின் பிள்ளைப்பெயர் "சுவேதவனப் பெருமாள்" என்பதாகும். இப்பெயர் திருவெண்காட்டு இறைவனின் திருப்பெயர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெயரையே அவருக்கு பெற்றோர் சூட்டி மகிழ்ந்தனர்.

பெண்ணாகடத்தில் இருந்த மெய்கண்ட தேவரை திருவெண்ணை நல்லூரிலுள்ள தம் வீட்டுக்கு அவருடைய மாமனார் அழைத்துச் சென்று வளர்த்தெடுத்தார். இது சந்தானா சாரியர் புராணத்தில்,

"இருமைசேர் திருவெண்ணெய் நல்லூரினுறையும்,
அருண் மாமனார் தம்மனை யெடுத்துவந் தணைந்தார்"
என வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணந்தி சிவாசாரியர் தமது இருபாவிருபது என்னும் நூலில், தமது ஞானாசிரியரான மெய்கண்ட தேவரை, சுவேதவனத்தான் என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகவுள்ளது.

காலம்.

மெய்கண்ட தேவர் வாழ்ந்த காலம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகளிலும் பிறம் அவர் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வாழ்ந்தவர் என்பது சாசனச் சான்றாலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அருணந்தி சிவாசாரியரும் மெய்கண்டதேவரும் சம காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.

## நாற்பத்தொன்பது மாணவர்கள்

மெய்கண்ட தேவரின் மாணவர்களாக அருணந்தி சிவாசாரியர், மன வாசகங்கடந்தார், சிற்றம்பல நாடிகள் முதலான நாற்பத்தொன்பதின்மர் இருந்தனர் என்பது சைவசந்தானாசாரியர் புராண சங்கிரகத்தில்,

'மெய்யுணர்ந்தார் புகழும் அருணந்தியோடு
மேவதிகை மனவாசகங்கடந்தார்
பொய்யகல் சிற் றம்பல நாடிகண் முன்னாகப்
புகழுறு மாணாக்கர் நாற்பத் தொன் பதின்மர்,
மையகலும் பரிபாக நலகு ணர்ந்து
மன்னுசிவ தீக்கைமுறை மருவச் செய்து
தெய்வவருண் மேவிவிடமுப் பொருளுனர்த்திச்
சின்மயராந் தன்மையினைச் செய்து பின்னர்

என வருதலால் அறியப்படுகின்றது.

(பாடல் 38)

திருவெண்ணை நல்லூரில் கோயில் கொண்டிருந்த பொல்லாப்பிள்ளை யாரிடத்தில் மெய்கண்ட தேவர் கலைஞானங்களைக் கேட்டுத் தெளிந்தாரென்பது, சந்தானாசாரியர் புராண சங்கிரகத்தில்

"அருட்டுரைக்கணேயமர் பொல்லாம் பிள்ளைய ரருளால், மருட்டிலாமலே சிந்தித்துத் தெளிந்து" (பாடல் 28)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வருதலால் அறியப்படும் இதன் காரணமாகவே மெய்கண்ட தேவர் தாம் அருளிய சிவஞானபோதக்காப்புச் செய்யுளில், "பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே" என்று திருவெண்ணெய் நல்லூரப் பொல்லாப் பிள்ளையாரை முதற்கண் வணங்குகின்றாரெனலாம்.

## உபதேசம் பெறுதல்

இறையருளால் தோன்றிய மகவினைத் தாலாட்டிச் சீராட்டிப் பால் நினைந்தூட்டி வளர்த்தனர். திருவெண்காட்டு இறைவனின் திருவருளால் அவதரித்த அவருக்கு, சுவேதவனப் பெருமாள் என்ற பெயரையே பெயராக இட்டனர். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக சுவேதவனப் பெருமாள் வளர்ந்து வந்தார். இவ்வாறிருக்கும் நாளில் இவரது தாய்மாமனார் இவரைத் தமது ஊராகிய திருவெண்ணெய் நல்லூருக்கு எடுத்துச் சென்று வளர்த்து வந்தார். வயது இரண்டாயிற்று. அப்பொழுது பரஞ்சோதி மாமுனிவர் திருக்கயிலையிலிருந்து பொதியமலைக்கு ஆகாயமார்க்கமாகச் சென்று கொண்டிருந்தார். திருவெண்ணெய் நல்லூருக்கு மேலே வந்தபோது விமானம் தடைப்பட்டது. அதனால் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொள்ளத் தக்கவர் இருக்கின்றார் என்பதைத் திருவருளால் உணர்ந்து கீழே இறங்கி ஞானக் குழந்தையாம் சுவேதவனப் பெருமாளைக் கண்டார். முப்பொருள் உண்மையை ஈராண்டுப் பிராயத்துக் குழந்தையாகிய அவருக்கு உபதேசித்தார். குல குருவாகிய சத்திய ஞானதாரிசனிகளின் திருப்பெயரை ஞானபுத்திரனாகிய இவருக்குத் தமிழில் மெய்கண்டார் எனத் தீட்சா நாமமாகச் சூட்டினார். அது முதல் இவர் மெய்கண்ட தேவராயினார்.

## சிவஞானபோதம் அருளல்

உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும் உபதேசத்தால் கைவரப் பெற்ற மெய்கண்ட தேவர் "சிவஞான போதம்" என்னும் சிறந்த சிவஞான நூலை வார்த்திகப் பொழிப்புடன் பன்னிரண்டு சூத்திரங்களால் அருளிச் செய்தார். இச்சிவஞான போத நுண்பொருள்களை நேரில் இவர்பால் கேட்டுத் தெளிந்த மாணவர்கள் நாற்பத்தொன்பதின்மராவர். இவரது தந்தைக்குக் குலகுருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியவரும், சகலாகம பண்டிதருமான ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியார் இவரது பெருமையை உணர்ந்து இவரிடம் உபதேசம் பெற்று முதல் மாணவராயினர். மெய்கண்டார் அருளிச் செய்த சிவஞான போதத்திற்குப் ஸ்ரீ பாஷியமாக (விரிவுரை) அருணந்திதேவர் செய்யுள் வடிவில் சிவஞான சித்தியார் என்னும் அரிய நூலை அருளிச் செய்துள்ளார். இவ்விரு நூல்களும் சைவ சித்தாந்தத்தைத் தெளிவாக விளக்கும் சிவஞான நூல்களாம். சிவஞான போதத்தை உள்ளிட்ட பதிநான்கு நூல்கள் சித்தாந்த சாத்திரங்கள் என வழங்கப்பெறும். அவற்றுள் ஒன்றாக விளங்கும் "உண்மை விளக்கம்" என்ற நூலை அருளிச் செய்தவர். இவர் மாணவர்கள் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவராகிய திருவதிகை மனவாசகங் கடந்தாராவர். சிவஞான போதம், பிரமாணஇயல், இலக்கண இயல், சாதனவியல், பயனியல் என நான்கு பிரிவாக அமைந்து கடவுள், உயிர்கள், தளை என்ற முப்பொருள்களின் இயல்புகளைத் தெளிவாக விளக்குகின்றது.

## மெய்கண்டார் திருநாள்

மெய்கண்ட தம்மை வந்தடைந்த பக்குவான் மாக்கள் பலருக்கும் ஞானோபதேசம் செய்து, சித்தாந்த சைவச் செஞ்ஞாயிறாக விளங்கியருளினார். தமது முதல் மாணாக்கராகிய ஸ்ரீ அருணந்திதேவ நாயனாருக்கு ஆசிரியத் தலைமை நல்கி, ஓர் ஐப்பசித் திங்கள் சுவாதி நாளில் பல்லுயிரும் நனிபுறச் சிவபரிபூரண நிலை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணந்தி சிவாச்சாரியர்

***

## திருவவதாரம்

மெய்கண்டதேவர் அவதரித்த அந்நடுநாட்டிலே சுந்தரர் தவநெறி வேண்டிப் பெற்ற தலமாகிய திருத்துறையூரிலே ஆதிசைவ மரபிலே அருணந்தி சிவனார் அவதாரம் செய்து சந்தான பரம்பரை முதற் குரவரான மெய்கண்டதேவ நாயனாரின் சீடரானார். அவ்வாறு ஆவதற்கு முன் இவர் சகல ஆகமங்களிலும் வல்லவராய் இருந்தமையால், சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கித் தமது குருவழி முறைப்படி, வேளாளர் மரபினருக்குக் குலகுருவாக விளங்கியிருந்தார். மெய்கண்டதேவர் அவதாரத்திற்கே அச்சுதக் களப்பாளர் என்பவருக்குத் தேவாரத் திருமுறையில் கயிறுசாத்திப் பார்த்துப் "பேயடையா பிரிவெய்தும்" என்னும் திருப்பாடல் உதயமாகக் கண்டு, திருவெண்காட்டிறைவரை வழிபடும்படி கட்டளையிட்டவர் இவரே என்பதும், அதன்படி ஒழுகிய அச்சுதக் களப்பாளருக்கு மெய்கண்டார் மகவாக அவதரித்து ஆசாரியத்தன்மை பெற்று விளங்கியதும் மேலே சொல்லப்பட்டன.

மெய்கண்டார் ஆசாரித்தன்மை பெற்று விளங்கியிருந்த நிலையில் அவர் தம்மை வந்து காணவில்லையே என்ற எண்ணத்துடனும், இரண்டு வயது நிரம்பிய குழந்தை சைவ சித்தாந்த பாடம் எப்படிச் சொல்கிறது என்பதை காணவேண்டுமென்னும் நோக்கத்துடன் சகலாகமபண்டிதர் திருவெண்ணெய் நல்லூருக்குத் தமது விருதுகளுடன் எழுந்தருளினார். அவ்வூர் மக்கள் அனைவரும் வீடுகள் தோறும் பூரண கும்பமெடுத்து மங்கல வாத்தியங்களோடு தங்கள் குருவாகிய சிவாச்சாரியாரை எதிர்கொண்டு வரவேற்றனர். மெய்கண்டார் மாத்திரம் தமது சித்தாந்த ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். அதுகண்ட அருணந்தி சிவனார் தாம் ஓரிடத்தில் தங்கி இருந்துகொண்டு மெய்கண்டாரைப் பற்றி வினவினார். அவரை அழைத்து வருமாறு தமது சீடர்களை அனுப்ப அவர்கள் சென்று மெய்கண்டாரது உபதேசத்தில் ஈடுபட்டு அவரடிக்கு ஆளாகிவிட்டனர். இதை அறிந்த சகலாகம பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே எழுந்தருளினார். அப்பொழுதும் உபதேசத்தில் ஈடுபட்டிருந்த மெய்கண்டார் இவரை வரவேற்க வில்லை. அப்போது மெய்கண்டார் ஆணவ மலத்தின் தன்மையைப் பற்றி விளக்கம் தந்து கொண்டிருந்தார்.

உடனே தம்மைப் பொருட்படுத்தவில்லையே என்று எண்ணிய சகலாகம பண்டிதர், தம்முனைப்போடு "ஆணவத்தின் சொரூபம் யாது?" எனக் கேட்டார். சிவஞானமே உருவாய்த் திகழ்ந்த மெய்கண்டார் இன்முகத்தோடு அவரைத் திருவருள் நோக்கம் செய்து தமது திரு விரலால் அவரைச் சுட்டிக்காட்டி ஆணவ சொரூபத்தை உணரச் செய்தார். அக்கணமே அச்சிவஞானக் கதிரவனது அருளொளி நோக்கால் மலரிருள் அகலப்பெற்ற சகலாகம பண்டிதர் உண்மை உணர்ந்து, மெய்கண்டதேவரது திருவடியில் வீழ்ந்திறைஞ்சித் தமக்குச் சிவஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று குறையிரந்தார். அவருக்கு உடனே திருவடி தீட்சை செய்து, சிவஞானபோபதச் செம்பொருள் தெரிவித்துத் தமது நாற்பத்தொன்பது மாணவர்களுள் முதல் மாணவராகும் பேற்றைப் நல்கினார். தமக்குச் செய்த இப்பெரு நன்மையை அருணந்தி சிவம், தாம் இயற்றிய "சிவஞான சித்தியார்" பாயிரத்துள்ளும் "இருபா இருபஃது" என்ற நூலினுள்ளும் அழகு பெற வியந்து துதித்துள்ளார்.

இவர் இயற்றிய நூல்கள் இரண்டு. ஒன்று சிவஞான சித்தியார். இந்நூல் மெய்கண்ட சாத்திரம். பதினான்கினுள்ளும் விரிந்த நூலாய், புறச்சமயம் மறுக்கும் பக்கமும், அகச்சமயம் மறுக்கும் சுபக்கமும் உடையதாய், தாயுமானர் முதலியோரால் பெரிதும் போற்றப்பெற்றதாய் சிவஞானபோதத்திற்குச் செய்யுள் வடிவினில் அமைந்த ஸ்ரீஷியமாய் உள்ள சிவஞானக் களஞ்சியமாகும். மற்றொன்று இருபாஇருஃபது என்பதாகும். இதுவும் அப்பதின்னான்கினுள் ஒன்று. இதில் இவர் தமது குருநாதரை வினவுமுகத்தால் சித்தாந்த உண்மையைத் தெளிவுற விளக்கியுள்ளார். இவரது சிவஞான சித்தி நெறியினை வழிவழியாகப் போற்றி வளர்த்து வருவதே தமிழகச் சைவ ஆதீனங்களாகும்.

சிலகாலங் கழித்து அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் தமது மாணவர்களுள் சிறந்தவரான மறைஞான சம்பந்தருக்கு ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசம் செய்தருளி, ஒரு புட்டாசிப் பூர நாளில் அகண்ட பரிபூரண சச்சிதமானந்த நிலையை எய்தினார். இவரது சமாதித் திருக்கோயில் திருத்துறையூரில் அமைந்துள்ளது. இவர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

# மறைஞானசம்பந்த சிவாச்சாரியர்

***

**திருவவதாரம்**

"அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்பளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு"

என விதந்தோதப் பெற்ற நடுநாட்டில் உள்ளது திருப்பெண்ணாகடம் என்னும் திருத்தலம். இங்கேதான் திருநாவுக்கரசு சுவாமிகளது திருத்தோளில் சூல, இடபக் குறிகளைப் பரமனால் சிவபூதம் பொறித்தருளியது.

இத்தலத்தில் புறச்சந்தான குரவர்களில் மூன்றாமவரான மறைஞானசம்பந்தர் சிவாச்சாரியார் மருதூரில் வைதீக சைவ அந்தணர் குலத்தில் பராசர முனிவரின் கோத்திரத்தில் அவதரித்தார். அருணந்தி சிவாச்சாரியார் இவருக்குக் கடந்தை (திருப்பெண்ணாகடம்) என்னும் ஊரில் குரு உபதேசம் செய்தார். மறைஞான சம்பந்தர் பற்றிய இத்தகைய அரிய செய்திகளை முதன்முதலில் உமாபதிசிவாச்சாரியார் தமது சிவப்பிரகாசம் என்னும் நூலில், இவருக்குக் குருவணக்கம் கூறுமிடத்துப் மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'பார்திகழ வளர்சாம வேத மல்கப்
**பராசரமா** முனிமரபு பயில ஞானச்
**சார்புதர வந்தருளி** எம்மை யாண்ட
சைவசிகாமணி மருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில் புடைசூழ் மதின்மீதே மதியங்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்த னெந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம்".

– சிவப்பிரகாசம், பாயிரம், 6 –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பாயிரப் பாடலில் உமாபதி சிவாச்சாரியார், மறை ஞானசம்பந்தரை மறைஞாசம்பந்தன் என்னும் எமது தந்தையுடைய திருவடிகளைத் தலை வணங்குவாம் என்று போற்றித் துதிப்பது, மறைஞானசம்பந்தரிடம் உமாபதிசிவாச்சாரியார் கொண்டிருந்த மதிப்பையும் குருபக்தியையும் புலப்படுத்துவதாகவுள்ளது. மேலும் இப்பாடலானது 'பார்திகழ" என்று தொடங்கும் பான்மையானது, மறைஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்தமையால் சித்தாந்த சைவநெறியும் இவ்வுலகும் விளக்கமுறும் என்பதைக் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது. சைவசித்தாந்த சந்தான குரவர்களுள் சைவசிகாமணி என்ற பெயர் இவருக்கு மட்டுமே அமைந்திருப்பது அவரின் பெருமையைப் புலப்படுத்துவதாகவுள்ளது.

சந்தானகுரவர் நால்வருள் ஒருவரான மறைஞானசம்பந்தர் நூல் எதுவும் இயற்றவில்லை என்பதே அறிஞர் பலரின் கருத்தாகும். உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய பேற்றிப்பஃறொடை, நெஞ்சுவிடுதூது ஆகிய இரண்டு நூல்களும் மறைஞானசம்பந்தரின் பெருமைகளைக் கூறுவதற்காக எழுந்தவை. மறைஞானசம்பந்தர் நூலேதும் இயற்றியிருந்தால் அவற்றில் அது இடம்பெற்றிருக்க வேண்டும். எனவே அவர் நூலேதும் இயற்றவில்லை என்று கொள்வதே பொருந்தும் என்று டி.பி.சித்தலிங்கையா போன்றோர் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவர் சதமணிக்கோவை என்னும் நூலை இயற்றியதாக மு.அருணாசலம் குறிப்பிடுகின்றார். இக்கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

சிதம்பரம் மறைஞானசம்பந்த நாயனார் அருளிச் செய்த "சைவ சமயநெறி" எனும் நூல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரின் புத்துரையுடன் வெளிவந்துள்ளது. இச் "சைவ சமயநெறி" எனும் நூலை மறைஞான சம்பந்த இயற்றியுள்ளார் எனக் கருதலாம்.

மறைஞானசம்பந்தர் தமது குருவை, 'மறைஞானசம்பந்தர்", "சம்பந்தநாதன், "சம்பந்தமாமுனி", "எம்பிரான்", "ஆண்டருளும் சம்பந்தமாமுனிவன்", 'மருதச் சம்பந்தமாமுனிவன்" என்னும் அடைமொழிகளால் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவம் பெற்ற உயிர்களுக்கு இறைவன் அருளுருக் கொண்டு வந்து வழிகாட்டுகின்றான் என்பதாகச் சிவஞானபோதத்தின் எட்டாம் சூத்திரம் குறிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் உமாபதிசிவாச்சாரியார் தம் ஆசிரியராகிய மறைஞானசம்பந்தரைச் சிவனெனவே கண்டுகொண்டு சிவனுடைய செயல்களை அவர்மீது ஏற்றிப் பாடுகின்றார். இதை உமாபதிசிவாச்சாரியாரின் போற்றிப்பஃறொடை, நெஞ்சுவிடுதூது ஆகிய நூல்களால் அறியலாம்.

## உமாபதிசிவாச்சராரியாருக்கு உபதேசம் செய்தல்

மறைஞான சம்பந்தரின் மதிப்பு மிக்க மாணவராக உமாபதி சிவாச்சாரியர் விளங்கினார். மறைஞான சம்பந்தரை உமாபதி சிவாச்சாரியர் குருவாகக் கொண்டமை பற்றி ஒரு வரலாற்றுக் கதை பின்வருமாறு கூறப்பட்டது.

தில்லையில் உள்ள மூவாயிரவர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் என்பவர் ஒரு நாள் கோயில் வழிபாட்டை முடித்துக்கொண்டு தில்லைவாழ் அந்தணருக்குரிய பலவிருதுகளுடன் ஒரு சிவிகையிலேறி தமது வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் அவ்வாறு போகும் வழியில் இதனைக் கண்ட மறைஞானசம்பந்தர் தமது சீடர்களை நோக்கிப் 'பட்டகட்டையில் பகல்குருடு ஏகுதல் பாரீர்" என்று சொன்னார். இவ்வார்த்தைகளைக் கேட்ட உமாபதி சிவாச்சாரியார் உடனே சிவிகையினின்று கீழே இறங்கி மறைஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவர் சொன்ன வாக்கியத்திற்குப் பொருள் வினவினார். ஆசிரியரும் அவ் வாக்கியத்தின் பொருளைப் பின்வருமாறு தெரிவித்தார். 'பட்டகட்டை என்பது சிவிகை: பகலில் குருடு என்றது பகலில் விருதாக விளக்கெடுத்துச் சென்றது. இது இதன் வெளிப்படைப் பொருள். இதன் உட்பொருள் பட்டகட்டை என்பது இன்பம் இல்லாத இவ்வுலகம். பகல் குருடு என்பது கல்விகற்றும் அதனை அறியாதிருத்தல் உடனே உமாபதிசிவாச்சாரியார் மறைஞானசம்பந்தரை குருவாக ஏற்று அவரின் மதிப்புமிக்க மாணவரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்

மறைஞானசம்பந்தர் அருணந்திசிவாச்சாரியாரின் மாணவரும் உமாபதி சிவாச்சாரியாரின் குருவும் ஆவார். உமாபதி சிவாச்சாரியார் கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி.14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வாழந்துவந்ததாகக் கொள்ளப்படுகின்றது. இதனால் மறைஞானசம்பந்தரையும் இக்காலத்துள் வாழ்ந்துள்ளவராகக் கொள்ளலாம்.

## திருவடி நிழலை அடைதல்

சிதம்பரத்தில் நடராஜ மூர்த்தியை வழிபட்டு பூசைசெய்துகொண்டு ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்து வந்த மறைஞானசம்பந்தர், சிதம்பரத்திற்கு மேற்குப் பக்கமாகவுள்ள திருக்காளஞ்சேரியில் தங்கி வாழ்ந்து வரும் வேளையில் ஓர் ஆவணி மாதத்து உத்தர நட்சத்திரநாளில் சிவனின் திருவடி நிழலையடைந்தார்.

## சீடரின் பக்குவத்தை காண்டல்

ஒருநாள் தம் சீடருடைய பக்குவத்தை அறிய மறைஞான சம்பந்த சிவம் செங்குந்தர் தெருவழியாகச் சென்று தம் பசியைத் தணித்தற் பொருட்டு பாவில் செலுத்திய கூழினை வார்க்கும்படி கேட்டு ஏற்று. "சிவப்பிரசாதம், சிவப்பிரசாதம் " என்று சொல்லி உண்டார். அவர் புறங்கையால் ஒழுகிய மிச்சத்தை உமாபதிசிவம் ஏற்று, "குருப்பிரசாதம், குருப்பிரசாதம்" என்று சொல்லிப் பருகினார். உடனே இதனைக் கண்ட ஆசிரியர் இவர் பக்குவ நிலையை உணர்ந்து, இவருக்குச் சிவஞானபோதப் பொருளை உபதேசித்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229600



# உமாபதி சிவாச்சாரியர்

***

## திருவவதாரம்

சந்தான ஆசிரியப் பெருந்தகையருள் நான்காமவராக உள்ளவர் உமாபதி சிவாச்சாரியார் ஆவர். இவர் "தில்லை வாழ் அந்தனர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று நம்பி ஆரூரால் சிறப்பித்துக் கூறப்பெற்ற அருட்புகழ் வாய்ந்த தில்லை மூவாயிரவருள் ஒருவர் ஆவார். "உமாபதியார்" என்பது இவருடைய இயற்பெயர் என்று கொள்வது மரபு. வரலாற்றாசிரியரும்.

"சொன்ன சிவாகமம் விளங்கத் திருவுடையந்
தணர் மரபில் ஒருவர் தோன்றிப்
பன்னரிய அபிதானம் உமாபதியார்
என எவரும் பரவப் பெற்றார்"

என்றுரைத்துள்ளனர்.இவர் தில்லைநகரில் வாழ்ந்த அந்தணர் குலத்தில் அவதரித்தார். இவருடைய பெற்றோர் பெயர்கள் யார் என்பது தெளிவில்லை.

10466 C.C

பொன்னம்பலத்தில் ஆடும் புனிதனைப் போற்றும் திறம் இயல்பாகவே வாய்க்கப்பெற்றவர். ஆதலின் இவர்தம் வாழ்வில் பேரருள் விளங்கிற்று. சித்தாந்த சைவச் செந்நெறிக்குப் பெரு விளக்கம் இவ்வருட் பெருந்தகையாராற் கிடைக்க வேண்டும் என்பது திருவருட் குறிப்பாதலின் இவருடைய வாழ்வின் கண் பல அற்புத விளக்கங்களை நாம் காண்கின்றோம். வழக்கம்போல் நடராசப் பெருமானை வழிபாடு செய்து மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் இச்செம்மலார். கைவிளக்கு ஏந்தி ஏவலர் முன்பு சென்ற வண்ணம் இருந்தனர். திருவீதியில் மூன்றாம் சந்தானகுரவராகிய மறைஞானசம்பந்தர் இக்காட்சியைக் கண்டார். உமாபதியாருக்கு உண்மை உபதேசம் புரியும் பக்குவ நிலை வந்துற்றதை உணர்ந்த மறைஞானசம்பந்தர் உமாபதியார் செவிகளிற் பொருந்தும் வண்ணம் சில மொழிகளைச் செப்பியருளினார்.

பருவகாலத்தே பெய்த மழையால் வித்துக்கள் முளைவிடுதல் போல், மெஞ்ஞான நாட்டம் கொண்டிருந்த உமாபதியார் செவிகளில்



KOHA JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்த சொற்கள் வீழ்ந்து விழுந்தன. 'பட்டகட்டையில் ஏறி பகற் குருடு போவதைப் பாருங்கள்" என்ற அச்சொற்கள் உமாபதியார் செவிகளில் பாய்ந்தன. உள்ளத்தே ஞானஒளியைத் தூண்டிவிட்ட இச்சொற்களைத் திருவாய் மலாந்த மறைஞான சம்பந்தருடைய தோற்றம் உமாபதியார் கண்களில் விளைந்தது. உடன் சிவிகையினின்றும் இங்கினார். தம்மை "வலிய ஆட்கொள்ள வந்த ஞானவள்ளல் இவரே" என்ற உணர்வு மீதுரப் பெற்று, மறைஞான சம்பந்தரின் மலரடிகளில் வீழ்ந்து வணங்கினார். அனைவரும் வியந்து நின்றனர். தம் மாணாக்கராக உமாபதியை ஏற்கும் திருக்குறிப்புடன் மறைஞானசம்பந்தரும் இருந்தனர். எல்லாம் வல்ல இறைவன் திருவருள், இவ்வாறு மறைஞான சம்பந்தர் வழியே உமாபதியாருடைய உள்ளத்தில் தெளிவு பிறந்திடத்தகு துணையாயிற்று.

"தாங்கள் கூறிய சொற்களின் பொருளை உரைத்தருள வேண்டும்" என்று கூறிப்பணிந்தார். உமாபதியார் மறைஞானசம்பந்தரிடம் உண்மை உபதேசம் ஏற்றார். பல்லக்கைப் 'பட்டகட்டை" என்றும், கைவிளக்கு முதலிய பரிவாரத்தால் விளைந்த ஆடம்பரத்தைப் 'பகற் குருடு" என்றும் மறைஞானசம்பந்தர் வெளிப்படையாக பொருள் கொள்ளுமாறு கூறினரேனும், 'பசை இல்லாத இவ்வுலகத்தினையே அவர் பட்டகட்டை" எனக் குறித்தார். என்பதும், வேதம் ஆகமம் முதலிய கலையறிவுகள் எல்லாம் நிரம்பப் பெற்றும் ஞானம் பெறாதவர் என்பதனையே பகற் குருடு எனக் குறித்தார் என்பதும் உமாபதியார் கொண்ட ஆழ்பொருளாயிருத்தல் வேண்டும். அவருடைய அகவிழிகளைத் திறந்து மெய்ஞ்ஞானம் பெறவேண்டும் என்ற தாகத்தை உண்டாக்க குருநாதனுடைய இந்த மொழிகள் துணைபுரிந்தன என்று கூறலாம்.

## ஞானமலர்ச்சி

இயல்பாகவே உள்ளம் தெளிந்து ஞானநாட்டம் ஏற்பட்டிருந்த வேளையில், தம் குருநாதருடைய மொழிகள் உமாபதியார் உள்ளத்தில் பெரிய மாற்றத்தை ஆக்கிவிட்டன. தம்முடைய பகட்டான வாழ்வும் பிறவும் அகவாழ்விற்கு அணுவளவும் துணைபுரிய மாட்டா" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உண்மையை சில சொற்களிலே மறைஞானசம்பந்தர் விளக்கி விட்ட பாங்கினை உணர்ந்து தெளிந்தார் இவ்வருளாளர். "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற மொழி, பட்டினத்தாரை உருவாக்கிய வரலாறு இங்கே நினைவு கூரத்தக்கது. "சும்மா இரு சொல்லற" என்ற மொழியின் மாபொருளை அறிய முயன்ற அருணகிரியாரின் அனுபூதி வாக்கும் இங்கே உணர்ந்து ஒப்புநோக்கத் தக்கது.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## பரிகலசேடம் உண்டது.

உமாபதியாருக்கு ஞானஉபதேசம் புரிந்த மறைஞான சம்பந்தர் அவரின் பக்குவ நிலையை மீண்டும் அறிவதற்காகவும், உலகம் அவருடைய உயர் நிலையை உணர்வதற்காகவும் ஒரு நிகழ்ச்சியை நிகழ்த்திடத் திருவுள்ளம் கொண்டார். தில்லையில் ஆடை நெய்வோர் வாழும் திருவீதிக்குச் சென்றார். உமாபதியாரும் தம் ஆசிரியர் பின்னேயே பரிவுடன் நடந்தார். அத்தெருவில், ஆடைநெய்வோர் நூலின் பாவின் கஞ்சியேற்றும் பொழுது வழிந்தொழுகும் கூழை மறைஞானசம்பந்தர் தம் திருக்கைகளில் ஏற்று உண்டார். அப்பெருந்தகையார் அவ்வாறு ஏற்று உண்ணும் பொழுது அவரது திருக்கைகளினின்றும் கூழ் ஒழுகியது. உமாபதியார் அதனைத் தம் கைகளில் ஏற்று ஆசிரியருடைய 'பரிகலசேடமாகக்' கருதி அதனை உண்டார். மறைஞானசம்பந்தர் தம் மாணக்கருடைய மனப் பண்பாட்டினை உணர்ந்து மகிழ்ந்தார். குலம், சாதி, முதலிய உலகியல் புன்மைகளுக்கு அப்பாற்பட்ட அன்பின் திறத்தை தம் மாணாக்கர் உடையவர் என்ற நிலையினை தம் திருவுள்ளத்தில் தேர்ந்தார்.

"சாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை" என்று மணிவாசகர் சாதியின் புன்மையை சுழிக்கொடுமையை உணர்த்தியுள்ளமை அறிவுலகம் அறிந்ததே ஆகும். உமாபதியார் தம் நல்லாசிரியர் பரிகலச் சேடத்தை உண்டின்புற்றமை மாணாக்கருக்குப் பெருநெறி விளக்கிக் காட்டுவதாகும். பிற்காலத்திலே குமரகுருபரர் அடிகள் தம் நல்லாசிரியராகிய தருமையாதீன நான்காம் குருமூர்த்திகள் ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிலாமணி தேசிக சுவாமிகள் மீது பாடிய பண்டார மும்மணிக் கோவை என்ற தோத்திர நூலில் தம் ஞான ஆசிரியருடைய பரிகலசேடம் உண்ணும் பொருட்டு விழைவதும், தம் ஆசிரியர் அடித்தொண்டர்களின் பரிகலம் உண்ணும் வரம் படைத்த நரியாகத் தாம் பிறக்க வேண்டும் என்று வேண்டுவதும் இங்கு நினைக்கத் தக்கன.

"திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரலிகல மாந்தியப் பவக்கடல் உழக்கும்
வரனுடை ஞமலி யாகினின்
அருளையும் அயரா தவதரிப்பதுவே"

என வரும் சீரிய கவிதைப் பகுதி இந்நிலையில் ஒப்புநோக்கி இன்புறத்தக்கதாகும்.

அருணந்தி சிவாச்சாரியாரிடம் தாம் பெற்ற உபதேசத்தினை உமாபதியாருக்கு உரைத்தருளினார். மறைஞான சம்பந்தர் சாத்திர நூல்கள் பலவற்றையும் உணர்த்தினார். உமாபதியார் இங்ஙனம் பேரருட் செல்வம் பெற்று ஞான ஞாயிறாக விளங்கி வரலானார்.

## கொற்றவன் குடிவாழ்வு

"அந்தணர்க்குரிய குல ஒழுக்கத்தினை உமாபதியார் தப்பினார்" என்று தில்லைவாழ் அந்தணர்கள் தவறாக உணர்ந்தனர். அவரைத் தம்மரபினின்றும் விலக்கிவிட்டனர். ஆனாந்தமா நடராசப் பெருமாளைத் தீண்டி வழிபடும் பேற்றினை இவ்வாறு பிரிந்த உமாபதியார், தில்லைக்கு அருகில் சோழ மன்னன் கொடுத்த ஒரு சிற்றூரில் திருமடம் ஒன்றில் தங்கி தவம் புரிந்து, பக்குவமுள்ள மாணாக்கர்கட்குச் சிவஞான நூல்களை உபதேசித்து வீற்றிருந்து வரலாயினர். கொற்றவன் (அரசன்) வழங்கிய ஊர் ஆதலின் அந்த சிற்றூர் 'கொற்றவன் குடி" என்றும், அங்கேயே வாழ்ந்து வந்த காரணத்தால் உமாபதியார் 'கொற்றவன்கு உமாபதிசிவாச்சாரியார்" என்றும் வழங்கப் பெற்றமை இங்கு கருதத் தக்கது. இந்நாட்களில், உமாபதியார் திருவருட் தொண்டின் பெருமையை உலகம் உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கேற்ற சில நிகழ்ச்சிகள் கூத்தரசன் திருவிளையாடல்களாக நிகழ்ந்தன.

## தில்லைப் பெருமான் திருவிளையாடல்

மூவாயிரம் அந்தணர்களில் ஒருவர் ஒவ்வொரு நாளும் நடராசப் பெருமானுக்கு பூசை செய்தல் மரபு. இம்மரபின் படி உமாபதியாருக்கு உரிய நாளும் வந்தது. உமாபதியாரும் உள்எக்களிப்புடன், பெருமானை வழிபட்டு இன்புறும் பேரார்வத்துடன், பொன்னம்பலத்துட் புகுந்தார். மற்ற அந்தணர்களோ, குல ஒழுக்கம் தவறிய பூசனை புரியலாகாது என்று தடுத்துவிட்டனர். அளவிறந்த மெய்யுணர்வும், ஆரா அன்பும் படைத்த உமாபதியாருக்கு அடைந்த உளத் துன்பம் உரையும் அடங்குவதன்று தாம் வழிவழியாக இயற்றிவரும் பொன்னம்பலக் கூத்தன் புனித வழிபாடு தவறிவிட்டதே என்று எண்ணி வருந்தினார். ஆனால் இறைவன் அருள் இவ்வாறு ஆயின் மறுத்திடவோ, மறுகிடவோ நான் யார்?" என்று மனந்தேறிக் கொற்றவன் குடிக்கு மீண்டனர். மனத்தாலேயே அன்று வழிபாட்டை இயற்றி முடித்தார். வழக்கம் போல் திருக்கோயிலில் மற்றைய அந்தணர் பூசனைக்குச் சென்றனர். திருக்கிட்டனர். பூசைப் பெட்டகத்துடன் பெருமானைக் காணவில்லை. அந்தணர்கள் இச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் அச்சமும் ஒருங்கு எய்தினார்கள். 'யார் செய்த குற்றமோ" இது என்று நடுங்கினார்கள். 'பெருமானே! எல்லையில்லாக் காலந்தொட்டு இங்கு வீற்றிருக்கும் நீ, யார்க்கு அருள் புரியும் பொருட்டு, யாண்டுச் சென்றாய்? உன் திருவடியே துணையாகக் கொண்டு மாயைக் கடல் கடந்த தக்கவர்பால் நீ சென்றாயோ? யோக நெறி நிற்போர் மருங்குப் படர்ந்தாயோ? கிரியை முதலிய நெறி நிற்போர் மாட்டுப் புகுந்தாயோ? எங்குச் சென்றாய்? என்று அழுது உளம்கனிந்து உருகினார்கள் தில்லை மூவாயிரவர் ஆகிய திருக்கூட்டத்தார். இவர்களது உருக்கத்தினை வரலாற்றாசிரியர் இவ்வாறு உரைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாட்டுணையே புணையாகப் பற்றி நின்று
தனிமாயைக் கடல் நீந்தும் தக்கோர் பாலோ
கோட்டமிலா மனத்தோடும் குளத்தில் உன்னைக்
குறித்துமதி அமிழ்துண்ணும் குணத்தர் பாலோ
ஈட்டமரு மலராதி கொண்டன் பாக
எழிலுறுபூ சனைபுரியும் இயல்போர் பாலோ
நாட்டமொரு மூன்றுடையாய் எங்கணுற்றாய்
நடமிடுவாய் என்றழுது நைவா ரானார்"

இங்ஙனம் உருகிய அன்பர் யாரும் கேட்ப இறைவன் அருள் வாக்கு ஒன்று எழுந்தது. "இன்று பூசனை முறை உடைய உமாபதி நம் அன்பன். அவன்பாற் சென்று அவனுடைய பூசனையை ஏற்று நிற்கின்றோம்." இந்த அருள்வாக்கு அந்தணர் சிந்தையை மூடிநின்ற அறியாமையை நீக்கியது: உமாபதியார் திருமடத்திற்கு விரைந்து, பணிந்து மீண்டும் வந்து பூசனை தில்லைநாயகன் திருவருட் குறிப்பையேற்றுப் பொன்னம்பலத்திற்குப் போந்து முறைப்படி வழிபாடு செய்து மகிழ்ந்தார். ஞானநெறி, நிற்கும் நல்லோர்க்குக் குலம் முதலியன ஒரு மாசும் கற்பிக்க இயலாது என்ற பேருண்மையை உலகம் உணர்ந்து உய்தி பெறுவதற்காக இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல் இது. அன்றியும், பூசலார் நாயனார் போன்று 'மாதை வழிபாடு என்றும் மன வழிபாட்டினை உமாபதியார் மேற்கொண்டனர். என்பது, நெஞ்சம் கோயிலாகும். நேயம் மிகுந்தவர் என்ற உண்மையை விளக்குவதாக அமைகின்றது.

## பெற்றான் சாம்பானார் திருத்தொண்டு

தில்லைத் திருக்கோயில் அன்றாட வழிபாட்டிற்குத் தத்தம் உடலாலும் உள்ளத்தாலும் திருத்தொண்டு செய்து வருவோர் பலர் உண்டு. புலர்வதன் முன் திருவலகுத் தொண்டு செய்வோர் பலர். திருநந்தனவனம் எனப்படும் பூந்தோட்டத்துட்புக்குத் "திருப்பள்ளித் தாமம்" எனப்படும் பூமாலைத் தொண்டு செய்வோர் பலர். இம்முறையில், திருவமுது ஆக்கப் பெறும் மடைப்பள்ளிக்கு நாள்தோறும் விறகு கொண்டுவரும் திருத்தொண்டை அந்நாட்களில் செய்து வந்தார் ஒரு அன்பர், தாம்பிறந்த குடியால் தாழ்ந்தவரேனும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தால் அவ்வன்பர் இவ்வாறு அருந்தொண்டு புரிந்து சிறந்து விளக்கி வந்தார். "பெற்றான் சாம்பானார்" என்பது அவரது திருப்பெயர். திருநாளைப் போவார் பிறந்த குடி அவரது குடி. அன்பில், திருநாளைப் போவார் அனைய வராகவே அவர் இருந்தார். நடராசப் பிரானுக்குத் திருவமுது ஆக்கும் அருஞ்செயற்கு விறது கொணர்வதால், அவருடைய உள்ளம் தமக்கு வீடுபேறு ஆகிய முத்தி உறுதியாக உண்டு என்று நம்பியது. தம் திருத்தொண்டினை முட்டுப் பாடின்றிச் செய்து வந்தார். கூத்தப் பெருமான் அவ்வடியவர் கருத்தறிந்து முடிக்கும் கருணையால் அவருடைய கனவில் ஒருநாள் இரவில் தோன்றினார்.

## சிவபெருமான் அருளிய சீட்டுக்கவி

ஓர் ஓலையில் அழகிய வெண்பா ஒன்றை எழுதி அவர் கையில் தந்தருளிய இறைவன், அதனை உமாபதி சிவாசாரியரிடம் தந்து பயன் பெறும்படிக் கூறி மறைந்தார். விழித்தெழுந்த பெற்றான் சாம்பானார் கைகளில் ஓர் ஓலை இருந்தது; அதில் அழகிய வெண்பா ஒன்று வரையப்பட்டிருந்தது.

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டிப் - படியின் மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

## கொற்றவன் குடியில் சாம்பானார்

பெற்றான் சம்பானார் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எளிய தமக்கும் தில்லைப் பெருமான் திருவருள் புரிந்து திருக்காட்சி வழங்கியமையை எண்ணி எண்ணி உருகினார். அந்த ஓலையுடன் கொற்றவன் குடித் திருமடத்திற்குச் சென்றார். அவரது வருகையை உமாபதியார்க்கு உரைப்பார் யாரும் இல்லை. அவரும் அதனால் மனம் அயர்ந்து விடாமல் திருக்கோயிலுக்குச் செய்து வந்த விறகுத் திருப்பணியை உமாபதியார் திருமடத்திற்குச் செய்து வரலானார். அப்போதும் அத் தொண்டரது மெய்த்தொண்டின் மேன்மையை யாரும் அறிய வாய்ப்பில்லாது போயிற்று. ஒருநாள் கடுமழை காரணமாகப் பெற்றான் சாம்பானார் திருத்தொண்டிற் பலநாழிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதப்பட்டது. அன்றைய திருவமுது காலந்தாழ்ந்தமைக்குரிய காரணத்தைக் கேட்ட உமாபதியார்க்குக் கடுமழையால் விறகுப்பணியில் நேரம் தாழ்ந்தவற்றை அடியார்கள் உரைத்தனர். இவ்வாறு அன்புள்ளம் கொண்ட ஓர் இனியவரின் தொண்டு பற்றி அறிந்த சிவாசாரியார். மறுமுறை வருங்கால் தமக்குக் கூறுக என்று பணித்தனர்.

## சாம்பானார் முத்தி சார்தல்

மறுநாள் முன்னினும் ஒருமடங்கு பெரிதாக விறகு கொணர்ந்தார் பெற்றான் சாம்பானார். உமாபதியார் பணித்தபடி அவரது வருகையை ஆசிரியர்க்கு அறிவித்தனர் ஞான ஆசிரியார் பெற்றான் சாம்பானாரைச் சந்தித்தார். அவரது திருத்தொண்டின் வரலாறு பற்றி அன்புடன் உசாவினார். சாம்பானார் உரிய காலம் வந்ததென உவந்து தொழுது, தம் தொண்டின் வரலாறு பற்றி உரைத்து, இறைவன் அளித்த சீட்டு ஓலையினை உமாபதியாரிடம் தந்து பணித்தனர். உமாபதியார் கூத்தப் பிரான் தாமே முத்திவழங்கியருளாமல் தமக்குச் சீட்டுக் கவி எழுதிய பெருங்கருணைக்கு உருகினார், "சத்தியே நிர்வாணதை" என்னும். தீட்சையைப் பெற்றான் சாம்பானாருக்குச் செய்தார்; அப்போதே முத்தி எய்தினார் சம்பானார்.

## முள்ளிச் செடிக்கும் முத்தி

பெற்றான் சாம்பானாருடைய துணைவியார் முதலிய சுற்றத்தோர் அறியாமையினால், ஒருநாள் விறகு கொடாமைக்காகச் சினந்து சாம்பானாரைக் கொளுத்தி விட்டனர் என்று முடிவு செய்தனர். அக்காலை அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசன் உமாபதியார் பெருமையை அறிவானே ஆயினும், உலகத்தார் ஐயுறாதபடி வேறொருவர்க்கு அனைவரும் அறிய முத்திகொடுத்தருள வேண்டும் என்று உமாபதியாரை வேண்டினான். உமாபதியாரும் உள்ளம் கனிந்து இசைந்தனர். தம் மாணாக்கர் யாருக்கும் அவ்வாறு முத்தியளித்தற்கேற்ற பக்குவ நிலை இல்லாதிருப்பதை அறிந்தார். தாம் செய்யும் சிவபூசையின் போது, திருமஞ்சன நீரால் நாள்தோறும் நனைந்து கோமுகி அருகில் முளைத்திருந்த முள்ளிச் செடி ஒன்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினார். அந்த அஃறிணை உயிர் தம்முடைய கருணைக்கேற்ற தகுதி உடையதாக நலம் கனிந்திருத்தலை நாடிற்று இந்நல்லோர் உள்ளம், "சக்தியோ நீர்வாணதை" என்ற தீட்சையினைச் செய்தருளினார். உடன் அச்செடி ஒளிமயமாக மாறி விண்ணின் வழியே உயர்ந்து சென்ற வியத்தகு காட்சியை அரசனும் மற்றையோரும் கண்டனர். எல்லோரும் காண ஆற்றிவற்ற அஃறினை உயிர்க்கே உமாபதியார் தீட்சை புரிந்து விட்டுலகு எய்துவித்த திறத்தை உலகு உணர்ந்துகளித்தது. சித்தாந்த சைவச் செந்நெறி மாண்பும், உமாபதியார்க்குள்ள அருணலமும் எங்கும் பரவின.

## கொடி ஏற்றிய திறம்

தில்லைத் திருக்கோயிலில், பெருவிழாக்காலம் அப்போது வந்தது. கொடி உயர்த்தி விழாவைத் தொடங்குவது ஆகம வழக்கு. உமாபதி சிவாசாரியார் கொடி ஏற்றலாகாது என்று ஆராயாத அந்தணர் தடுத்து விட்டனர். பின்னர்த் தாமே அப்பணி தலைப்பட்டபோது கொடி மேலே ஏறாது நின்று விட்டது. இறைவனுடைய அருள் வாக்கு. "உமாபதி வந்தாலே இரண்டாம் முறையும் உமாபதியாரிடத்தே பிழையுறவுணர்ந்த நாணம்மிக, அவர்பாற் சென்று வேண்டிக் கொண்டனர். "இதுவும் இறைவன் இன்னருளே" என்று கருதித் திருக்கோயில் புகுந்த உமாபதியார் "கொடிக்கவி என்னும் சிறுநூலைப் பாடியருளினர்; யாரும் ஏற்ற வேண்டாமலே தானாகக் கொடி ஏறி நின்ற வியத்தகு நிகழ்ச்சியை உமாபதியார் திருவாய் மலர்ந்த கொடிக்கவிப் பாட்டுக்கள் விளைத்து விட்டன. உயர்ந்த சான்றோர் திருவுள்ளத்தெழுந்த தீந்தமிழ்க் கவிதை எல்லாம் செய்யவல்லது என்ற உண்மையை, இச்சந்தான குரவருடைய கொடிக்கவி நிகழ்ச்சியின் வாயிலாக உலகம் உணர்ந்து தெளிந்தது. மறைக்காட்டில் வேதங்களால் அடைபட்டுக் கிடந்த திருக்கோயிற் கதவுகள் சமயகுரவர் இருவருடைய தெய்வ தமிழ்க் கவிதைகளால் திறக்கவும் மூடவும் பெற்று வழிவிட்ட வரலாறு இவ்விடத்தே நிகைக்கத் தகுந்ததாகும்.

* குஞ்சுதன் (பாடபேதமோ) சமாஜப்பதிப்பில் "குஞ்சியின்" என்று உளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டகத்தோடு வந்த பெருமான்

"திருக்கோயில்" என்ற திருப்பெயருக்குரியதாய், சைவ உலகின் உயிர்த்தலமாக விளங்குவது தில்லை, இங்குக் கற்பனை கடந்த சோதி வடிவினனாகிய கூத்தப்பெருமான், கருணையே திருவுருவமாகக் கொண்டு திருச்சிற்றம்பலத்துள் பொற்புற நடஞ் செய்து விளங்குகின்றான். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்து விளங்குவது, "மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே; தீர்த்தம் என்பது இங்குள்ள சிவகங்கையே; ஏத்துதற்கரிய தலம் புலியூர் எனப் பெறும் சிதம்பரமே" என்று குமரகுருபர அடிகள் அகங்குளிர்ச்சு பாடுவர். இத்திருத்தலத்திற்குரிய பெருமைகளை யெல்லாம் திரட்டிக் "கோயிற்புராணம்" என்று இயற்றியருளினார் உமாபதி சிவாசாரியார். இந்நூல் பொன்னம்பலக் கூத்தனின், சேவடிக் கீழேயே அரங்கேற்றம் பெறுதல் வேண்டும் என்று கருதினர். இப்புராணச் சுவடியை ஏந்தி உமாபதியார், பொன்னம்பலம் புகுந்தபோது, அந்தணர் அழுக்காறு பின்னும் பேருருகுக் கொண்டது. தடுத்துவிட்டனர். முன்னே பெற்ற அநுபவங்கள் அவர்களுடைய் சிற்றறிவன் எல்லைக்குப் போதுமானவையாக இல்லாமையே இதற்குக் காரணம் என்று கூறலாம். உள்ளம் வருந்தித் திரும்பிய உமாபதியார் தம் பெட்டகத்துள் அச்சுவடியை வைத்துப் பூசித்து மனம் தேறினர். வழக்கம் போல் பொன்னம்பலத்துப் பூசை செய்யப்புக்கபோது பூசைப் பெட்டகத்துடன் புனிதனைக காணாது திகைத்த அந்தணர்க்கு அருள் வாக்கின்வழி அண்ணல் உணர்த்தினான். நடுநடுங்கிய மறையோர் உமாபதியார் திருமடம் சென்று கோயிற் புராணச் சுவடியுடன் உமாபதி சிவாசாரியாரையும் சிவிகையில் ஏற்றுவித்து, உரிய பல திருக்கோயிற் சிறப்புக்களுடன் பொன்னம்பலத்திற்கு அழைத்து வந்தனர். பொன்னம்பலத்தே பெருமான் முன்புபோற் காட்சிவழங்கினான். உமாபதி சிவாசாரியார் கோயிற் புராண அரங்கேற்றமும் நிகழ்ந்தது. "உண்மை அன்புடையார் உறவையே இறைவன் விரும்பி எழுந்தருள்வான்" என்ற மெய்மையை வையகம் அறிந்திட இந்த வரலாற்று நிகழ்ச்சி ஒரு நல்ல வாய்ப்பாயிற்று.

இவ்வாறு பல அற்புதங்கள் நிகழ்ந்தன; உமாபதி சிவாசாரியாரும் அருணமச்சிவாயர் முதலிய மாணாக்கர் பலர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான உபதேசம் செய்து கொண்டும் பல உயர்ந்த பனுவல்களை அருளிச் செய்து கொண்டும் வாழ்ந்தனர். சிவப்பிரகாசம் பனுவல்கள். "பௌட்கரம்" என்ற ஆகமத் துணை நூலிற்கு ஓர் அழகிய விருத்தியுரையை உமாபதியார் வரைந்துள்ளனர். திருத்தொண்டர் புராணசாரம் என்ற நூல் பெரிய புராணத்தின் பிழிவாக நின்று கற்போர் சிந்தனைக்குக்களிப் பூட்டுகின்றது.

## இறையடி நிழல்

இவர் இறைவன் திருவடி நிழல் எய்தியமை ஒரு சித்திரைத் திங்களில் அந்த விண்மீன் கூடிய நாளில் என்றுரைப்பது மரபு இவர் வாழ்ந்த காலம் கி.பி 14 நூற்றாண்டாகும்.

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்த சாத்திரங்கள் தோன்றிய தத்துவப் பின்னணி

தமிழ் நாட்டில் கிபி 8ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சைவநெறியோடு வைதிக நெறிகளும் வளர்ந்து வந்தன. தேவார முதலிகள் அருளிய திருப்பதிக வழக்கோடு வடமொழி வேதவழக்கும், சிவாகம வழக்கும் சிறப்புற்று விளங்கின. கி.பி 8ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வடமொழி வேதவழக்கு மேலோங்கியது. இக்காலத்தில் வேதாந்த தத்துவம் செல்வாக்குப் பெற்று வளர்ச்சிகண்டது. உபநிடதம் வேதாந்த சூத்திரம் (பிரம்ம சூத்திரம்) என்பவற்றிற்கு வேதாந்த பரமான உரைகள் தோற்றம் பெறலாயின. வேதாந்த சூத்திரம் எனப்படும் பிரம்மசூத்திரத்திற்கு ஆதிசங்கர (கி.பி 788- 870) வேதாந்த பரமாக உரை எழுதினர். இதுவே சங்கரபாடியமாக அமைந்தது. இராமானுஜர் (கி.பி கி.பி 1017-1137) வேதாந்த சூத்திரத்திற்கு எழுதிய வேதாந்த உரை ஸ்ரீ பாஷியமாக விளங்கியது. மத்துவர் (கி.பி 1197) வேதாந்த சூத்திரத்திற்கு (பிரம்ம சூந்திரத்திற்கு) எழுதிய வேதாந்த உரை மத்துவ பாடியமாக மலர்ந்தது. தமிழ் நாட்டில் இத்தகைய வேதாந்த உரைகள் தோன்றி வேதாந்த தத்துவஞானத்தைப் பரப்புரை செய்து கொண்டிருந்த ஒரு வேதாந்த தத்துவ கால சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில் சைவசித்தாந்த தத்துவத் தர்க்க ரீதியாக வரையறுத்து நிலைநிறுத்தி வளர்த்தெடுக்க வேண்டிய உயர் நோக்கில் மெய்கண்டதேவர் (கி.பி.13) முதலானோரால் சைவசித்தாந்த சாத்திரங்கள் உருவாக்கம் பெற்றவெனலாம்.

## சித்தாந்த சாத்திரங்கள்

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மைகளையும், கோட்பாடுகளையும் முறைப்படுத்தி உணர்த்தும் பதினான்கு செந்தமிழ் நூல்கள் சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும். இவையே தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரம் என அழைக்கப்படும். சாசனஞ் செய்வது சாத்திரம் ஆகும். சாசனம் என்னும் சொல்லுக்கு ஒழுங்கு, ஆணை எனப்பிற பெயர்களும் உள்ளன. இவ்வகையில் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருளுண்மைகளை ஒழுங்கு படக்கூறுதல் பற்றியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229600



சற்குரு வடிவில் தோன்றி இறைவன் தன் ஆணையை இந்நூல்கள் வடிவில் உணர்த்தல் பற்றியும் இவை "சாத்திரம்" எனக் கூறப்படும்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் முதன் முதலில் மதுரை நாயகம்பிள்ளை என்பவர் 1886ம் ஆண்டில் அச்சிட்டுதவினார். இவர் தமது சிவஞான போத மூலப் பதிப்பின் முகவுரையில் நூல்வரலாறு, நூற்சிறப்பு, நூற்கருத்து, நூற்பாடற்றொகை, சூரணித்தொகை என்பவற்றைக் கூறி, அதன் பின்னர் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் உணர்த்தும் பின்வரும் வெண்பாவைத் தருகின்றார்.

"உந்திகளிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்ப முற்று"

இவ் வெண்பாமூலம் அறிய வரும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் பின்வருமாறு: திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது. உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.

இதன்படி சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு என வழங்கும், வழக்கம் மதுரை நாயகம் பிள்ளை என்பவர் காலத்தில் தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருத இடமுண்டு.

காஞ்சி நாகலிங்கமுனிவர் என்பவர் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் முழுவதையும் உரையுடன் ஒரே தொகையாக 1897ஆம் ஆண்டில் பதிப்பித்தார். இவரே முதன் முதல் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிற்கும் "மெய்கண்ட சாத்திரங்கள்" என்ற பெயர் கொடுத்தவர் ஆவார். மதுரை நாயகம் பிள்ளை "சித்தாந்த சாத்திரங்கள்" என்று மட்டுமே குறிப்பிடுகின்றார்.

"சித்தாந்த சாத்திரங்கள்" "மெய்கண்ட சாத்திரங்கள்" என்று அழைக்கப்படக் காரணம் பெரும்பான்மையான சாத்திர நூல்கள் மெய்கண்ட தேவர் வழிவந்த சந்தான ஆசிரியர்களால் (ஞானபரம்பரையினர்) இயற்றப்பட்டவை என்பதனாலாகும்.

மனித வாழ்வியலின் உண்மைகளை உள்ளவாறு கண்டுணர்ந்து வகுத்து விளக்குகின்ற நூல்களாதலால் இவற்றிற்கு மெய்கண்ட நூல்கள் எனும் பெயர் பொருந்துவதாயிற்று என்றும் அறிஞர் கூறுவர்.

பதினான்கு தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்களில் இடம்பெறும் சைவசித்தாந்த நிலை பின்வருமாறு அமைந்துள்ளன.

## திருவுந்தியார்

திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் அருளிய திருவுந்தியார், சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள்ளும் முதலாவதாக வைத்து எண்ணப்படும் சிறப்பினை உடையது. திருவுந்தியாரும், அதனை அடியொற்றி எழுந்த திருக்களிற்றுப்படியாரும் மெய்கண்டதேவரின் சிவஞான போதத்திற்குக் காலத்தால் முற்பட்டவை. எனவே அவை இரண்டையும் முதலில் கூறி. அதன் பின்னரே சித்தாந்த முதல் நூலாகிய சிவஞான போதத்தைக் கூறுவது என்ற மரபு காணப்படுகின்றது.

திருவுந்தியார், நாற்பத்தைந்து கலித் தாழிசைகளைக் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு தாழிசையிலும் இரண்டாவது, மூன்றாவது அடிகள் "உந்தீபற" என்ற சொற்களைக் கொண்டு முடிவுறுகின்றன.

திருவாசகத்திலும் இருபது தாழிசைகளைக் கொண்ட "திருவுந்தியார்" என்னும் பகுதி இருப்பது குறிப்பிடத்தக்கது.

உந்தி பறத்தல் என்பது, விளையாடும் பெண்டிர் இருகைகளையும் இரு மருங்கும் நேராக நீட்டிக் கால் விரல்களின் மேல் பாடிச் சுழன்று, 'மகளிர் ஆடும்" ஓர் ஆட்ட வகையாகும். இது பல்லவரிக் கூத்துக்களில் ஒன்று என்றும் தெரிய வருகின்றது. இந்நூலில் உள்ள பாட்டு வரிகளுள் முதல் இரண்டினை ஒரு பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற, கருத்து வகையில் அவற்றைத் தொடர்ந்து முற்றுவிப்பதாய் மூன்றாம் அடியை மற்றொருத்தி கூறுவதாக தொடர்கள் அமைந்துள்ளன.

திருவுந்தியாரில் உள்ள, "உந்தீபற" என்பது விளையாட்டுப் பாடலுக்குரிய மகுடமாக அமைந்துள்ளது. ஏனைய பாடற் பகுதிகளே பொருளுணர்த்துவனவாயுள்ளன. இவ்வாறன்றி, "உம்முடைய தீமைகள் எல்லாம் போகுமாறு நிற்பீர்" எனவும் "உந்திபற" என்பதற்குப் பொருள் கூறுவதுண்டு.

"இந்நூல் சித்தாந்த சாத்திர நூல்கள் கூறும் முப்பொருள் இயல்புகளை அளவை முறையில் கூறாது உபதேச முறையில் தமக்கு ஏற்பட்ட உணர்வின் அனுபவங்களை வெளியிடும் பாடல்களையுடையது.

இந்நூல் கூறும் பொருள் நிலையைச் சாதனமும் பயனும், ஆதார நிராதார யோகங்கள், இன்புறு நிலை, பெறுதற்கரிய தத்துவ உணர்வு, வாசியோகம், பாசவீடு, சிவப்பேறு, அணைந்தோர் தன்மை, பரமுத்தியின் .இயல்பு, உய்யும் நெறி, குருவாழ்த்து, நாற்பயன் எனப் பகுத்து நோக்கலாம். திருவுந்தியார் யோக நெறியையும், ஞான நெறியையும் விளக்குகின்ற நூலாக அமைந்துள்ளது. சைவ சித்தாந்தச் செந்நெறியில் நின்று ஆசிரியர் எய்திய பேரின்ப அனுபவத்தை இந்நூல் இயம்புகின்றது. சொல்லுக்கு அடங்காத இன்பத்தைச் சொல்ல வருகின்ற ஆசிரியர், தமது பாடல்கள் பலவற்றிலும், குறியீட்டுச் சொற்களாலேயே உணர்த்துகிறார். இதன் விளைவாகப் பல பாடல்கள் பிசிச் செய்யுள்களைப் போலவே அமைந்துள்ளன .(தொல் .பொருள் .செய்.391)

"கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தையுடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டது என்று உந்தீபற."

"பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது என்
அக்கொழு நீ அறிந்து உந்தீபற
அறிந்து அறியா வண்ணம் உந்தீபற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தி முதலுக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற"

என்பன போன்ற பல பாடல்கள் இதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. திருவுந்தியாரின் முதற்பாடல்

"அகளமாய் யாரும் அறிவு அரிது, அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீபற
தானாகத் தந்தது என்று உந்தீபற"

என வருகின்றது. உயிர் பதிப்பொருளில் இருந்து வேறுபட்டது. எனவே, பரம்பொருளை அப்பொருள் என்ற கூட்டுச் சொல்லால் ஆசிரியரும் குறித்தார். பரம்பொருள் அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பதே ஆயினும், கட்டுண்ட நிலையில் உள்ள உயிர்களுக்கு அது எட்டாப் பொருளாகவே உள்ளது. இதனையே ஆசிரியர் "அப்பொருள்" என்ற சேய்மைச் சுட்டினால் பெற வைத்தார்.

சைவ சித்தாந்தம் மிகத்தெளிவாக இறைவன் உருவம் உடைய வனல்லன். அருவுருவம் உடையவனல்லன், அருவமான வனுமல்லன் என்று மூன்றையும் கூறி "நிறுத்துவன் நினைத்தமேனி நின்மலன் அருளினாலே" (சிவஞான சித்தியார் 65) என்று வரையறை செய்கின்றது. அதாவது இறைவன் தன்னியல்பிலே உருவம் கடந்தவன். அவன் உயிர்கள்மீது கொண்ட பெருங் கருணையினால் அருவுருவத் திருமேனியும், உருவத் திருமேனியும் தரித்துக்கொண்டு உயிர்களின் கருமேனியைக் கழிப்பதற்காகக் காட்சி தருகின்றான். இக்கருத்துக்கள் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் போன்ற சாத்திர நூல்களில் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றையே "அகளமாய் நின்றது" என்ற சொற்களாலும், "சகளமாய்த் தந்தது" என்ற சொற்களாலும் உய்யவந்த தேவநாயனார் இத்தாழிசையில் மிகச் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளார். சிவபெருமானின் திருமேனி அவனது கருணையே வடிவானது என்பது சைவ சித்தாந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கொள்கையாகும். இக்கருத்தே, "தானாகத் தந்தது" என்ற சொற்களால் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. திருவருளை ஆன்மா பற்றும் முறைமையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பற்றை அறுப்பது ஓர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை அறுப்பர் என்று உந்தீபற
பாவிக்க வாரார் என்று உந்தீபற"

என்னும் பாடல் விளக்குகின்றது.

உலகப் பற்றினை விடுவதே சிவத்தைப் பற்றுவதற்கு வழியாகும். ஆன்மா உலகியலில் ஆட்பட்டுப் பழகிவந்த பழக்கத்திலிருந்து எளிதில் விடுபடுவதில்லை. உலகப் பற்றை விடுவதற்குப் பழகிய பழக்கத்திலிருந்து விடுபட வேண்டும். மனத்தைப் பழகிய வழியில் செல்லவிடாமல் மடை மாற்றம் செய்யவேண்டும். இது திருவுந்தியாரில்,

"பழக்கம் தவிரப் பழகுவது அன்றி
உழப்புவது என் பெணே உந்தீபற
ஒரு பொருளாலே என்று உந்தீபற"

என வருகின்றது.

சிவானுபவத்தில் அழுந்தி நிற்பவர்கள் அதனைக் கைவிட்டு விடாமல் அதில் உறுதியுடன் நிற்பவர்கள் என்பதை,

"வித்தினைத் தேடி முனையைக் கைவிட்டவர்
பித்து ஏறினார்கள் என்று உந்தீபற
பெறுவது அங்கு என்பெணே உந்தீபற"

என்னும் பாடல் விளக்குகின்றது.

சிவன் குரு வடிவில் வந்து அருள் செய்யும் பான்மையும், ஆன்மா சிவமாம் தன்மையைப் பெற்றுச் சிவானந்தத்தை அனுபவிக்கும் திறனும் திருவுந்தியாரில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆன்மீக வளர்ச்சிக்குரிய அரிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்களிற்றுப்படியார்

சைவ சித்தாந்த சாத்திர நூல்களின் வரிசையில் இரண்டாவது நிற்பது திருக்களிற்றுப் படியார் ஆகும். இவ்விரு நூல்களும் அருளனுபவத்தின் நீர்மைகளை அழகிய முறையில் எடுத்துக் காட்டும் ஞான நூல்களாகும் என்பர் முனைவர் ஆ.ஆனந்தராசன்.

முன்னே தோன்றிய திருவுந்தியர் முதல் நூலாய் அமைய, அதன் வழித் தோன்றிய, திருக்களிற்றுப்படியார் வழிநூலாயிற்று. இவ்விரண்டும் மூலமும் உரையும் போல் விளங்குவன. பொருள் வகையால் ஒன்றே என்னும்படி நெருங்கிய தொடர்புடையன.

திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்ததேவர் ஆவர். இவர் இந்நூலை நூறு வெண்பாக்களில் அருளிச் செய்துள்ளார். இவர் திருவுந்தியாரின் ஆசிரியராகிய திருவியலூர் உய்யவந்ததேவரின் மாணவராகிய திருவியலூர் ஆளுடைய தேவநாயனாரின் மாணவர் ஆவர்.

திருக்களிற்றுப் படியாரில் உள்ள இரண்டு செய்யுட்கள் இதன் ஆசிரியருக்குக் குரு பரம்பரையில் ஞானநூற்பொருள் கிடைத்த வரலாற்றைக் குறிப்பனவாய் அமைந்துள்ளன.

"தன் முனைப்புடன் கூடிய அறிவு கெட்டுத் திருவருளில் நிலைத்து நின்ற யான் அறிந்த உண்மைகளை ஞானத்தில் வேட்கையுடையார் கேட்டுணர்க என்று கூறி, ஒருவர் எனக்கு உபதேசம் செய்தார். உய்ய வந்த தேவராகிய அக்குருநாதர் சொல்லியவாறே யான் உனக்குச் சொல்லுகிறேன். என்று என்னை ஆட்கொண்ட குருவாகிய ஆளுடைய தேவர் எனக்கு உணர்த்திய அப்பொருளை, மாணவனாகிய உனக்கு யான் இப்பொழுது உணர்த்தலுற்றேன்" என்று திருக்கடவூர் உய்யவந்த தேவர் நூலின் தொடக்கத்தில் முன் ஆசிரியர்களாகிய இருவரையும் குறிப்பிட்டுள்ளார். இது திருக்களிற்றுப்படியாரில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னறிவு சென்றளவில் யான்நின்று அறிந்தபடி
என்னறிவிலார் அறிக என்றொருவன் - சொன்னபடி
சொல்லக்கேள் என்று ஒருவன் சொன்னான் எனக்கு அதனைச்
சொல்லக் கேள் யான் உனக்கு அச் சொல்" (திருக்.3)

எனவரும். இங்கு. என் அறிவு சென்ற அளவில் யான் நின்று அறிந்தபடி சொன்ன ஒருவர் திருவியலூர் உய்யவந்ததேவர்" ஆவர். சொன்னபடி சொல்லக்கேள் என்ற ஒருவன், "ஆளுடைய தேவர்" ஆவர். யான் உனக்கு அச்சொல் சொல்லக் கேள் என்று அருளியவர் இந்நூல் ஆசிரியர் ஆவர்.

நூலின் இறுதியில் தமது ஞானாசிரியராகிய ஆளுடைய தேவரின் பெருமையையும், அவர் தம்மை ஆட்கொண்ட திறத்தையும், எடுத்துரைத்துப் போற்றியுள்ளார். அச்செய்யுள் திருக்களிற்றுப்படியாரில்,

" "ஆளுடையான் எந்தரமும் ஆளுடையானே, அறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல் - நாளும்திருவியலூர்
ஆளும் சிவயோகி இன்று என்
வருவிசையை மாற்றினான் வந்து" (திருக். 96)

எனவரும் அச் செய்யுளில் தம்மை ஆட்கொண்டருளிய குருநாதரின் பெயர் "ஆளுடைய தேவர் என்பதையும், அவர் திருவியலூரில் வாழ்ந்தவர் என்பதையும், தகுதி சிறிதும் இல்லாத தன்னையும் ஆட்கொண்டு 'யான் எனது" என்று முனைந்து செயற்படும் வேகத்தை மாற்றினார் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

சிதம்பரத்தில் நடராஜர் ஆனந்தக் கூத்து ஆடுகின்ற அரங்கினை ஏறிச்சென்று அடைவதற்கு ஐந்து படிகள் உள்ளன. இவை பஞ்சாக்கரப்படிகள் எனப்படும். அப்படிகளின் இருபக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாகக் கல்லால் அமைக்கப்பட்ட இரு களிறுகள் துதிக்கையை நீட்டி இருப்பது போல் அமைந்துள்ளன. இதனால் அப்படிகளைத் திருக்களிற்றுப்படி என்று வழங்குதல் மரபு. சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பர நடராசரை வழிபடச் சென்று நின்ற நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெரியபுராணத்தில், 'செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்து எழுந்தான். திருக்களிக்களிற்றுப்படி மருங்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தடுத்தாட் கொண்ட புராணம், 106) எனக் குறிப்பிடுவன நோக்குக. இத்தகைய சிறப்பு மிக்க சிதம்பர நடராசரின் சந்நிதியில் உள்ள திருக்களிற்றுப்படியில் இந்நூலை வைக்க அதனைக் கல்லால் இயன்ற யானை, தன் துதிக்கையால் எடுத்து நடராஜப் பெருமானின் திருவடியில் வைத்ததெனவும், அதில் இருந்த இந்நூல் திருக்களிற்றுப்படியார் என்னும் பெயரினைப் பெற்றது எனவும் கூறுவர்.

ஞானாசிரியரின் உபதேசமே சாத்திரப் பொருள்களைத் தெளிவுபடுத்தவல்லது என்ற கருத்து திருக்களிற்றுப்படியாரில்,

"சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன் வசன
மாத்திரத்தே வாய்க்கும் நலம் வந்துறுமோ - ஆர்த்த கடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய், இதனைச் செப்பு" (திருக்...6)

எனவரும். அருளாசிரியர் இன்றித் தாமே நூல்களை ஓதி, உணர்ந்து கொள்ளமுடியும் என்று எண்ணிக் கற்க முயல்வது, கடல் நீரை நேரே பருகித் தாகத்தைத் தணித்துக் கொள்ள முயல்வது போன்றது என்று இச்செய்யுள் கூறுகிறது. குருமொழி வழியில் அறிவுபெறுதலன்றி சாத்திரம் பயன் தராது என்பது இதன் நுண்பொருள் ஆகும்.

உயிருக்குயிராய் உள்ள இறைவனே பக்குவம் வந்தபொழுது ஞானகுருவாய், வெளிப்படுவான் என்பதும், பக்குவம் இல்லாத பொழுது அவன் வெளிப்படான் என்பதும் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். தாயன்பே பாலும் கண்ணீருமாய் வெளிப்படுதல் போல, உயிருக்குப் பக்குவம் வராத பொழுது நுண்ணியனாய் மறைந்து நின்ற இறைவனே பக்குவம் வந்த பொழுது குருவடிவாய் வெளிப்பட்டுத் தோன்றுவான் என்பது திருக்களிற்றுப்படியாரில்,

"சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்தவறு" (திருக்.54)

என வருகின்றது. பாலும், கண்ணீரும் அன்பின் வடிவம் என்பது இச் செய்யுளில் நுட்பமாக உணர்த்தப்பட்டுள்ளது. மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர்க்கரசியின் அன்பின் திறத்தையும் இச்செய்யுள் சுட்டிநிற்கின்றது.

இந்நூலில் சீவன் முத்தர் இயல்பு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சீவன் முத்தர்கள் தமது உணர்வை உலகப் பொருள்களில் புறத்தே செலுத்தாமல் அகத்தே சிவத்தோடு பொருந்தி நின்று பேரின்பத்தைத் துய்த்த வண்ணமிருப்பர். (69). இவர்கள் சிவமாம் தன்மை பெற்று விளங்குவதால், சிவத்தின் ஆணையில் சீவன் முத்தர்களது செயல்கள் யாவும் சிவன் செயலாகவே நிகழ்த்தப்படும் (69) என்று இந்நூல் குறிப்பிடுகின்றது. சீவன் முத்தர்கள், அத்தகைய வல்லமை வாய்க்கப்பெற்றவர்கள் என்பதைச் சுட்டவே திருஞானசம்பந்தர் (70) திருநாவுக்கரசர் (71) சுந்தரமூர்த்திநாயனார் (72), மாணிக்கவாசகர் (73) ஆகிய நால்வர் செய்த செயற்கரிய அற்புதச் செயல்கள் பலவற்றை இந்நூல் குறிப்படுகின்றது.

10466 C.C

சைவத்தில் "வன்பக்தி" என்ற புதிருக்கு விடை கூறுவதாக அமைந்து விளங்குவது இந்நூலாகும். சீவன் முத்தர்களின் பத்திச் செயற்பாடுகளை, இந்நூலாசிரியர், "மெல்வினை" "வல்வினை" எனக்கூறுபடுத்தி வல்வினைகளும் நல்வினைகளாய் முத்திப்பேறு நல்கும் நுட்பத்தைப் புலப்படுத்துகின்றார்.

சரியை, கிரியை சார்பானவை மெல்வினை என்றும், சிறுத்தொண்டர் செயல் போல்வன வல்வினை என்றும் இந்நூல் குறிப்பிடுகின்றது. இவ்வகையில் சண்டீசர் தாதையைத் தாளற வீசியதும், அரிவாட்டாய நாயனார் தம் கைவாளால் தம்மிடறிருந்தும் வல்வினையின் பாற்படுதலை இந்நூல் குறிப்பிடுகின்றது.

இத்தகைய சைவசித்தாந்த நுட்பங்கள் பலவற்றைக் கூறும் இந்நூல், அம்மையப்பராக விளங்கும் சிவனை வாழ்த்தும் முறைமையுடன் (100) நிறைவு பெறுகின்றது.

சிறப்பு நூலாகிய திருக்களிற்றுப் படியாரைச் சாத்திர உரையாசிரியர் பலரும் குறிப்பிட்டுள்ளனர் என்பது ஒன்றே இந் நூலின் பெருமைக்குப் போதிய சான்றாகும். சிவஞானமுனிவர் தமது மாபாடியத்தில் ஏழு இடங்களில் இதன் செய்யுள்களை எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்பவை அனுபவ நிலைகளாகிய சிறப்பியல்புகளையே கூறுவதால் அவை சைவசித்தாந்தத்தின் சிறப்பு நூல்கள் எனக்கூறப்படும் சிறப்புக்குரிய சாத்திரங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவஞான போதம்

***

சிவஞானபோதம், சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் மணிமுடியாய் விளங்கும் சிறப்புக்குரியது. இந்நூலை அருளிச்செய்த மெய்கண்டதேவர் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மெய்கண்டதேவர் என்பது அவருக்கு வழங்கிய சிறப்புப் பெயராகும். பொய்யைப் பொய் என்று கண்டு நீக்கி மெய்யைக் கண்ட காரணத்தால் அச்சிறப்புப் பெயரைப் பெற்றார். அவரது இயற்பெயர் சுவேதவனப்பெருமாள் என்பதாகும்.

அவர் அருளிய சிவஞானபோதம் சொற்செட்டும், பொருட் செறிவும், திட்பமும். நுட்பமும் உடைய ஒரு நலையாய சைவ சித்தாந்த முதல் நூலாக விளங்குகின்றது.

இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் ஆனது. சூத்திரங்கள் ஒவ்வொன்றும் மூன்றடிகள் அல்லது நான்கடிகள் உடையன.

சூத்திரத்தின் பொருள் ஐயம், திரிபுகளுக்கு இடமின்றி விளங்குதற்பொருட்டு ஒவ்வொரு சூத்திரத்திற்கும் கருத்துரையும், சுருக்கமான பொழிப்புரையும் மெய்கண்டதேவர் செய்துள்ளார். அப்பொழிப்புரை "வார்த்திகம்" எனப்படும். அவ்வார்திகப் பொழிப்புரை பின்வருமாறு அமைந்துள்ளது.

ஒவ்வொரு சூத்திரத்தையும் அதன் பொருள் நிலையை வைத்துப் பல கூறுகளாக ஆசிரியர் வகுத்துள்ளார்.

ஒவ்வொரு சூத்திரமும் பொருட் பிரிவு செய்யப்பெற்று, ஒவ்வோர் கூறாக (அதிகரணமாக) வகுக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு வகுத்துக் கொள்ளும் கூறு அல்லது பகுதியே அதிகரணம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வோர் கூறிலும் (அதிகரணத்திலும்) "மேற்கோள்". "ஏது", "எடுத்துக்காட்டு" என்னும் மூன்று உறுப்புக்கள் இடம்பெறும். "மேற்கோள்" என்பது சூத்திரத்திலிருந்து பெறப்படும் கருத்தமைவு ஆகும். "ஏது" என்பது அம்மேற்கோளை நிறுவுவதற்கு ஆசிரியர் உரைப்பாகும். "எடுத்துக்காட்டு" என்பது அந்த ஏதுவை வலியுறுத்துவதற்கு வருவதாகும். இம் மூன்றினுள் மேற்கோளும், ஏதுவும் உரைநடையாய் அமைந்தவை. எடுத்துக்காட்டு செய்யுளாய் அமைந்தது. இவ்வாறு ஒவ்வோர் அதிகரணமும் பொருள், ஐயப்பாடு, பிறர்பக்கம், சித்தாந்தத் துணிபு, இயைபு என்ற ஐந்திற்கும் நிலைக்களமாக விளங்குகின்றதெனலாம்.

சிவஞானபோதம், பிரமசூத்திர அமைப்பில் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் எனும் நால்வகை அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

சிவஞானபோதத்தின் முதல் ஆறு சூத்திரங்கள் பொது அதிகாரம் எனவும், பின் ஆறு சூத்திரங்கள் உண்மை அதிகாரம் எனவும் அழைக்கப்பட்டுள்ளன. பொது அதிகாரம் பிரமாண இயல், இலக்கண இயல் எனும் இரு பகுதிகளை உடையது. பிரமாணம் பொருள்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவிப்பது. இலக்கணம் என்பது அவ்வாறு இருக்கும் பொருள்களின் தன்மையைத் தெரிவிப்பது உண்மை அதிகாரம் சாதன இயல், பயன் இயல் எனும் இருபகுதிகளையுடையது.

சிவஞான போதம் திருமுறைகளில் இடம்பெறும் சாத்திரக் கருத்துக்களை முறைப்படுத்தித் தருக்க இயல் முறையில் முப்பத்தொன்பது அதிகாரங்களாக விளங்குகின்றது என்பர் முனைவர் ச.கங்காதரன்.

சிவஞான போத நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் செய்த பாயிரம் உள்ளது. அதில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும், அவையடக்கச் செய்யுள் ஒன்றுமாக இரண்டு செய்யுட்கள் உள்ளன.

## கடவுள் வாழ்த்து

பல நூல்களையும் கற்பதலால் வரும் குழப்ப உணர்வு நீங்கித் தெளிவுணர்வு பெறுவதற்குக் கல்லால் நிழலில் யோக வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எழுந்தருளியிருந்து அருள்புரியும் சிவபெருமான் திருவருள் வேண்டும். பொல்லாப் பிள்ளையாராகிய விநாயகப் பெருமானை வழிபடுகின்றவர்க்கு அத்திருவருள் எளிதிற் கைகூடும். இது சிவஞானபோதக் கடவுள்வாழ்த்தில்.

"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே" என வரும்

## அவையடக்கம்

முதற் பொருளைத் தலைப்பட்டு உணரும் உணர்வே மெய்யுணர்வு எனப்படும். அவ்வுணர்வு உயிரின் இயல்பை முதற்கண் தெளிய உணர்ந்தார்க்கே வரக்கூடியது. முதலில் தமது உயிரின் இயல்பினை உணர்ந்து, பின் தம்மை உடையவனாகிய தலைவனது இறைவனது இயல்பைத் தெளிய உணர்ந்தோர், சிவத்துவம் விளங்கப் பெற்றுச் சிவனை ஒப்பர். அத்தகைய உண்மை அனுபவம் பெற்றவர் எம்மாற் செய்யப்படும் இச் சிவஞானபோத நூலை இகழாது நல்லதெனக் கண்டு ஏற்றுக்கொள்வர். இனி, தம் இயல்பையே உணரமாட்டாதவர் தலைவனையும் உணரமாட்டாதவரே ஆவர். அன்னோர் தம்முள் ஒன்றுபடுதலின்றி ஒருவரோடொருவர் முரண்பட்டுப் பலவற்றைக் கூறுவர். அத்தகையோர் எம்மையும் எமது நூலையும் இழந்து கூறுதல் இயல்பாகும். ஆதலால் அவர்கள் கூறும் இகழ் உரையை ஒரு பொருளாகப் பொருட்படுத்தோம். இதுவே அவையடக்கத்தில்,

"தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கு இயைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்"

எனக் கூறப்பட்டுள்ளது.

சிவஞானபோதத்தின் பொருள் நிலை பின்வருமாறு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற்சூத்திரம்

முதலாம் சூத்திரம் மூன்று கூறுகளையுடையது. உலகம் அவன் அவள் அது எனச் சுட்டி அறியப்படுவது. அதனால் அது தோன்றி நின்று மறைந்து மீளத் தோன்றுவதாய் உள்ளது என்பது விளங்கும். இங்ஙனம் மாற்றமடையும் இவ்வுலகை நியமித்து ஒழுங்குபட நடத்திவரும் முதல்வன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவன் சுட்டி அறியப்படாதவனாய், எவ்வகையான மாறுதலும் இல்லாத செம் பொருளாய், எல்லாவுலகையும் ஒருங்கே ஒடுக்கி ஒருங்கே தோற்றவல்லவனாய் இருத்தல் வேண்டும். உயிர்கள் அறியாமையாகிய தம்மியற்கைக் குற்றம் நீங்கி அறிவு வளர்ச்சி பெற்று மேம்படுதற் பொருட்டே உலகப் படைப்பை முதல்வன் மேற்கொள்கின்றான்.. இக்காரணங்களால் முதல்வனை உலகின் பரம ஆதார நிமித்த காரணன் என்று உணர்தல் வேண்டும். முற்றழிப்பைச் செய்யும் கடவுளே முதல்வன் ஆவான். சங்கார காரணனாய் உள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம் என்பது இச்சூத்திரக் கருத்துரையாகும்.

## இரண்டாம் சூத்திரம்

இரண்டாம் சூத்திரம் என்பது நான்கு பகுதிகளையுடையது. முதல் சூத்திரத்தில் சொல்லப்பட்ட முழுமுதற் கடவுள் இவ்வுலகைப் படைக்கும் போது உயிரோடும் உலகத்தோடும் கலந்து ஒன்றாய், பொருட்டன்மையால், வேறாய், உயிர்க்குயிராகும். தன்மையால் உடனாய் நின்று படைப்பான்.. உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளைப் பொறுத்து அவற்றின் பயனை இறைவனே அவற்றிற்கு ஊட்டுகின்றான். உயிர்கள் இறத்தல் பிறத்தல் மூலமாகவே இறைவன் ஆணையினால் தம் வினைகளை நுகர்ந்து கழிக்க வேண்டும். இவ்வாறு உயிருக்கு உதவும் ஆணையாகிய தன் சக்தியோடு இறைவன் பிரியாது நீக்கமின்றி என்றும் நிறைந்து நிற்பன்.

## மூன்றாம் சூத்திரம்

இச்சூத்திரம், உயிர் உண்மையை ஏழு காரணங்களால் உணர்த்துகிறது. 1. உடல், பொறிகள், நுண்ணுடல் என்பவற்றை ஒவ்வொன்றாகக் கழித்து இது ஆன்மா (உயிர்) அல்ல என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதால் ஆன்மா உளது. 2. உடலின் வேறாக (எனது உடல்) இது என்னுடைய உடல் என்று 'சொல்லும் நான் என்ற பொருளே ஆன்மா 2. ஐம்பொறிகள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியாது. எனவே ஐம்பொறிகள் அறிவதை இணைத்தும், அவற்றைத் தனித்தனி அறிவதும் ஆகிய ஆன்மா வேறு உண்டு. 4. கனவில் அறிவதை நனவில் மாறி அறிவதால் ஒடுக்கமாகிய கனவு நிலையில் இயங்கும் சூக்கும உடலுக்கு வேறாக ஆன்மா உண்டு. 5. உறக்கத்தில் பிராண வாயு உண்டு.. ஆனால் உடலுக்கு நுகர்ச்சியும் செயலும் இல்லை. எனவே பிராண வாயு ஆன்மா அன்று. 6.ஆன்மா உணர்த்த உணர்கிறது என்னும் அனுபவ அறிவால் தானே அறியும் கடவுளுக்கு வேறாக ஆன்மா உண்டு. 7. தூல சூக்கும உடல்களுக்கு உடல் என்ற பெயர் மட்டுமே விளக்குவதால் அவ்வுடலுக்கு வேறாகு (மாயா இயந்திர தனுவுள்) ஆன்மா உள்ளது.

இச் சூத்திரத்தில், சைவசித்தாந்தம் கூறும் ஆன்மக் கோட்பாட்டிற்கு மாறுபட்ட சூனியமே ஆன்மா. பருவுடம்பே ஆன்மா, இந்திரியங்களே ஆன்மா. சூக்கும தேகமே ஆன்மா, பிராணவாயுவே ஆன்மா, பிரமமே ஆன்மா, அனைத்தும் கூடிய தொகுதியே ஆன்மா என்னும் ஏழுவகையான மாறுபட்ட கருத்துக்கள் மறுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நான்காம் சூத்திரம்

அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பன ஆன்மா அல்ல. அவற்றின் துணை கொண்டு (அரசன் அமைச்சர்களோடு செயல்படுதல் போல) ஆன்மா அறிகின்றது. ஆ.னால்,. உயிரானது ஆதியிலிருந்தே ஆணவ மலத்தோடு கூடியிருப்பதால் அறிவதில்லை. இவ்வறியாமை நீங்க உயிர் உடலிலுள்ள கருவிகளோடு கூடியும் பிரிந்தும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்னும் ஐந்து உணர்வு நிலைகளில் (அவத்தைகள்) இறங்கியும் ஏறியும் வரும். ஆன்மாவிற்கு உளதாகும் அறியாமை ஆணவச் சார்பாக வந்த செயற்கை என்பது இதன் முக்கியக் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் சூத்திரம்

இது இறைவனின் திரோதான (மறைப்பு) சத்தியை விளக்குகின்றது. மெய். வாய். கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் தத்தமக்குரிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பவற்றை அறியும் போது உயிரால் செலுத்தப்பட்டே அறியும், ஆயினும் அவை தம்மை நோக்கியும் அறிவதில்லை. தம்மைச் செலுத்தும் உயிரையும் அறிவதில்லை. அதுபோல உயிர் ஒரு பொருளை அறியும்போதும், ஒரு செயலைச் செய்யும் போதும் முதல்வன் அருளால் அறிவிக்கப்பெற்றும் செலுத்தப் பெற்றும்தான் அறிகிறது; செய்கிறது. ஆயினும் அது பொருள் நோக்கு (Objective consciousness) உடையதாகவே இருத்தலின், தன்னை நோக்கியும் அறிவதில்லை. தன்னுணர்வின் முதலாகிய திருவருளையும் அறிவதில்லை. முதல்வன் எல்லா ஆன்மாக்களையும் அறிவித்தும் தொழிற்படுத்தியும் வருவது,, காந்தம் தான் அசைவின்றி இருந்து இரும்புத் துண்டுகளைத் தன் ஆற்றலில் அடங்கக் கொண்டு இயங்குதல் போலும் ஆகும். அச் செயல்களால் அவன் சிறிதும் மாற்றம் அடைவதில்லை. மாயையின் சார்பில் ஏகதேச அறிவு விளங்கப் பெறும் உயிர்க்கு முதல்வனது உபகாரம் உணர்த்துகிறது இச்சூத்திரம்.

## ஆறாம் சூத்திரம்

கடவுள் எவ்வாறு அறியப்படுகிறார் என்பதை இச் சூத்திரம் விளக்குகின்றது. "கடவுள் நம் அறிவால் அறியப்படுபவனா, அல்லனா? என்பது வினா. அறியப்படுபவன் என்றால் அறியப்படும் பொருளெல்லாம் சடமாயும் அழி பொருளாயும் இருத்தல் நியதியாதலால், இறைவனும் அழிபொருள் என்பதாய் முடியும். இனி, அவன் எவ்வாற்றானும் அறியப்படாதவனே எனின், நம் உணர்வில் தட்டாத பொருளால் நமக்கு எந்தப் பயனும் உண்டாகாது. ஆதலால் அவனை இப்பொருள் எனக் கொண்டதாகவே முடியும். ஆதலால் முதல்வனை நம் சுட்டறிவுக்கு அப்பாற்பட்டவன் எனவும், பாசங்களின் நீங்கி சுட்டுதலின்றி ஒன்றித்து நின்றும் உணரும் மெய்யுணர்வுக்கு விளங்குபவன் எனவும் மெய்யுணர்ந்தோர் கொள்வர். அவர் சுட்டறிவுக்கு அப்பாற்படுதலின் சித்துப் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், மெய்யுணர்வுக்கு விளங்குதலின், உள் பொருள் எனவும் துணிந்து, அவனைச் சிவசத்து என மெய்யுணர்ந்தோர் கூறுகின்றனர். இறைவன் தானே அறிவர் அறிகின்ற தன்மையால் சிவசத்தாக (அறிவு வடிவாக) அறியப்படுகிறார்

## ஏழாஞ் சூத்திரம்

இச் சூத்திரம் யாருக்குச் சாதனம் தேவை என்பதை உணர்த்துகின்றது. சத்தாகிய சிவத்தின் முன் அசத்தாகிய உலகம் முனைந்து நிற்கமாட்டாமையால் சிவம் உலகத்தை நுகராது. உலகம் அறிவிலது ஆதலால், சிவத்தை அறியாது. இரண்டையும் அறிந்து அழுந்துவது இரண்டும் அல்லாத சதசத்து எனப்படும் ஆன்மாவே ஆகும். அவற்றை அறிந்து அழுந்தும் போது, ஆன்மா அசத்தாகிய குணவடிவில் உள்ள பொருள்களை அசத்தாகிய தனு, கரணம் என்பவற்றால் அறிந்து, அசத்தாகிய குணமயமாய் நின்று தன்வேதனைப்படும். இது பிறப்பு நிலை. இங்ஙனமே, வீட்டு நிலையில் அது சத்தாகிய சிவத்தைச், சத்தாகிய அதன் திருவருளைச் சார்பாகக் கொண்டு உணர்ந்து, சத்தாகிய சிவத்தின்கண் உள்ள தூய அவன்றன் எண் குணங்களும் தன்பால் மேம்பட்டு நிற்கச் சிவமாய் நிற்கும்.

இங்ஙனம் சத்து அசத்தெனப்படும் இருதிறனையும், இருதிறனாலும் அறிந்து இரு திறனின் கண்ணும் உளதாதலே ஆன்மாவின் சிறப்பியல்பாம். இவ்வியல்பு பற்றிப் பிறப்புநிலையில் பரு உடல், நுண் உடல், குணஉடல், கஞ்சுகவுடல், காரணவுடல் என்பவற்றைப் பொருந்தி, அவையவை வேறாய் உபாதிப்பட்டு வந்த ஆன்மா. வீட்டு நிலையில், சிவத்தைச் சார்ந்து சிவமேயாய் நிற்கும். இவ்வாறு நிற்றல் பற்றி, ஆன்மாவே முதற்பொருள் என முன்னோடுபின் முரணிக் கூறுதல் தகாது. இச்சூத்திரத்தில் வரும் "இருதிறன் அறிவுளது, இண்டல ஆன்மா" என்பது பொருட் செறிவுள்ளது ஆகும். இந்நோக்கில் உயிர் சத்தாதல்தன்மை, அசத்தாதல் தன்மை ஆகிய இரண்டுமின்றி "சதசத்" என்று சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் சூத்திரம்

இச் சூத்திரம் ஆன்மா உய்தி பெற எது சாதனம் என்பதை விளக்குகின்றது. ஆன்மாவானது முற்பிறவிகளில் பயன் கருதாது செய்து வந்த சரியை, கிரியை, யோகம் ஆகிய தவ முயற்சியினால், உயிர்க்குயிராய் மறைந்து நின்று உணர்த்தி வரும் முதல்வன் அருளாசிரியனாய்த் தோன்றி நின்று மெய்யுணர்வை விளக்கியருளுவன். மன்னவன் மகன் அறியாமை காரணமாக வேடரிடத்தே தங்கி விதிவிலக்கு அறியாது தன் உரிமையை மறந்து வாழ்ந்து வருதல் போல, சிவத்தைச் சார்ந்து சிவனாந்தப் பெருஞ் செல்வத்தைப் பெற்று, நிலையாக வாழ்வதற்கு உரிய சிவகுமாரன் ஆகிய உயிர், ஐம்பொறிகள் முதலிய தத்துவக் கூட்டத்தைச் சார்ந்து, தன் இயல்பையும், தனக்கும் முதல்வனுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அறிந்து கொள்ளாமல், பிறந்திறந்து உழன்று துன்புறும். இதனை ஆசிரியன் உணர்த்த தவமுயற்சியுள்ள உயிர் உணரும். உணர்ந்தவுடன் தத்துவக் கூட்டங்களின் நீங்கி முதல்வன் திருவடியில் பிரிப்பின்றி ஒன்றி. ஆன்மா இன்புறும். பக்குவம் வரும்போது இறைவன் குருவடிவில் வந்து ஆட்கொள்வான். எனவே குருவருளே ஆன்மாவுக்குச் சாதனமாகும் என்பது இச்சூத்திரப் பொருளாகும்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## ஒன்பதாம் சூத்திரம்

இச்சூத்திரம் சைவசித்தாந்த நெறியில் நிற்போர் ஞானத்தை அடையும் (சாதிக்கும்) முறையினைக் குறிப்பிடுகின்றது. பாசஞானத்தாலும், பசுஞானத்தாலும் அறியமுடியாத பேரின்ப முதல்வனைத் திருவருள் ஞானமாகிய பதிஞானம் எனப்படும் சிவஞானத்தால் ஒருவன் தன் அறிவின் கண் நாடுதல் வேண்டும். அப்போது பாசம் விடுபட, இறைவன் தண்ணிய நிழல்போலத் தோன்றுவான். அவ்வாறு தோன்றும் இறையுணர்வு தொடர்ந்து நீங்காதிருக்க இறைவனின் திருவைந்தெழுத்தை முறையாக எண்ண வேண்டும் என்பது இச்சூத்திரக் கருத்தாகும்.

அசத்தாகிய தத்துவங்களோடு கூடுவதால் ஆன்மாவுக்கு உண்டாகும் சுட்டுணர்வு 'பாசஞானம்" எனப்படும். மூன்றாம் சூத்திரத்திற் கூறப்பட்டவாறு, உயிர் 'நான் யார்" எனத் தன் உண்மையை நோக்கி ஆராய்ந்து உணரின் அது மாயாகாரியமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவக் கூட்டங்களின் நீங்கித் தன் இயற்கையாகிய வியாபக உணர்வு நிலையைப் பெறும். அந்நிலையில் தத்துவங்களாகிய பாசம் நீங்கினும் முன்னைய பயிற்சி காரணமாக அவ்வுயிர் தன்னை "நானே பரம் பொருள்" என உணரும். இவ்வுணர்வு "பசு ஞானம்" எனப்படும். திருவருளைச் சார்ந்து அருளே கண்ணாகக் காணும் காட்சியே மாசறு காட்சி, அல்லது மெய்யுணர்வு அல்லது "சிவஞானம்" எனப்படும்.

## பத்தாம் சூத்திரம்

இச் சூத்திரம் மல நீக்கத்தை (பாச நீக்கம்) உணர்த்துகின்றது. இறைவன் ஆன்மாவுக்கு உதவும் உண்மையை அறிந்தபோது ஆன்மாவானது இறைவனுடைய நோக்கத்தை முன்னே வைத்து அதற்கேற்பச் செயற்பட வேண்டும். இதுவே "ஏகனாதல்" ஆகும். இவற்றுடன் இறைவனால் பணிக்கப்பட்ட இறை பணியையும் கடைப்பிடிக்க வேண்டும். ஏகனாதலால் ஆணவமலமும் இறைபணி நிற்றலால் மாயை, கன்மம் ஆகிய மலங்களும் நீங்குகின்றன. இச் சூத்திரத்தால் குறிக்கப்படும் உணர்வு நிலை இராப்பகலற்ற நிலை எனவும், அருள் நிலை எனவும், துரியநிலை எனவும் நூல்கள் குறிப்பிடுகின்றன.

## பன்னிரண்டாம் சூத்திரம்

இச்சூத்திரம் அணைந்தோர் எனப்படும் சீவன் முத்தர் இயல்பினை விளக்குகின்றது. சீவன் முத்தி நிலையைத் தலைப்பட்ட முத்தான்மாக்கள் பிராரத்தவினை காரணமாகச் சில சமயங்களில் நிட்டை நிலையினின்றும் நீங்கி மீண்டும் உலகியலுக்குள் வரலாம். இதனால் மலங்களில் எதுவும் தன்னை ஒருகாலத்தும் தாக்காதவாறு அதற்குரிய உபாயத்தைச் சீவன்முத்தர் தேடிக்கொள்ள வேண்டும். சீவன்முத்தன் மும் மலங்களையும் களைவன் என்னும் கருத்தையே "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா அம்மலம் கழீஇ" என்று இச் சூத்திரம் உணர்த்துகின்றது. சீவன் முத்தர் தம்மை மலங்கள் தாக்காதிருக்கும் பொருட்டுச் சிவபக்தர்களோடு எப்பொழுதும் இணங்கி அவர்களிடத்தில் அன்புடையவராய் ஒழுகுவர் என்பதை இச்சூத்திரம் "அன்பரொடு மரீஇ" என்றுணர்த்துகின்றது. சீவன்முத்தன், எவரிடத்தேனும் திருநீறு, உருத்திராட்சம் முதலிய சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னங்களோடு கூடிய சிவவேடத்தினைக் கண்டவிடத்து அவரைச் சிவமெனவே வழிபடுவன் என்பதை, "மாலறநேயம், மலிந்தவர்வேடம், அரனெனத் தொழுமே" என இச் சூத்திரம் உணர்த்தும். சீவன்முத்தன் சிவலிங்கம் அமைந்துள்ள சிவாலயங்களையும் சிவனென வழிபடுவன் என்பதை இச் சூத்திரம், "ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" என்றுணர்த்தும்.

இவ்வியல்புகளை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளில் காணலாம் என்பர் சித்தாந்தக் கலைச் செல்வர் திரு.க.வச்சிரவேல்முதலியார்.

இவ்வாறு 39 தெரிவுகளில் (அதிகரணம்) சைவசித்தாந்த கோட்பாடுகளை அமைத்துக் காட்டுகின்றார் மெய்கண்டதேவர். சிவஞானபோதம் போற்றுதற்குரிய தலைசிறந்த சித்தாந்த நூலாதலின் "மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினத் தெரிக்கலுற்றாம்" என்றருளினார் அருணந்தி சிவாசாரியர்.

சிவஞானபோதம் வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்பவற்றின் சாரமாக விளங்கும் தன்மையதென்பதைப் புலப்படுத்துவது,

"வேதம் பசு அதன் பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளூறு நெய் போதம்மிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணை மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்"

என வரும் பாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞான சித்தியார்

***

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் மிகப்பெரிய நூலாக விளங்குவது, மெய்கண்ட தேவரின் மாணாக்கர் பல்லோருள்ளும் சிறந்த அருள்நந்தி தேவநாயனார் அருளிச்செய்த சிவஞானசித்தியாராகும். இது சிவஞானபோதத்தின் வழிநூல் ஆகும். வரலாற்றுண்மைப்படியும், இந்நூற் சுபக்கப்பாயிரச் செய்யுள் ஒன்றில், "மெய்கண்டான் நூல் சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்" என்று வருவதன்படியும் இந்நூல் சிவஞான போதத்திற்கு வழிநூலாதல் பெறப்படும். அதற்கேற்ப மெய்கண்டார் கைக்கொண்ட நூலமைப்பு முறை, பொருளொழுங்கு முறைகள் அப்படியே இதிற் பின்பற்றப்படுகின்றன. மெய்கண்டார் நூலிற் பிரயோகிக்கப்பட்ட அளவைகளே இங்கும் பிரயோகம் பெற்றுள்ளன. அவர் சுருக்கிச் செறிவாயுரைத்த கருத்துக்கள் இங்கு விளக்கப் பெற்றுள்ளன. அதற்கேற்றபடி யாப்பும் விருத்தப்பாவாக மாற்றம் பெற்றுள்ளது.

"சிவஞான சித்தியார்" என்னும் பெருநூல் பரக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகளை உடையது. அருணந்திசிவாசாரியார் தமது சிவஞான முற்பகுதியாகக் பரபக்கத்தையும், பிற்பகுதியாகச் சுபக்கத்தையும் படைத்தருளியுள்ளார். எனினும் இருபகுதிகளின் தொடக்கத்தில் பாயிரம் வாழ்த்துப் பாடல்கள் என்பவற்றைத் தனியே இயற்றியுள்ளார்.

## பரபக்கம்

சிவஞான சித்தியாரின் பரபக்கம், பாயிரப் பகுதியில் பதினொரு விருத்தங்களும், நூற்பகுதியில் இருநூற்றுத் தொண்ணூறு விருத்தங்களுமாக முந்நூற்றொரு (301) விருத்தச் செய்யுட்களைக் கொண்டு விளங்குகின்றது. இப்பரபக்கப் பகுதியில் உலகாயதன் முதல் பாஞ்சராத்திரி ஈறாகவுள்ள பதினான்கு சமயவாதிகளின் சமயக் கோட்பாடுகளை விளக்கி. ஒவ்வொன்றின் கீழ் அவர்கள் கோட்பாட்டின் குறைபாடுகள் சுட்டி மறுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபக்கம் பிறசமயங்களை மதமும் மறுதலையுமாக வைத்து மறுக்கின்றது. "மதம்" என்னும் பகுதியுள், அந்தச் சமயத்தின் கொள்கைகள் அதிற் சொல்லப்படும் முறையிலே சொல்லப்படுகின்றன. பிற மதக் கோட்பாடுகளைக் கூறுங்கால் அச்சமயவாதியாகவே நின்று அருணந்திசிவாசாரியார் கோட்பாடுகளை விளக்கியுள்ளமை நயக்கத்தக்கதாகும். "மறுதலை" என்னும் பகுதியுள் அக்கொள்கைகள் தருக்க முறையில் தக்கவாற்றான் மறுக்கப்படுகின்றன. இப்பரபக்கப் பகுதி மறுப்பு நூலாய் அமைதலின், இதன்கண், நகைச்சுவை முதலிய இலக்கியச் சுவைகளோடு கூடிய, பலவகைச் சந்தங்களால் அமைந்த, பாடல்களைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக உலகாயத மதங்கூறுமிடத்து, உலகாயதன் வருகையை, "மகளிர் இன்பமே வீட்டின்பம்" எனக்கொண்ட அவனது கொள்கைக்கு ஏற்ப, "சந்தணை புயத்து மணமாலைகள் தயங்க உந்தி உலகத்து உலகாயதன் உரைப்பான்" என ஆசிரியர் வருணிக்கின்றார். இங்கு "மணமாலைகள்" என்பது "வாசனை பொருந்திய மாலைகள் எனப் பொருள் தரினும், பலமகளிர் சூட்டிய பல மணமாலைகள்" என்னும் நயத்தையும் தருகின்றது. மேலும் "உந்தி" என்பது, "உரைப்பான்" என்பதனோடு இணைந்து "முற்பட்டு வந்து கூறுவானாயினன்" எனப் பொருள் தரினும், "உந்தியுலகத்தில் உலகாயதன்" என்று இயைந்து, மகளிரது "உந்தியுலகத்தில் மூழ்கிக் கிடக்கும் உலகாயதன்" என்னும் நயத்தையும் தந்து நகை விளைத்தலைக் காணலாம். மற்றும் இந்நூற்கண் இவ்வாறமைந்துள்ள பாடல்கள் பலவாகும்.

மாயாவாதி மத மறுதலைக்கண் "நானே பிரம்மம்" என்னும் கூற்றின் மறுப்புக்குத் தோற்றுவாய் செய்து கொள்ளுமிடத்து, "உயிரே கடவுள் எனின், பாசபந்தமும், அதனின்றும் விடுதலையடையச் செய்வதற்குரிய சாதனங்களும் அச்சாதனங்களாற் பெறும் பயனும் அவ்வுயிர்க்கு வேண்டாவாய் முடியுமாதலின், அங்ஙனம் கூறுதல் பொருந்தாது" என்னுங் கருத்தினையுடைய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏகம் நானென இயம்பி இப்படி அறிந்து முத்தியடை மின்னென
மோகமான உரை சோகம் இன்பொடு முடிந்திடாது மலடாகிய
காக மானது கருங்க லின்தசை பறித்தழுங்கரிய குஞ்சுதன் *
தாக மார்பசி தணிக்க வாயிடை கொடுத்த தென்றுரைசெய்
தன்மையே"

என்னும் செய்யுள் எள்ளல் பற்றித் தோன்றும் நகைச் சுவையினை நன்கு விளக்குகின்றது. "அஹம் பிரஹ்மாஸ்மி" என்னும் மகாவாக்கியத்திற்கு ஒரு ஞானாசிரியன், "உயிரே கடவுள்" என விளக்கங்கூறி உபதேசித்துத் தன் மாணாக்கர்களை ஈடேற்ற நினைப்பின், அதனால் உபதேசம் செய்பவனும், அதனைப் பெற்றவனும் வேறு வேறு இலையாகப் பயனும் இல்லையாய் முடியும். முடியவே, வறியான் ஒருவன் முயன்று பொருள் தேடிச் செல்வனாகமாட்டாது, "நானே செல்வமுடையேன், செல்வமுடையார் என்னின் வேறில்லை" என்று எண்ணி வறுமைத் துன்பத்தையே செல்வத்தாற் பெறும் இன்பமாக நுகரும் முறைமை போலப் பந்தத்தையே வீடாகப் பற்றிக் கிடைக்கும் நிலையே உண்டாகும் என்பது இச்செய்யுளின் பொருளாகும். இவ்வாறு பரபக்கத்துட் காணப்படும் நுண்பொருட்கள் பற்பலவாகும்.

## சுபக்கம்

சுபக்கம் முந்நூற்றிருபத்தெட்டுச் செய்யுட்களை உடையது. சுபக்கம் தன் கொள்கையை விளக்குவதாகலின், அதன் கண் ஆழ்ந்தும் அகன்றும் உள்ள பொருள்கள் மல்கிக் கிடக்கின்றன. செய்யுட்களும் ஆற்றொழுக்குப் போலத் தொடர்ந்து ஒரே வகையான சந்தத்தில் அமைதியாகச் செல்கின்றன. மங்கல வாழ்த்தைத் தவிர்த்து, அடுத்த செய்யுள் முதல் இருநூற்றைம்பத்தொரு செய்யுட்கள் ஒரே வகையான அறுசீர் விருத்தங்களாய் உள்ளன. அளவையியலுள் ஒரு சில செய்யுட்களும், இடையில் ஒரு செய்யுளும் இசை சிறிது வேறுபட்ட அறுசீர் விருத்தங்களாகும். இந்நூற்றைம்பத்திரண்டு செய்யுட்களுக்குப் பின்னுள்ளன. யாவும் எண்சீர் விருத்தங்களே. இங்ஙனம் இறுதிப் பகுதியை எண்சீர் விருத்தங்களாகக் கொண்டு இயற்றியது அப்பகுதியிற் கூறப்படும் பொருள்கள் முன்னே கூறி வந்த பொருளினும் சிறப்புடையனவாதல் பற்றியேயாம். இந்நூற் சிறப்பினை "ஓர் விருத்தப்பாதிபோதும்" எனச் சிவபோகசாரத்துட் கூறப்பட்டதால் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபக்கத்தின் தொடக்கத்தில் "அளவையியல்" என்னும் ஒரு பகுதியை ஆசிரியர் அமைத்துள்ளார். அது சைவசித்தாந்தத்தின் அளவை முறையை நன்குணரப் பெரிதும் பயன்படுவதாகும். "வைசேடிகம், நையாயிகம்" என்னும் வடமொழி இருவகைத் தருக்க நூல்களைப் பல்லாண்டு வருந்திக் கற்றுணர வேண்டுவனவற்றை இப்பகுதியால் மிக எளிதில் உணரலாகும். அன்றியும் தருக்கநூலின் சில பொருந்தாக் கொள்கைகளைப் பொருந்துவனவாகக் கொள்ளும் மயக்கவுணர்வும் இதனால் நீங்குவதாகும். இப்பகுதி, சிவஞான போதத்தின் முதல் இயலாகிய பிரமாண இயலின் பொருளை நன்குணர்தற்குக் கருவியாகச் செய்யப்பட்டது.

இதற்குப் பின்னர், முதல்நூலின் பொருளை முறையாக விளக்கத் தொடங்கி, அந்நூலின் ஒவ்வொரு சூத்திரப்பொருளை ஒவ்வோர் அத்தியாயமாகக் கொண்டு அவ்வத்தியாயங்கட்கு, "முதற்சூத்திரம்" இரண்டாம் சூத்திரம்" என்ற வகையில் பெயரிட்டுப் பன்னிரண்டு அத்தியாயங்களால் அதனை ஆசிரியர் முடிக்கின்றார். சூத்திரம் என்பது இதன்கண் இருமடியாகு பெயராய், முதற்கண் சூத்திரப் பொருளையும் பின்னர் அதனை விளக்கும் அத்தியாயத்தினையும் குறிக்கும்.

திராவிட மாபாடிய கருத்தராகிய மாதவச் சிவஞான சுவாமிகள் "சிவஞான சித்தி சிவாகமாந்தங்களுக்கு எல்லாம் உரையாணி எனச் செய்யப்பட்டு நிலவுவது" எனக் கூறியுள்ளமை சிவஞான சித்தியாரின் சிறப்பை உணர்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபா இருப∴து

***

அருணந்திசிவாசாரியார் இயற்றியுள்ள மற்றொரு நூல் "இருபா இருப∴து" ஆகும். வெண்பா, அகவற்பா என்ற இருவகைப் பாக்களும் ஒன்று விட்டொன்றாக வரும் இருபது பாக்களில் அந்தாதித் தொடையில் அமைந்த நூல் இதுவாகும். அருணந்திசிவாசாரியார் தம் குருவாகிய மெய்கண்ட தேவரிடம் ஐயம் தெளிதற்காகச் சில வினாக்களை வினாவுவதும், அவற்றிற்கு மெய்கண்டதேவர் விடையளிப்பதுமான வினாவிடைப் பாணியில் அமைந்தது இந்நூலாகும். சிவஞானசித்தியாரிற் சொல்லியடங்காத சைவசித்தாந்த நுண்பொருளை வெளிப்படுத்துவதற்கு அருணந்திசிவாசாரியார் மேற்கொண்ட ஓர் உபாயமே இந்நூலின் தோற்றம் எனலாம். சைவசித்தாந்த அடிப்படைகள் பற்றிய எல்லா வினாக்களுக்கும் தருக்கரீதியாகவும், பகுத்தறிவுக்கு ஏற்ற முறையிலும் விடை அளித்திருப்பதுதான் இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

சைவசித்தாந்தத்தில் குருவுக்கு முதன்மை கொடுக்கப் பட்டுள்ளது. அந்த மரபில் தமது குருநாதராகிய மெய்கண்டதேவரைச் சிவமாகப் போற்றிக் குருவணக்கம் செய்கின்றார். சிவனே மானுடச்சட்டை தாங்கி மெய்கண்ட தேவனாகத் தோன்றித் தமக்கு அருள்பாலித்ததாக இருபா இருப∴து மூலம் ஆசிரியர் நமக்கு உணர்த்துகின்றார்.

இந்நூலில் சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்பவற்றின் இயல்புகளும், பாசநீக்கம் சிவப்பேறு என்பனவும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

இறைவன் உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய், இருந்து உயிர்களை உய்விக்கின்றான் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். அதனால் ஏற்படும் ஐயங்களும் விடைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் இடம்பெறும் சைவசித்தாந்தம் பற்றிய முக்கியமான வினாக்களை இங்கு நோக்குதல் தகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொடக்கமில் காலந்தொட்டு என்னைவிட்டு நீ என்றுமே நீங்கி நின்றது இல்லையென்றால் அறியாமை, எனக்கு எப்படி ஏற்பட்டது. "நான் மல மறைப்பிற்கு உட்பட்டபோது எனக்கு வேறாய் நின்று அறிவிப்பாயா? என்னோடு கூடி உடனாய் நின்று அறிவிப்பாயா?," "ஆணவ மல நீக்கமே பக்குவம் என்று நீ கூறுவாயாயின் அம்மலம் என்னை விட்டுத் தானே நீங்குகிறதா அல்லது நானே அதனைவிட்டு நீங்குகிறேனா?", "அறிவு, அறியாமை என்ற இரண்டும் என்னிடம் கலந்து நிற்பதைக் காண்கிறேன். நான் அறிவை உடையவனா? அல்லது அறியாமை உடையவனா?", "எனக்குள்ள இயல்பான குணம் யாது?", "எட்டுக் குணங்களை உடைய ஆணவ மலம், ஏழு குணங்களையுடைய மாயாமலம் ஆறு குணங்களை உடைய கன்மம் என்னைவிட்டு நீங்காமல் தம் வழியில் என்னை இழுத்துச் சென்று தம் வயமாக்கி அடிமைப்படுத்தித் துன்புறுத்துகின்றன. அவை சடப்பொருள் - அவை தாமே வந்து என்னைச் சேரமாட்டா. எனக்குத் துன்பத்தைக் கொடுக்கும் அவைகளை விரும்பி நானும் சேரமாட்டேன். நீயோ மலங்களுக்கு அப்பாற்பட்டவன் நீயும் அவற்றை என்னோடு சேர்க்கமாட்டாய். அப்படியானால் இந்தப் பாசங்கள் எனக்கு எப்படி ஏற்பட்டன", "ஆணவமலத்தை உயிர் காண்பது எவ்வாறு? எப்படி அறிய முடிந்தது. உயிரின் உண்மை இயல்பு யாது? என்னைவிட்டு, இறைவனே! நீ நீங்காது இருக்கிறாய் என்று கொள்வதா? அடியேனிடத்து நீ நிற்கவில்லை என்று கொள்வதா? ஆணவ மலம் முத்தியில் கெட்டது என்று கொள்வதா? அல்லது கெடவில்லை என்று கொள்வதா? முற்பிறவியில் நான் செய்த வினைப்பயன் தானே வந்து என்னைக் கூடுமா? அல்லது வினைப்பயனை நான் சென்று கூடுவேனா அல்லது எனக்கு வினைப்பயனை யார் ஊட்டுகிறார்கள்? என்னிடத்து இருவினை ஒப்பு நிகழ்ந்தபோது என்னிடமிருந்து நீங்கின வினைகள் யாவை? நல்வினை, தீவினை என்னைவிட்டு நீங்கியபோது எஞ்சிய பலனை யாருக்கு ஊட்டுவாய்? எல்லா ஆன்மாக்களும் உனக்கு அடிமையே, அப்படியிருக்க உன்னை நினைந்திருப்பவர்களுக்கு அருள்கிறாய். உன்னை நினையாதவர்க்கு நீ அவர்களோடு உடனாய் இருந்தும் மறைந்து நிற்கிறாய். ஏன் இந்த வேறுபாடு? ஆகிய முக்கிய வினாக்கள் மட்டுமன்றி அவற்றிற்கான விடைகளும் நுட்பமாக இந்நூலில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞான சித்தியாரைக் கற்றவர்களுடைய அறிவை அளக்கும் சோதனை வினாத்தாள் என இந்நூலைக் கூறலாம் என்பர் க.வச்சிரவேல் முதலியார்.

***

# உண்மை விளக்கம்

***

உண்மை விளக்கம் எனும் நூல் சித்தாந்த சாத்திரம் என்னும் நூற்தொகுப்பில் ஆறாவது நூலாக வைத்தெண்ணப்படும் அரிய சிறிய சித்தாந்த சாத்திர நூலாகும். இந்நூல் மெய்கண்ட தேவரின் மாணவருள் ஒருவராகிய திருவதிகை மனவாசகங்கடந்த தேவநாயனார் என்பவரால் அருளிச் செய்யப்பெற்றது.

காப்புச் செய்யுள் ஒன்றுடன் ஐம்பத்தி நான்கு வெண் பாக்களால் அமைந்த இந்நூல், "மெய்காட்டி....." எனத் தொடங்குகிறது. "வாழ்ந்தேன்..." எனத்தொடங்கும் பாடற் குறிப்போடு முடிகிறது. இதனால் சைவசித்தாந்தம் பயில்வோரைப் பொய்யான வாழ்விலிருந்து விலக்கி உண்மையான வாழ்வைத் தலைப்படுமாறு செய்தலை நோக்கமாக உடையது இந்நூல் என்பது விளங்கும். சைவசித்தாந்தச் செந்நெறியினர் உணரவேண்டிய உண்மைகள், பலவற்றையும் சுருக்கமாக விளக்கிக் கூறுதலின் இந்நூல் உண்மை விளக்கம் எனப்பெயர் டெற்றதெனலாம். இந்நூலிற்கு "மெய்கண்ட சந்தான அனுபவத்திரட்டு" என்னும் பெயர் அறிஞர் சிலரால் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு முதலில் விநாயகப் பெருமானை வணங்கி ஆசிரியர் நூலைத் தொடங்குகின்றார்.

இந்நூற்கண் அமைந்த முதற் செய்யுள் தம் குருமூர்த்தியாகிய மெய்கண்ட தேவரிடத்து மாணவன் சில வினாக்களை வினாவுவதற்குரிய விண்ணப்பத்தைக் கூறுவதாகும். இவ்வினாக்கள் உண்மைப் பொருளை அறிய வினாவுவதால் அவற்றைச் "சுத்தவினா" என்று ஆசிரியர் அருளுகின்றார். நன்மாணாக்கர் ஒருவர் சைவசித்தாந்தப் பொருள் பற்றி அறியாதும், ஐயுற்றும் வினாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களாகவும், அவற்றிற்கு மெய்கண்ட தேவராகிய குருமுதல்வர் அம்மாணாக்கரது உள்ளம் தெளிவு பெறும் வகையில் கூறும் விடைகளாகவும் இந்நூலினை ஆசிரியர் அமைத்துக் கொள்கின்றார். இவ்வாறு சீடர் ஆசிரியரிடையே நிகழும் உரையாடல் முறையில் வைத்து எல்லோரும் விளங்கிக் கொள்ளும் படியாகச் சைவ சித்தாந்த உண்மைகள் இந்நூலில் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்நூல் பாடல் தொகையால் சிறிதாக இருப்பினும், மாணாக்கர் கேட்பதாக அமைந்த ஏழுவினாக்களும், அவற்றின் இயைபாகக் கேட்கப்படும் இருவினாக்களும் விடையிறுப்பதாக உள்ளது. அவ்வினாக்கள் அமைந்திருக்கும் முறையும் அதற்கு ஆசிரியர் விடை கூறும் முறையும் எளிமையும் சுவையும் தருவனவாகும். இறுதியாகத் திருவைந்தெழுத்தின் பெருமையைக் கூறும் ஆசிரியர், அதனால் பெறும் முத்திப் பேற்றின் விளைவையும் தருவதோடு அதற்கு காரணமாய் "குருலிங்க சங்கம" வழிபாட்டினையும் கூறி நூலை நிறைவு செய்துள்ளார். இவ்வரிய பொருள்களுள் "நாதன் நடம்" எனக் கூறப்பெறும் கூத்தப் பெருமானின் ஆடல்தகைமையும் அதன் பயனும் இடம் பெற்றிருப்பது இந்நூற்கு அமைந்த தனிச் சிறப்பாகும்.

சைவசித்தாந்த ஆன்மீகக் கல்விக் கோட்பாடுகள் எவ்வாறு போதிக்கப்பட்டன என்பதற்கு "உண்மை விளக்கம்" ஓர் உரைகல்லாக விளங்குகின்றது. சைவசித்தாந்த அடிப்படைகளை அறியப்புகும் தொடக்க நிலையினர் முதன் முதலாகப் பயிலுதற்குரிய அடிப்படைச் சாத்திரநூலென்ற சிறப்பிற்குரியது உண்மை விளக்கம் ஆகும்.

இந்நூலில் வரும் வினாக்கள் எட்டு ஆகும். இவ்வெட்டு வினாக்களும் யாவை என்பதும், அவற்றிற்குரிய விடைகள் அமைந்துள்ள செய்யுட்கள் எவை என்பதும் கீழே தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வினாக்கள் | விடைகள் |
|---|---|
| முதல்வினா: முப்பத்தாறு தத்துவங்கள் பற்றியவை | 4 முதல் 21 வரை முடிய உள்ளவை (18 செய்யுட்கள்) |
| இரண்டாம், மூன்றாம் வினா ஆணவம், கன்மம் பற்றயவை | 22ம் செய்யுள் (ஒரு செய்யுள்) |
| நான்காம் வினா உயிர் பற்றியது | 24 முதல் 26 முடிய உள்ளவை (3 செய்யுட்கள்) |
| ஐந்தாம் வினா இறைவன் பற்றியது | 27 முதல் 29 முடிய உள்ளவை (3 செய்யுட்கள்) |
| ஆறாம் வினா நாதன்நடம் பற்றியது | 31 முதல் 38 வரை உள்ளவை (8 செய்யுட்கள்) |
| ஏழாம் வினா சோம்பர் இருப்பது சுத்தவெளியிலே பற்றியது. | 39 முதல் 44 வரைஉள்ளவை (6 செய்யுட்கள்) |
| எட்டாம் வினா முத்திநிலை பற்றியது | 45 முதல் 48 வரை உள்ளவையும், 50 முதல் 52 வரை உள்ளவை. ( 07 செய்யுட்கள்) |

சைவ சித்தாந்த அடிப்படைகள் பற்றித் தான் கேட்ட வினாக்களுக்கெல்லாம் ஆசிரியர் சரியான விடை அருளியதைக் கேட்ட மாணவன், தன் ஆசிரியராகிய மெய்கண்ட தேவருக்கு நன்றி தெரிவிக்கும் செய்யுளாக வருவது,

"வாழ்ந்தேன் அருட்கடலே வற்றாய் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில்- சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன் மெய்கண்ட நாதனே
உண்மைத் தவப்பயனே உற்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற 53வது உண்மை விளக்கப் பாடலாகும். மெய்கண்ட தேவரே! நீர் அருளிய மெய்ப் பொருளைக் கேட்டமையால் பிறவிக் கடலில் அழுந்தாது வீடுபேறு அடையும் வாழ்வைப் பெற்றேன் என்பது இப்பாடலின் நுண் பொருளாகும்.

உண்மை விளக்கம் சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் உடைய நூலாக இருத்தலின் உரையின் துணையில்லாமல் மாணவர்கள் இந்நூற் பொருளை விளங்கிக்கொள்ளுதல் அரிதாகும். இதன் காரணமாக இந்நூலுக்குப் பல உரைகள் எழுந்துள்ளன.

சைவசித்தாந்த மகா சமாஜமும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் வெளியிட்டுள்ள சித்தாந்த சாத்திரப் பதிப்புக்களில் உண்மை விளக்கம் பழைய உரையோடு இடம்பெற்றுள்ளது. இவ்வுரை சுருங்கிய பதவுரையாக உள்ளது. ஒரு மொழிப்புரையும் உண்டு.

க.வச்சிரவேல் முதலியார் இந்நூலுக்குத் தெளிவான விரிவுரை வரைந்துள்ளார். அவ்வுரையை முதலில் தருமையாதீனம் 1958ஆம் ஆண்டில் வெளியிட்டது. பின்பு அவர் அவ்வுரையில் சிற்சில மாற்றங்களைச் செய்து 1972ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனம் வழியாக வெளிவரும்படி செய்தார்.

திரு.ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை இந்நூற்குப் புத்துரை கண்டுள்ளார். அது பதவுரையாக இருப்பினும் பலநுண் பொருள்களை அதிற் கண்டு மகிழலாம். இவ்வுரை 1960இல் வெளியாயிற்று.

குறிப்பிடத்தக்க மற்றொரு உரை தொண்டை மண்டல ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (முன்பு முத்து.சு.மாணிக்கவாச முதலியார்) எழுதி உதவிய உரையாகும். முறையான சாத்திரப் பயிற்சி உடையவர்களே இவ்வுரையை முழுமையாக உணர்ந்து கொள்ள இயலும். இவ்வுரையை முதலில் மாணிக்கம் பதிப்பகத்தார் 1967இல் வெளியிட்டனர். அண்மையில் திருமதி.சுவர்ணா சோமசுந்தரம் அவர்களின் முயற்சியால் இது மறுபதிப்புக் கண்டுள்ளது... பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி எழுதிய உரையைக் காசிமடம் 1979இல் வெளியிட்டது. ந.ரா.ஆடலரசு உண்மை விளக்கத்தை மூலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கக் கட்டுரையுமாக அமைத்துத்தர, சென்னை தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றம் அதனை1987இல் வெளியிட்டது.

திரு.சி.சு.மணி எண்பவர் உண்மை விளக்கத்திற்கு எழுதிய தெளிவுரையை அருள் நந்திசிவம் அருட்பணி மன்றம் 1992இல் வெளியிட்டது.

முனைவர் ஆ.ஆனந்தராசன் என்பவர் எழுதிய தெளிவுரையை அருள்நந்திசிவம் அருட்பணிமன்றம் 1996இல் வெளியிட்டது. இது எளிய உரைக்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றது.

உண்மை விளக்கத்தை ஆங்கிலத்தில் தரும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். கொ.நீ.சிங்காரவேலு அவர்கள் இந்நூலுக்கு ஆங்கிலத்தில் விளக்கம் எழுதியுள்ளார். அவ்விளக்க நூல் சைவசித்தாந்தப் பெருமன்றம் வாயிலாக வெளிவந்துள்ளது.

****

# சிவப்பிரகாசம்

சிவப்பிரகாசம், உமாபதிசிவாச்சாரியர் அருளிச்செய்த சித்தாந்த சாத்திர நூல்களுள் தலைசிறந்தது. இது பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் ஏழாவதாக வைத்து எண்ணப்படும். இந்நூல் சிவஞானபோதத்தின் சார்பு நூல் அல்லது புடைநூல் என்று வழங்கப்பெறும்.

சிவப்பிரகாசம் 'புடைநூல்" என்று வழங்கப்படுவதற்கேற்பச் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய நூல்களை அடியொற்றி, இறைவன் திருவருளால் உமாபதிசிவாசாரியருக்கு உணர்த்தப்பட்ட செய்திகளும், ஆகம நூல்களில் காணப்படுகின்ற கருத்துக்களும் கலந்து எழுதப்பட்ட நூலாக இந்நூல் விளங்குகின்றது. இம் மூன்று நூல்கள் பற்றி பொ.கைலாசபதி "போதம், சித்தி, பிரகாசம்: முறையே விழிக்கச் செய்து, சிந்திக்கச்செய்வது, போதத்துக்குப் புகட்டுவதாம். படிக்கிரமத்தில் அமைந்தவை" என்று விளக்கினார். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கிக் கருத்தில் உறைதிருவருளும் இறைவன் நூலும் கலந்து" என்று இந்நூலின் பதினொராவது செய்யுளில் உமாபதிசிவாசாரியார் எடுத்துரைப்ப தாலறியப்படும்.

சிவப்பிரகாசம், காப்புச் செய்யுள் தவிர மொத்தம் நூறு விருத்தப் பாக்களால் ஆனது. இது பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்று இரண்டு பகுதிகளைக் கொண்டது. பொது அதிகாரத்தில் ஐம்பது பாடல்களும் உண்மை அதிகாரத்தில் ஐம்பது பாடல்களும் உள்ளன.

சிவப்பிரகாசம் என்ற பெயரை இந்நூலுக்கு உமாபதி சிவாசாரியரே சூட்டினார் என்பது இந்நூலில் "ஆசில் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே" (செய்யுள்,11) என்று கூறுவதனாலும், நூலின் இறுதியில் இச் சிவப்பிரகாச நன்னூல் (செய்யுள், 100) என்று அவரே குறிப்பிட்டதிலிருந்தும் தெரிய வருகின்றது.

சிவப்பிரகாசம், முதல் நூலாகிய சிவஞானபோதத்திலும், வழிநூலாகிய சிவஞானசித்தியாரிலும் எடுத்தோதாமல், குறிப்பால் பெற வைத்த பல பொருள்களை எடுத்தோதி அரிய சைவசித்தாந்த சார்பு நூலாக அமைந்துள்ளது.

சிவப்பிரகாசம் பெரும்பாலும் மெய்கண்டதேவரின் சிவஞான போதத்தை அடியொற்றி அமைந்துள்ளது என்பது முதல் நூற்பா தொடங்கி பன்னிரண்டாம் நூற்பா வரை காணப்படும் செய்திகள் நிரல்பட அமைந்துள்ளமையிலிருந்து புலனாகின்றது. ஆயினும் ஆங்கே மூல நூலிலிருந்து அமைப்பு முறையும், செய்திகளும் சற்றே விரித்தும் சுருக்கியும் முறை மாற்றியும் தரப்பட்டுள்ளமையை உணரலாம். சான்றாகச் சிவஞானபோதத்தின் முதல் நூற்பா, சிவப்பிரகாசத்தில் பதின்மூன்றாவது பாடலில் தொடங்குகின்றது. அதற்கு முந்திய பாடல்கள் அவையடக்கமாக அமைகின்றன. ஆனால் எட்டாம் பாடல் தொடங்கிப் பத்தாம் பாடல் வரையும் தீக்கை முறையை ஆசிரியர் விளக்குகிறார். வைப்பு முறையில் உள்ள மாற்றத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். முதல், வழி நூல்களுக்கு முரணாகாமலும் அதே நேரம் சிறு சிறு மாறுபாடுகளோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாசம் விளங்குகிறது. இந்நூல் புடைநூலுக்கு விதிக்கப்பட்ட இலக்கணத்தோடு பொருந்துவதை "இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித் திரிபுவேறுடையது புடைநூலாகும்." என்ற நன்னூல் நூற்பாவாலறியப்படும். இதில் இருவர் நூல் எனப்பட்டது முதல் நூலையும், வழிநூலையும் குறித்து நிற்கின்றது.

திருக்கயிலாய பரம்பரையில் வழிவழி வந்த சந்தான குரவர்கள் இன்னார் இன்னார் என்பது இதன் பாயிரத்தால் பெறப்படுகின்றது. கிரியை என்பன எல்லாம் "ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்பதும், சிவஞானம் எனப்படுவதும், பரஞானம், அபரஞானம் என இருவகைப்படும் என்பதும், பரஞனானமாவது உயிர்தோறும் அறிவுக்கறிவாய்க் கலந்து நின்று பாசப்பற்றறுத்துப் பாரிக்கும் திருவருளே என்பதும், அபரஞானம் என்பது அதன் தடத்தவடிவாய் அதனை விளக்கும் சிவாகமம் அல்லது திருமுறைகள் என்பதும், சிவஞானபோதம் அபர ஞானமாகிய சிவாகமார்த்தங்களின் முடிந்த முடிபாகும் என்பதும் இதன் பாயிரத்தில் பெறப்படும் அரிய உண்மைகளாகும். இந்நூலில் இடம்பெறும் "புறச்சமயத்தவர்க்கு இருளாய் அகச் சமயத்து ஒளியாய்" எனத்தொடங்கும் திருவிருத்தம் குறிப்பிடத்தக்கது. இது சமயங்களைப் புறச்சமயம் என்றும் அகச்சமயம் என்றும் பாகுபடுத்திக் கூறும் முன்னைய வழக்கத்தைச் சுட்டிச் சைவத்திறத்தின் தனிச்சிறப்பையும் சித்தாந்த சைவமெய்யியலின் தனிச்சிறப்பையும் இனிது எடுத்துக்காட்டுகின்றது. "தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா எனவரும் பாயிரப்பாடல் ஊன்றி எண்ணுதற்குரியது. இக்கருத்து, காலம் தோறும் சைவசித்தாந்த சிந்தனைகளை வளர்த்தெடுப்பதற்கு ஓர் அரிய ஆதாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பயன்

***

திருவருட்பயன், சைவசித்தாந்தக் கோட்பாடுகளை நூறு குறட்பாக்களில் தெள்ளத் தெளிய இனிது விளக்கும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. இந்நூலினை அருளியவர் கொற்றவன் குடியில் தோன்றிய உமாபதி சிவாசாரியர் ஆவர்.

இந்நூல் திருவருளைப் பற்றியும். அதனது பயனைப் பற்றியும் விளக்கிக் கூறுதலின் திருவருட்பயன் எனப்பெயர் பெற்றது. இந்நூல் பத்து அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவை. பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை, அருளதுநிலை, அருள் உருநிலை, அறியும் நெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பன ஆகும். ஒவ்வொரு அதிகாரமும் பத்துக் குறட்பாக்களை உடையது. கடவுள் வாழ்த்துடன் 101 குறட்பாக்கள் இந்நூலில் அமைந்துள்ளன. இந்நூலின் முதல் ஐந்து அதிகாரங்களையும் பொது எனவும். பின்னைய ஐந்து அதிகாரங்களையும் சிறப்பு எனவும் வழங்குவர்.

## நுவலும் பொருள்

இந்நூலில் உள்ள முதல் மூன்று அதிகாரங்களும் முறையே இறை. உயிர், தளை ஆகிய முப்பொருள்களின் இலக்கணங்களைக் கூறுவனவாகும். நான்காம் அதிகாரம் இறைவனின் திருவருளே உலகில் சிறந்ததும் உயர்ந்ததும் ஆகும் எனக் கூறுகின்றது. ஐந்தாவது அதிகாரம் அவ்வருளே உயிர்கள் மாட்டு வைத்த கருணையால் குருவாக எழுந்தருளி வந்து உயிருக்கு உறுதியைத் தரும் எனக் கூறுகின்றது. ஆறாவது அதிகாரம் அவ்வாறு அறிவிக்க அறியும் உயிர் அறியும் நிலையை விளக்குகின்றது. ஏழாவது அதிகாரம் அதனால் உயிர்பெறும் விளக்கத்தைக் கூறுகின்றது. எட்டாம் அதிகாரம் அவ்விளக்கம் பெற்ற உயிர், இன்புறுமாற்றை விரித்துரைக்கின்றது. ஒன்பதாம் அதிகாரம் பெற்ற இன்பத்தை நெகிழவிடாது தொடர்ந்து நின்று பயன் பெறுதற்குத் திருவைந்தெழுத்தை ஓத வேண்டும் எனக்கூறுகின்றது. இவ்வாறு திருவருளால் படிப்படியாக உயர்ந்த உயிர், இறைவன் திருவடிக்கண் அணுகியபின் எவ்வாறு இருக்கும் என்பதைப் பத்தாம் அதிகாரமாகிய அணைந்தோர் தன்மை விளக்குகின்றது. இனி இந்நூலில் அமைந்துள்ள சைவசித்தாந்தக் கோட்பாடுகளைத் தனித்தனியே காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிமுதுநிலை

பதிமுதுநிலை என்பது பதியினது முதுமையான நிலை என விரியும். அஃதாவது, இறைவன் உயிர்களோடு அநாதியாகவே அத்துவிதமாக நிற்கும் நிலையினை இவ்வதிகாரம் விளக்குதலின் இது பதிமுதுநிலை எனப்பட்டது. அகரம் தனித்தும் இயங்கவல்லது, ஏனை எழுத்துக்களோடு இயைந்தும் இயங்க வல்லது. ஏனை எழுத்துக்களுக்கெல்லாம் முதற்கண் நிற்பது அதுபோன்றே இறைவனும் தனித்தும் இயங்கவல்லன். உயிர்களோடு இயைந்தும் இயக்க வல்லன். இவனே உயிர்களுக்கு முதன்மையும் தலைமையும் கொண்டு நிற்பவன். அறிவானவன், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன். தன்னொப்பார் இல்லாதவன், அவன் உண்மை, அறிவு, இன்பம் ஆகியவற்றின் வடிவானவன். அந்நிலையை நிலைபெற்ற உயிகள் யாவும் பெறுதற்குத் துணையாய தன் அருளாற்றலோடு (சத்தியோடு) இயைந்து நிற்பவன். பெரியதினும் பெரியவனாயும், சிறியதினும் சிறியவனாயும் உயிர்கட்குப் பேரருள் வழங்குபவனாயும் அளவிடுவதற்கு அரியவனாயும் விளங்குவதில் அவனுக்கு உவமை அவனேயாவன். இவ்வுலகைப் படைத்தும் காத்தும் உயிர்கட்கு முழுமையாக மலநீக்கம் பெறாதவகையில் தன்பால் அதனை ஒடுக்கியும் நிற்பவனே உயிர்கட்குப் புகலிடமாவான். ஞானியர்க்கு அறிவு வடிவாய் விளங்கும் அவன் மற்றைய உயிரினங்களுக்கு அருவமும் உருவமும் கொண்டு அருள் வழங்கி வருபவனாவன். உணர்த்த உணரும் சிறுமையுடைய உயிர்போலன்றி, எவற்றையும் யாண்டும் முற்றுணர வல்லவனாவன். ஆதலின், அவன், தனக்கு மேலில்லாத தகைமையானவன். வானநாடரும் அறியொணாதவனாய் விளங்கும் அவன், அன்பு மீதூர்ந்த அடியவரிடத்து அகலாது அறிவு வடிவாய் இருப்பது. எரியால் வெப்பமுற்ற நீரில் அதன் வெம்மையைப் பிரிக்க இயலாதவாறுபோல எல்லாவிடத்தும் எல்லாப் பொருள்களிலும் இடையீடின்றி நின்பன். நண்ணினார்க்கு நல்லனாயும் நண்ணாதார்க்கு நலமிலனாயும் விளங்கினும் அவன், ஒருபால் கோடுதலிலன், அவன் பெயர்க்கேற்ப எவ்வுயிர்க்கும் இன்பந்தந்து நிற்பவனாதலால் "சங்கரன்" எனப் பெயர்பெறுவன், பிறவிப் பிணிக்கு மருந்தாகும் அவன், உயிர்களிடத்துப் பிரிவின்றி இயைந்து நிற்பவனாவன், ஆதலின் அவனை, ஐயமின்றி உள்பொருளாகத் தெளிந்து நினைந்து மகிழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரவை நிலை

உயிரவை நிலை என்பது, உயிர் -அவை - நிலை என் விரியும். அஃதாவது உயிர்களாகிய அவற்றின் நிலையை இவ்வதிகாரத்தில் விரித்துக் கூறுதலின் இது உயிரவை நிலை எனப் பெயர் பெற்றது. இதுவரை துறந்தோரையும் இனித்துறக்க இருப்போரையும் எண்ணலுறின் உயிர்கள் இதுவரை பிறந்த நாட்களையும் இனிப் பிறக்க இருக்கின்ற நாட்களையும் கணக்கிட முற்பட்டது போலாகும். இதனால் உயிர்கள் எண்ணில என்பது அறியப்படும். இத்தகைய உயிர்கள் மூவகையாய் பிரித்து உணரப்படும். அவர் மும்மலமுடையார், இருமலமுடையார், ஒருமலமுடையார் எனப்படுவர். இம்மூவரும் ஆணவமாகிய மூலமலத்தை உடையவர். அவர்களுள் மாயை வழிப்பட்ட மும்மலமுடையார் தமக்கு மலப்பிணிப்பு உடைமையை அறியார், நனவில் காணும் பொருள்களைக்கூடக் கனவில் மயங்கிக்காணும் இயல்புடைய உயிர்க்குத் தன்வயம் என்பது ஏது? இந்நிலையில் அதனை ஆற்றலுடையது எனக் கருதுவது எங்ஙனம்? ஐம்பொறிகளின் துணையின்றி எதனையும் அறிய இயலாத உயிர்க்கு அறிவு என்னும் பெயர் வைத்தது பொருந்தாது. காணும் தன்மையற்ற கண்ணுக்கு உலகு, ஒளி, இருள் ஆகிய இவை இருந்தும் என்ன? இல்லாதிருந்தும் என்ன? அது போல, உயிர்களிடத்து உணர்வில்லையாயின், சிவம், மலம், மாயை ஆகிய மூன்றும் இருப்பினும் என்ன? இல்லாதிருப்பினும் என்ன? உயிர்க்குளதாய உணர்வினாலேயே இவற்றை அறியவும் தெளியவும் இயலும். நிலையுடைய பொருளாகிய இறைநிலையில் பொருள்களைச் சாராது. நிலையில் பொருள்களும் அவற்றன ஆதலின், நிலையுடைய பொருளைச்சாரா. இவ்விரண்டும் அல்லாத உயிரே, அவையிரண்டையும் அறிந்தும் தெளிந்தும் பயன் கொள்ளவல்லதாம். இருளில் இருளாகியும், ஒளியில் ஒளியாகியும் நிற்கும் பொருள்கள் பல உள. அவை கண்ணாடி, பளிங்கு முதலியனவாம். இவை போன்றே உயிரும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்பினதாம். ஒளியில் இருந்தும் கூகைக்குக் கண் தெரிவதில்லை. அது போன்றே. மலப்பிணிப்புடைய உயிர்கட்கு இறைவன் உயிர்க்குயிராய் இருந்தும் அவன் நிலை தெரிவதில்லை. காலப்பழமைக்கு எட்டாத காலத்திலிருந்தே மலப் பிணிப்புற்றுக் கிடக்கும் உயிர்கள் அதனின்றும் ' நீங்கி என்று அருள் பெறுமோ அந்தோ! இது வருந்தத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருள்மல நிலை

இருள்மல நிலை என்பது ஆணவமலத்தினது நிலையாம். பத்தாவது குறளில் மாயை, கன்மம் ஆகிய மலங்கள் குறிக்கப்பெறினும் சிறப்புப்பற்றி இருள்மலநிலை எனக் குறிக்கப்பெற்றது. பிறவித் துன்பமும். அதற்குக் காரணமாய் மலங்களும், வீட்டின்பமும் அதற்குக் காரணமாய் இறைவனும் இல்லையென்பது எங்ஙனம்? உலகிலுள்ள பொருள்களை மறைத்து நிற்பது இருள். அதுபோலவே, பிறப்பு இறப்பின் துன்பத்தையும் வீட்டின்பத்தையும் மறைக்கவல்லது ஆணவமாகும். உலகில் காணும் புறவிருளோ பிற பொருள்களைக் காட்டாதேனும், தன்னையேனும் காட்டி நிற்கும். இவ்வாணவமாகிய அகருவிளோ பிறவற்றையும் காட்டாததாகி, தன்னையும் காட்டாதாகும். உயிரொடு இயைந்து நிற்கும் ஆணவம் அவ்வுயிரை மறைத்து நிற்குமேயன்றி உயிர்க்குயிராய இறைவனை மறைப்பதில்லை. பல்லுயிர்களையும் ஆணவம் புணர்ந்து இருந்தும் அவ்வுயிர்த்தலைவர் எவருக்கும் தன்னைக்காட்டாது. இத்தகைய கற்புநிலை அதற்கேயுண்டு. பல சொல்லக் காமுறுவானேன்? உயிர்க்குற்ற அறியாமை அவ்விருளார் தந்ததேயாம். அறியாமையின்றேல் துன்பமில்லை. ஆனால், உயிர்க்கு என்றும் அறியாமை இருந்து வருகிறது. ஆதலால், அதற்குக் காரணமாய் ஆணவமும் இருந்து வருவதேயாம். அவ்வாணவத்தைப் போக்கும் பொருள் உண்டெனில், அவ்வாணவத்தோடு இயைந்திருக்கும் உயிரும் போய்விடும். ஆனால் உயிர் என்றும் நிலைத்து நிற்கும். ஆதலின் ஆணவமும் என்றும் நிலைத்துநிற்பதாம். இவ்வாணவம் இடைக்காலத்தே உயிர்க்கு வந்திருப்பின், அது வீடுபேறடைந்த காலத்தும் வரக்கூடுவதேயாகும். ஆதலின் அது இடையில் வந்ததன்று. ஒளிகொண்டு இருளை விலக்கலாம். அதுபோல, உடல்கொண்டிருக்கும் பொழுதே அவ்வாணவத்தை நீக்க முற்பட வேண்டும். பொழுது விடியுமளவும் விளக்குத் துணையாதல்போல, ஆணவம் நீங்கும் அளவும் உயிர்க்கு இவ்வுடல் துணையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளது நிலை

அருளது நிலை என்பது திருவருளின் தன்மையாம். பொருளைக் காட்டிலும் இவ்வுலகில் இன்றியமையாதது ஒரு பொருளில்லை. அதுபோல, திருவருளைக் காட்டிலும் இன்றியமையாததொரு பொருளில்லை. உலக இயக்கத்திற்குக் கதிரவன் துணையாதல்போல் உயிர்களின் வினையீட்டத்திற்கும், நுகர்தற்கும் திருவருள் துணையாகும். உடம்பு அறிவற்றது. உயிரும் அதனுள் கூடியல்லது அறியவல்லதன்று. இவ்விரண்டையும் இயைத்து இயக்குவது திருவருளாகும். பாற்கடலில் உள்ளமீன் அப்பாலை அருந்தாது எதிரே காணப்படும் இழிவுணவை நாடுவதுபோலத் திருவருட் கடலில் கூடியிருக்கும் உயிர்களும் அத்திருவருளைச் சார்ந்து இன்புறாது உலகியற்பொருள்களில் வேட்கையுற்றுத்திரிதரும். ஐம்பொறிகளும் தாம் உணர்தற்குக் காரணமாய் உயிர் உண்டு என்பதை உணர்வதில்லை. அதுபோன்றே உயிர்களும் திருவருள் உண்மையை அறிவதில்லை. தாம் நடந்து செல்வதற்குத் துணையாக இருப்பது தரை என அறியாது. நடந்து சென்ற கொண்டிருப்பவர்களைப் போல உயிரும் தனக்கு அடித்தளமாய திருவருளை உணர்வதில்லை. அந்நிலை மலையிலிருந்தோர் மலையைத் தேடுவது போலவும், மண்ணிலிருந்தோர் மண்ணைத் தேடுவது போலவும் விண்ணிலிருந்தோர் விண்ணைத்தேடுவது போலவுமாம். திருவருள் விளக்கத்திலிருந்தும் உயிர்அதனை விடுத்து உலகியற் பொருள்களை நாடுவது வெள்ளத்திலிருந்தும் நாவறட்சிக்காக வேறு நீர் தேடுவது போலவும் பாற்பானையின் மீதிருக்கும் பூனை அதில் உள்ள பாலை அருந்தாது, எதிரே இருக்கும் கரப்பினை, அருந்த நினைப்பது போலவாம். காலப்பழமைக்கு எட்டாத காலத்து இருந்தே உயிர் திருவருளோடு இயைந்திருந்தும் அதனுடன் பழக்கம் கொள்ளாத உயிர்க்கு வீடு பேறு என்பது மிகையேயாம்.

## அருளுரு நிலை

அருளுரு நிலை என்பது, அருளே உருவாய குருவினது தன்மையாம் உயிர்ப் பக்குவம் பெறாக்காலத்து உள் நின்றுணர்த்திய பரம் பொருளே பக்குவமுற்ற காலத்துக் காணும் பொருளாக (குருவாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னின்று உணர்த்தவரும். வீட்டிலுள்ள ஒருவர்க்கு நோய் ஏற்படின் அவ்வீட்டிலுள்ளார் உணர்வரேயன்றிப் பிறர் உணரார். அதுபோல உயிர்க்குற்ற மலநோயை உயிர்க்குயிராக விளங்கும் இறைவன் அறிவதன்றிப் பிறர் அறியார். உயிர்க்கு அருளவல்ல இறைவன் குருவடிவில் மறைந்து நின்றே அருளுவன். அதை இவ்வுலகு அறிவதில்லை. இதனை உலகியல் இன்பில் உழல்பவரும், ஆணவமான படல மறைப்பு உடையவரும் ஞான ஒளியைப் பெறாதோரும் அறியார். காட்டிலுள்ள விலங்குகளை, வீட்டில் வளர்க்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு பிடிப்பது போல இறைவனும் வினைவயப்பட்ட மனித இனத்தை மனிதத்தோற்றம் கொண்ட குருவடிவில் வந்தருளுவன். யார் எச்செயலை ஆற்ற இயலுமோ அவர்களிடத்து அச்செயலைச் செய்து முடிக்கவேண்டுவதே "அறிவுடைமை" ஆதலின் வினை நீக்கத்திற்கு இறைவன் ஒருவனே துணை செய்யவல்லன். ஆதலின் அவனையே வேண்டி நிற்றல் வேண்டும். பாம்பு கடிக்கப்பட்டவனிடத்து உளதாகும் நஞ்சு, கீரிப்பிள்ளையால் நீங்குவதில்லை. உரிய மந்திரவாதி யினாலேயே அதனை நீக்கவியலும். அதுபோல, குருவருளே வினை நீக்கவல்லதாம். ஒரு மலமுடையார்க்கு உள் நின்றும், இருமலமுடையார்க்கு முன்னின்றும், மும்மலமுடையார்க்குக் குருவாக எழுந்தருளி வந்தும் இறைவன் அருளுவன். அவனன்றி அதற்கு உறுதுணையாவார் யார்? கதிரவனன்றிச் சூரிய காந்தக்கல்லில் நெருப்புத் தோன்றாதவாறு போல குருவருளால் அன்றி உயிர்க்கு ஞானம் பெறுதல் இல்லை.

## அறியும் நெறி

அறியும் நெறி என்பது, உண்மைப்பொருளை அறியும் நெறியாம். ஒன்றையொன்று ஒவ்வாது வளர்ந்து வரும் நல்வினை, தீவினை ஆகிய இரண்டின் கண்ணும் ஒத்த உவர்ப்பும் அவற்றானாய பயனைத் துய்க்குமிடத்து அதனை ஒப்பக்காணும் உணர்வும் ஏற்படுங்கால் இறைவனின் அருட்சத்திப்பதிவு நிகழும். இறைவன். உயிர்கள், ஆணவம், வினை, தூயதும் தூயதல்லாததும் ஆகிய மாயை ஆகிய இவ்வாறும் என்றும் உள்ளனவாம். வினை செய்வோன் அவனால் செய்யப்படும் இருவினை அவற்றின் பயனாய இன்பதுன்பங்கள், அவற்றின் ஊட்டுவிக்கும் இறைவன் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நான்கையும் நீ உய்தற்கென உணர்வாயாக, உயிர் திருவருளோடு கூடி ஒன்றுபட்டு நிற்கும் முறைமை போல்வதாம். பளிங்குதன் நிறத்தையும் தன்னைச் சார்ந்த பொருள்களின் நிறங்களையும் காட்டுதற்குக் கதிரவன் காரணமாவதுபோல, உயிர் தனக்கு இயல்பாகிய வீடுபேற்றை அடைதற்கும், தான் சார்ந்த பொருள்களின் வழி அழுந்தி நிற்பதற்கும் இடையே ஒளி ஒன்று தேவையாகின்றது. அதைத்போன்றே உயிரும் எதனை உணரினும் அதற்கு ஏதுவாக இறையருள் வேண்டும். பொறிவழிச் செல்லும் புன்மைக்கு உயிரியக்கம் காரணமாவது போல, நெறிவழிச் செல்லுதற்கும் இறையருளே காரணமாகும். இவ்வாறு திருவருளை உணருங்கால் அது எவ்வாறு இருக்குமென்றோ அதுதன்னின் வேறாக இருப்பதென்றோ ஆராயவேண்டாம். உன்னை உருவாக்கும் அத்திருவருளை எண்ணியும் போற்றியும் வருவாயாக. ஞானத்தால் பெறும் இன்பமே இன்பம். அத்தகைய ஞானத்தைக் காணவும், அதன்கண் அடங்கவும் முயலுக. திருவருள் நினக்குக் கிட்டியவாறு உணர்க. உயர்க.

## உயிர் விளக்கம்

உயிர்விளக்கம் என்பது, உயிர் ஆணவமலம் நீங்கப் பெற்றுத்தன் செயலின்றித் திருவருள் வயப்பட்டு விளக்கமுற்று விளங்கும் நிலையாகும். வெப்பத்தால் வெதும்பியவனுக்குத் "தூய நிழலைச் சேர்க" என்று யாரும் சொல்லவேண்டுவதில்லை. அவன் தானே சேர்வன். அதுபோல உலகியல் துன்பங்களில் வருந்தும் ஒருவனுக்கும் திருவருள் நிழல் கண்டதும் அவனுக்கு யாரும் "விரைந்து அதனைப்பற்றுக" என்று சொல்லவேண்டுவதில்லை. தானே அதனில் அழுந்தி இன்புற விரைந்து செல்வன். பித்த மிகுதி உடையவர்க்குத் தித்திக்கும் பால்தானும் கசக்கும். அப்பித்தம் நீங்கியவழி இனிக்கும். அதுபோல ஆணவமலத்தில் உயிர் அழுந்தி நிற்குங்காறும் மறைப்பாற்றல் இனிக்கும். மலப்பிணிப்பு நீங்கியவழி இனிக்காது. திருவருள் தன்னைக் காட்டக்காணும் உயிர் தான் கண்டதாகக் கருதுதல் பெரும் பாவமாகும். குருடர்க்கு ஒளியும் இருளும் ஒன்றே. அதுபோல இறையருள் வயப்படாதார்க்கு இறையும், 'தளையும் ஒன்றேயாகும். அருளாகிய நட்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார்க்கல்லது தமது பாரத்தைச் சுமக்கும் இறைவனைக் கிட்டுதல் அரிது. ஒருவனிடத்துள்ள பொருளைக்கவர ஒன்று அவன் தூங்கவேண்டும் அல்லது அவன் அங்கில்லாதிருத்தல் வேண்டும். இந்நிலையின்றேல் அவன் பொருளைக் கவர இயலாது. இது உலகியல் நிலை. இதுபோன்றே அருளியல் நிலையிலும் உயிர்கள் பெறத்தக்க அந்தமில் இன்பத்து அழிவில் இன்பமாம் வீடுபேற்றையும் இறைவனை இன்றிப்பெறுதற்கில்லையாம். நண்பகற் பொழுதில் தன் நிழல் கதிரவன் ஒளியால் படிகத் தூணின் நிழல் கவரப்பட்டு நிற்கும். அதுபோல உயிர் திருவருளால் கவரப்பட்ட பொழுது மலப்பிணிப்பினின்றும் நீங்கி நிற்கும். தழற்கொள்ளியைக் கையில் முன்னோக்கிப்பிடித்துச் செல்லுங்கால் இருள் நீங்கி இன்பம் பயக்கும். அக்கொள்ளியைப் பின் வைத்துத் தாம்முன் செல்லின் இருளால் இடர்பட்டு விழும். அதுபோல, திருவருளை உயிர்முன் வைத்து எதனையும் செய்யின் இன்பம் இடையறாது ஈண்டும். அதனைப் பிற்படுத்தித் தான் முன் செல்லின் துன்பம் இடையறாது ஈண்டும். ஐம்பொறிகளின்றி உயிரும் உயிரின்றி ஐம்பொறிகளும் செயற்படுவதில்லை. அங்ஙனமாகத் திருவருளை உயிரோ ஐம்பொறிகளோ அறியும் என்றால் எங்ஙனம்? இறைவன் தானே தன்னை உயிர்களுக்கு வழங்கியருளும் கருணையாளன், அங்ஙனமாக அவனை உயிர்கள் தம்வலியால் அடையமுடியும் என்றால் எங்ஙனம்? இயலாது என்பதாம்.

## இன்புறு நிலை

இன்புறுநிலை என்பது, உயிர்கள் பேரின்பத்தைப் பெற்று இன்புறும் நிலையாம். இருள் நீங்கி இன்பம் பயக்க எழும் திருவருளின் பின் செல்வார் இன்படைவர். அதனைப் பின்னாக்கித் தாம் முன் செல்வார் துன்படைவர். ஒருவனும் ஒருத்தியுமாகக் கூடின் அல்லது இருமடந்தையர் தம்முள் கூடின் இன்பம் வாய்ப்பதில்லை. அதுபோல உயிர் திருவருளைச்சார்ந்த நிலையில் இன்பம் அடைவதில்லை அதன்வழி சிவத்தைச் சார்ந்த பின்பே இன்பமடையும். உயிர்கட்குவேண்டும் இன்பத்தை வழங்கியருளும் இறைவன் இன்ப வடிவினன் ஆவன். அவன் வடிவே இன்ப வடிவாய் இருத்தலின் தான் ஒரு இன்பத்தைத் தனியாக நுகரான். தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை என்ற சொற்கள் தம்முள் இயைந்து தாடலையாகும். அதுபோன்றே உயிரும் இறையும் இயைந்து இரண்டல்லாத நிலைபெறும். வீடுபேற்று நிலையில் உயிரும் இறையும் ஒன்றென்றும் இரண்டென்றும் கருத இயலாதவாறு இருமையில் ஒருமை பெற்று விளங்கும். மெய்ப்பொருளை அடைந்தவர்களும் அதில் உண்மையைத் தெளிந்தவர்களும் உரை இறந்து (மௌனம்) நிற்பவர்களும். பிறவியற்றவராவர். பேய்பிடித்தவன் தன் செயலின்றி அனைத்தும் பேயின் செயல்களையே செய்து நிற்பன். அதுபோலத் திருவருள் வயப்பட்டவர் தன் செயலன்றித் திருவருள் வயத்ததாம் செயலையே செய்வர். நிட்டையால் இறைவனைக் கூடியவர்கள் பேரின்பத்தைப் பெற்று நிற்பர். அவர்தம் சமய ஒழுக்கங்களெல்லாம் தூங்குவார் தம் கைப் பொருள்போலத் தாமேவிட்டகலும், உயிரும் சிவமும் பிரிவின்றி இயைந்து நிற்ப காண்பவன், காட்சி, காட்சிப்பொருள் என்ற மூவகை நிலையும் தோன்றுவதில்லை. அது பொழுது தோன்றும் பேரின்பம் அறியும் அறிவதன்று. இத்தகைய பேரின்பத்தை அன்புண்டேல் உடனே பெற்றிடலாம்.

## ஐந்தெழுத்தருள் நிலை

ஐந்தெழுத்தருள் நிலை என்பது திருவைந்தெழுத்தை ஓதி அத்திருவருளிலேயே அழுந்தி நிற்கும் நிலையாம். ஆகமம். மறை மற்றுமுள்ள ஞான நூல்கள் ஆகிய அனைத்தும் ஐந்தெழுத்தின் உண்மையைச் சாற்றுவனவாம். ஓங்காரமாகிய பிரணவத்துள் சிவம், சத்தி, மலம், அழகுமிக்க மறைப்பாற்றல், உயிர் ஆகிய இவ்வைந்தும் அடங்கி நிற்கும். திருவைந்தெழுத்தினுள் வகரமாகிய உயிர் ஒருகால் மலத்தொடும் பிறிதொருகால் சிவத்தொடும் இயைந்து நிற்கும் இதனை முறையே, ஊன நடனம், ஞான நடனம் என அழைப்பர். மலங்கள் உயிரைப்பொருந்தி அவ்உயிரைத் தம்மிடத்தின்றும் நீங்கவிடா. திருவருள்வழி உயிர் சிவத்தை அடையின் மலக்கட்டற்று விளங்கும்.

நகரத்தை முன்னாக வைத்துத் திருவைந்தெழுத்தை ஓதின் உயிர்மலநீக்கம் பெறாது. சிகரமுதலாக (சிவாய நம) வைத்து ஓதின், மலம் நீங்கும். இத்திருவைந்தெழுத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு ஓதுக! உயர்க! இவ்வாறு ஓதுதல் பிறவிப்பிணி நீங்கவும், வீடுபேறு வாய்க்கவும் இடனாகும். வகரமாகிய திருவருள், சிகரமாகிய சிவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவிக்கும். இத்திருவருளே இறைவனின் திருமேனியாகும். உயிர் நகர மகரங்களின் இடை நில்லாது சிகரவகரங்களின் இடை நிற்றல் தக்கது. உயிர் திருவருள் வழிநின்று சிவத்தை அடையவேண்டும் என்பதே அனைத்து நூல்களின் உட்கிடக்கையாகும்.

## அணைந்தோர் தன்மை

அணைந்தோர் தன்மை என்பது இறைவனின் திருவருளில் அழுந்தி நிற்போரது தன்மையாகும். திருவருள் வழி தம் அறிவு இச்சை செயல்கள் செயற்பட நிட்டையில் அழுந்தி நிற்பார்க்கு என்ன குறையுள்ளது? எக் குறையும் இல்லையாம். இறைவனால் செய்யப்படும் படைப்பு முதலிய ஐந்தொழில்களையோ அன்றி அவன் அதிட்டித்து நின்று செய்யும் தொழில்களையோ உலகியல் வயப்பட்டார் செய்யும் கொடுந்தொழில்களையோ அணைந்தார் செய்யார். எல்லாவற்றையும் அறியும் அறிவு இவர்க்கு இருப்பினும், இறையின்பத்தில் அழுந்தி நிற்பதன்றி வேறு எதனையுஞ்செய்யார். இடர்வராது காக்க ஆமை தன் ஐந்துறுப்புகளையும் அடக்கியிருப்பது போல, இவரும் உரனென்னும் தோட்டியால் ஓரைந்தும் காத்து (புலனடக்கம் செய்து) நிற்பர்.

இறைவனையன்றி இவ்வுலகு இல்லையாதல் போல "அவ்விறைவனாம் தன்மையடைந்த இவரையன்றியும் உலகில்லை. உள்ளும்புறமும் ஒரு தனமைத்தாகக் காண இயலும் இவர்க்கு எதனையும் யாரையும் இகழ்தல் தோன்றாது... பயன்கருதியும் பற்றுச் செய்தும் வாழ்தல் இவரிடத்து இல்லையாதலின் இவர் பெறும் இன்பம் பேரின்பமேயாய் அமையும். அணைந்தோர்க்கு என்ற வினை உடலூழாய்க்கழியும், ஏறும் வினை ஒருகால் தோன்றினும் திருவருள் அதனைச் சுட்டொழிக்கும். மனம், மொழி, மெய்களால் இவர்கள் செய்யும் எவ்வினைகளும் பிறப்பிற்கு ஏதுவாகா, வீட்டின்பத்தையும் இப்பிறவியிலேயே துய்த்து நிற்பர். உயிர்கள் அனைத்தும் பொறிவழிப்பட்டு நில்லாது, இறைவன் வழிப்பட்டு நிற்க வேண்டுவதே இவர்கள் கருத்தாகும். இவ்வாறின்றி உயிர்கள் அலமருகின்றன என்பதே இவர்கள் வருத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நூலகம்

# வினாவெண்பா

***

வினாவெண்பா என்ற சாத்திர நூல் உமாபதி சிவாசாரியாரால் அருளப்பட்டது. சித்தாந்த சாத்திரங்களுள் இந்நூல் ஒன்பதாவது வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது.

இந்நூல் மொத்தம் பதின்மூன்று வெண்பாக்களால் அமைந்துள்ளது. அவை வினாக்களாக உள்ளன. உமாபதிசிவாசாரியர் தமக்குத்தாமே தமது குருவாகிய மறைஞானசம்பந்தரிடம் வினாவை எழுப்பி, அதன்மூலம் தம் ஞான குருவாகிய மறைஞானசம்பந்தரிடம் விளக்கம் பெறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இவ்வகையில் இந்நூலின் முதல் பன்னிரண்டு வெண்பாக்களும் உமாபதிசிவாசாரியர் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் கேட்கும் வினாக்களாக உள்ளன. பதின்மூன்றாவது வெண்பா நூற்பயனைக் கூறுவதாகவுள்ளது.

சைவசித்தாந்த தத்துவத்தில் காணப்படும் சில சிக்கல்கள், முரண்பாடுகள் போல்வன வினாவடிவில் இந்நூலில் அமைந்துள்ளமை நயக்கத்தக்கதாகும். சைவசித்தாந்தம் அச்சிக்கல்களை எவ்வாறு விடுவிக்கின்றது என்பதையும் முரண்பாடுகளை எவ்வாறு நீக்குகின்றது என்பதையும் புலப்படுத்துவதே இந்நூலின் நோக்கமாகும்.

இந்நூலில் கேட்கப்படும் வினாக்கள் யாவும் சைவசித்தாந்த மெய்ப்பொருளியலில் எழுகின்ற நுட்பமான ஐயங்களைத் தெரிவிப்பதாக உள்ளன. எழுப்பப்பட்ட வினாக்களுக்கு விடைகள் தரப்படவில்லை. சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சி உடையோர் இவ்வினாக்களுக்குரிய விடைகளை நுணுகி ஆராய்ந்து கொள்ள இயலும் அவ்வாறு அறிவார்க்குச் சித்தாந்த சாத்திரங்களில் தெளிவு உண்டாகும் எனக்கருதி, ஆசிரியர் வினாக்களைத் தொகுத்ததாக நூலை அமைத்துள்ளார் எனக்கொள்ளலாம்.

இந்நூல், "நீ" என்று தொடங்கி, "நீ" என்ற எழுத்திலே முடியும் சிறப்பினை உடையது. இருளும் ஒளியும் ஒன்றுக்கொன்று முரணானவை அவை இரண்டும் ஓரிடத்தில் இருக்கஇயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறாயின் உயிரில் இருளும் இறைவனும் சேர்ந்திருப்பது எங்ஙனம்? என்பதே முதல் வினாவாகும்.

கனவைக் கனவென்று கனவில் காணமுடியாது. நனவாயின் அதனைத் தொடரமுடியாது. இறைவனருள் அதனைத் தொடரமுடியாது. இறைவனருள் அவத்தைக்குட்படாதெனின் நான் அவத்தைப்படுவதேன்? என்பது இந்நூலின் நான்காம் வினாவாகும்.

சிற்றறிவு சிவனருளைச் சேர்வதெவ்வாறு என்பது ஆறாம் வினாவாகும். இந்நூலில் வரும்

"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள் - காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாராதவர்"

எனும் செய்யுள் சைவசித்தாந்த முத்தியின் இயல்பை இனிதெடுத்துரைக்கின்றது. "காண்பானும், காட்டுவானும், காணப்படும் பொருளுமென்கின்ற மூன்றின் வேற்றுமையுணர்வு நீங்கி மெய்ப்பொருளை ஒன்றியவுணர்வோடு காண்போரே "நல்முத்தி" காண்பர். மறைஞான சம்பந்த மாமுனியே! பாசத்தை மெலிவிக்கும் நன்னெறியில் வராதோர் இம்மூன்று பொருள்களின் இயல்புகளைக் காணாதோர் ஆவார்." என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

வினாவெண்பாவின் பொருளை உணர்ந்தவரே சித்தாந்த ஞானத்தைத் தெளிந்தவரும், தெளிவிக்க வல்லவரும் ஆவார் என ஆசிரியர் இறுதியில் கூறியருளுகின்றார்.

வினா வெண்பாவை சிவப்பிரகாசம். திருவருட்பயன் எனும் இரு நூல்களையும் கற்றாரைச் சோதிக்கும் சோதனைத்தாள் எனக்கூறல் தகும் என்பர். சித்தாந்தக் கலைச்செல்வர் திரு.க.வச்சிரவேல் முதலியார்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் வினாவெண்பா, இருபா இருபஃது, உண்மை விளக்கம் ஆகிய மூன்று நூல்களே வினாவிடை மூலம் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைப் புலப்படுத்துகின்ற சிறப்புக்குரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றிப் ப∴றொடை

***

போற்றிப் ப∴றொடை என்பது சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் தனிச்சிறப்புடையது. இந்நூல் உமாபதிசிவாசாரியரால் அருளிச்செய்யப்பட்டது. ப∴றொடை வெண்பாவால் அமைந்து விளங்குகின்றது.

இறைவனின் திருவருள் முதற்கண் உயிர்களை அநாதி கேவலத்திலிருந்து எடுத்துச் சகலநிலைக்கு ஆளாக்கி, பிறப்பு இறப்புக்கு உட்பட்டுச் சுழல வைக்கின்றது. பின்னர் பக்குவ முதிர்ச்சியெய்திய உயிர்களை ஞான தீக்கை செய்து, "சுத்தநிலை" எனப்படும் பரமுத்தி நிலையை அடையத் துணைபுரிகின்றது. இவ்வாறு உயிர்களுக்குத் திருவருள், தொன்றுதொட்டுச் செய்து வரும் உபகாரங்களை நினைந்து போற்றுவதாக இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள், உயிர்கள் முதன் முதலாக எவ்வாறெல்லாம் தோற்றம் பெற்றன என்ற செய்தியானது இந்த நூலில் சிறப்பாக இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நூல் தோத்திர வடிவில் அமைந்த ஒரு சித்தாந்த சாத்திரமாகும்.

***

# கொடிக்கவி

***

"கொடிக்கவி" எனும் சித்தாந்த நூல் உமாபதிசிவாசாரியர் அருளிய எட்டுச் சாத்திர நூல்களுள் (சித்தாந்த அட்டகம்) ஒன்றாக விளங்குகின்றது. உமாபதிசிவாசாரியர் அருளிய நூல்களுள் அளவில் மிகச் சிறியதும், பெரியதோர் தெய்வாதிசயப் பின்னணியோடும் தோன்றிய நூல் இதுவாகும். இந்நூல் ஒரு கட்டளைக் கலித்துறையும் மூன்று வெண்பாக்களும் ஆக நான்கு பாக்களால் ஆயது. இந்த நூலின் சில பதிப்புகளில் துகளறுபோதத்தின் இறுதிச் செய்யுளான, "அந்த மலமறுத்திங் கான்மாவைக் காட்டிய" எனத் தொடங்கும் செய்யுள் ஐந்தாவது பாடலாகச் சேர்க்கப்பெற்றுள்ளது. இச் செய்யுளை இயற்றியவர் சிற்றம்பலநாடிகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொடிக்கவி" எனும் நூல் தில்லையில் கொடியேற்றும் பொருட்டுப் பாடப்பட்டது. தில்லை வாழ் அந்தணர்கள் சிதம்பரம் நடராசரின் திருக்கோயிற் திருவிழாவில் உமாபதி சிவாசாரியரை ஒதுக்கிவிட்டு வேறொரு சிவாசாரியாரைக் கொண்டு கொடியேற்ற முற்பட்டபோது அங்கு கொடியேறாது தடைப்பட்டதாகவும். பின்னர் உமாபதிசிவாசாரியாரை அழைத்து வந்து "கொடிக்கவி" பாடியபோதே கொடியேற்றம் நிகழ்ந்தாகவும் கூறப்படுகின்றது.

இந்நூலின் முதற் செய்யுள் உயிரோடு இணைந்திருக்கின்ற ஆணவ இருளாகிய அறியாமையைக் குறிப்பிடுகின்றது. ஒளியும், இருளும் ஒரு சேர நில்லா. இருள் ஒளியை விழுங்க முடியாது. ஒளியை இருள் குவித்து விடும். ஒளி, இருள் என்ற இரண்டில் ஒன்று மேம்படுங்கால் பிறிதொன்று மறையும். அதாவது திருவருள் மிக, ஆணவம் குறையும். ஆணவம் மிகத் திருவருள் குறையும். எனினும் ஆணவ மலம் சிவஞானத்தைக் கட்டுப்படுத்தாது. மும்மலங்களால் கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு திருவருள் பொருந்துமாறு நான் இக்கொடியைக் கட்டுகின்றேன் என முதற் செய்யுள் குறிப்பிடுகின்றது.

இரண்டாம் செய்யுள் சிவம், சத்தி, உயிர் என்பன பற்றியும், கேவல, சகல அவத்தைகள் பற்றியும் கூறுகின்றது. கோபுர வாசலில் கொடியேறும் பாங்கினை இச் செய்யுள், "சுட்டினேன் கோபுரவாசற் கொடி" எனக்கூறுகின்றது.

மூன்றாம் செய்யுள் இறைவனும். உயிரும் பிரியாதிருக்கும் சைவசித்தாந்த அத்வைத நிலையினை விளக்குகின்றது. மனத்திற்கும், வாக்கிற்கும் எட்டாத இறைவன் உயிர்களோடு உயிருக்குயிராய் விளங்கி நிற்கிறான். இவ்வுண்மையை உயிர்கள் உணர இறைவன் திருவருள் சுரக்குமாறு வேண்டி இக் கொடியைக் கட்டினேன் என மூன்றாம் செய்யுள் இயம்புகின்றது.

நாம்காம் செய்யுளில் திருவைந்தெழுத்தின் பல்வேறு வடிவங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒவ்வொருவரும் தாம்தாம் விரும்பும் பயனுக்கு ஏற்ற வகையில் திருவைந்தெழுத்தினைச் செபித்து வருகின்றனர். "சிவாயநம" என்பது திருவைந்தெழுத்தாகும். "ஓம் ஹாம் ஓம் சிவாய நம" என்பது எட்டெழுத்தாகும்.... "ஓம்



220600
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமசிவாய" என்பது நான்கெழுத்தாகும். இவைகளை முறையாக எண்ணி அதன் பயனாகப் பிஞ்செழுத்தாகிய வகரமாகிய திருவருட் சத்தியையும், மேலான பெருவெழுத்தாம் சிகரமாகிய சிவத்தையும் மனத்தகத்து வைப்பின், அதன் விளைவாகப் பேசும் எழுத்தாகிய (பிஞ்செழுத்து) வகாரமாம் அருட்சத்தி, தன்னுடன் பேசா எழுத்தாகிய (பெருவெழுத்து) சிகாரமாம் சிவத்தையும் மிகவும் எளிதாக உயிரின்கண் பதிவிக்கும் அவ்வாறு பதிவிப்பதற்காக இக்கொடியைக் கட்டுகின்றேன் என இச் செய்யுள் அமைந்துள்ளது. திருவைந்தெழுத்தை இடைவிடாது எண்ணுதலின் பயன் உயிர் திருவருளைப் பெற்றுச் சிவத்தை அடைவதாகும். இப் பேற்றினைப் பெறவே கொடி கட்டுவதாக ஆசிரியர் அருளுகின்றார்.

சிவத்தை உணர்வதற்குத் திருவருள் தேவை. அதன் குறியீடு "வ" எனும் பிஞ்செழுத்தாகும். சிவப்பரம் பொருளைக் குறிக்கும் குறியீடு "சி" எனும் மேலைப் பெருவெழுத்தாகும். இவற்றை நுட்பமாகப் புலப்படுத்தும் நூலாகக் "கொடிக்கவி" விளங்குகின்றது.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுண்டு. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. கா.சுப்பிரமணியபிள்ளை இந்நூலினை உரைநடையில் தந்திருக்கின்றார். ஜே.எம்.நல்லசாமிபிள்ளை இந்நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

****

# நெஞ்சுவிடு தூது

***

"நெஞ்சுவிடு தூது" என்பது "தூது" என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்த சித்தாந்த சாத்திர நூலாகும். சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் "தூது" எனும் இலக்கிய வகைமூலம் சித்தாந்தக் கோட்பாடுகளைப் புலப்படுத்தும் நூல் இது ஒன்றே. உமாபதிசிவாசாரியார் அருளிய இந்நூல், 129 கண்ணிகளை உடையது. கலிவெண்பாவால் அமைந்து விளங்குகின்றது.

உமாபதி சிவாசாரியர் தம்மைத் தலைவியாகவும், தம் குருமூர்த்தியான மறைஞான சம்பந்தரைத் தலைவராகவும், அவர் திருவுலாப்போவது கண்டு தாம் அவரிடம் ஈடுபட்டதாகவும், தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவதற்குக் காரணமாய் அத்தலைவரது மாலையை வாங்கி வரத் தம் நெஞ்சைத் தூதாக விடுவதாகவும் இந்நூலை அருளியுள்ளார். ஆசிரியர் தூது விடுவதற்கு நெஞ்சைத் தேர்ந்தெடுத்த திறம் மகிழத்தக்கதாகும். சித்தாந்த நோக்கும் உடையதாகும். தலைவனது பெருமையையே பெரிதும் கூறி, அத்தலைவனிடத்து அணுகுங்கால் அங்குள்ள நெறியில் நிற்பாரிடத்துச் சாராது செல்ல வேண்டுமென்று நெஞ்சுக்குக் கூறியிருப்பது சித்தாந்த சாத்திரங்களுள் ஒரு புதுவரவாகும். இறைவனே, மறைஞான சம்பந்தராய்த் தம்மை ஆட்கொண்டார் என்பது ஆசிரியரின் திருவுளமாதலின், இறைவனுக்குள்ள பெருமைகள் யாவும் தம் குருமூர்த்தியாகிய மறைஞான சம்பந்தரிடம் இருப்பதாகக் கண்டு, பெண்மை நிலையில் நின்று பாடும் ஆசிரியர், தம் தலைவனின் பெருமையைப் பலபடச் சிறப்பித்துச் சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்திக் கூறும் திறம் நயக்கத்தக்கதாகவுள்ளது.

இந்நூலில் தலைவனது பெருமை கூறுதல். தமது சிறுமை உரைத்தல். திருவுலாப் போதல், தாம் பெற்ற பேறுதகவும் அணுகுநெறியும், போற்றுதலும் புகலிலும் என்ற ஆறு வகையான வழியில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் புலப்படுத்தப்பட்டுள்ளன எனலாம்.

உலகாயதம், பௌத்தம், சமணம், வேதாந்தம் என்பவற்றின் அடிப்படையான பொருள் நிலைகள் இது என்பதை எடுத்துக்காட்டி, அத்தகைய சமயிகளிடத்தும், சிவபெருமானையும், சிவவேடங்களையும், இழித்தும், பழித்தும் பேசுவாரிடத்தும் செல்ல வேண்டாமென்றும் கூறிச் சைவசித்தாந்தத்தின் சிறப்பை இந்நூல் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது. இந்நூலையும் தோத்திர வடிவில் அமைந்த ஒரு சாத்திர நூலாகக் கொள்வர்.

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைநெறி விளக்கம்

***

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் தனிச் சிறப்புடைய சாத்திர நூலாக "உண்மை நெறி விளக்கம்" விளங்குகின்றது. சைவசித்தாந்த சாத்திர நூல்களின் வரிசையில் பதின்மூன்றாவது நூலாகக் கொள்ளப்படும் இந்த ஞான நூலினை, உமாபதி சிவாசாரியார் அருளிய "சித்தாந்த அட்டகம்" என்னும் பெயரில் வழங்கும் எட்டுச் சாத்திர நூல்களுள் ஒன்றாகக் கொள்வது சித்தாந்த சைவமரபாகும். உண்மைநெறி விளக்கம் என்ற இந் நூலினைச் சீர்காழிச் சிற்றம்பலநாடிகளின் மாணவராகிய சீர்காழித் தத்துவநாதர் என்பவர் அருளினார் எனவும் அறிஞர் குறிப்பிடுவர். ஆனால் இந்த நூலினைச் சீர்காழித் தத்துவநாதர் இயற்றவில்லை என்பதையும், உமாபதிசிவாசாரியரே இயற்றினார் எனவும் அறிஞர் எடுத்துக்காட்டுவர். எது எவ்வாறாயினும் ஆறு திருவிருத்தங் களையுடைய "உண்மைநெறி விளக்கம்" என்ற சாத்திர நூலானது உமாபதி சிவாசாரியார் என்பவரால் அருளப்பட்டதென்பதே மரபு வழியாகக் கொள்ளப்படும் ஏற்புடைய கருத்தாகும்.

ஆன்மா, ஞான சாதனையில் முன்னேறும்போது ஆன்ம அறிவில் நிகழும் செயற்பாடுகளை பத்துவகை ஞானப் படிகளாக வகுத்து "தச காரியம்" என்று கூறுவது சைவசித்தாந்தத்தின் அடிப்படையான கோட்பாடாகும். "தச காரியம்" பற்றிய சைவசித்தாந்த ஞானச் செய்தியினையே உண்மைநெறி விளக்கம் சிறப்பாகப் புலப்படுத்துகின்றது.

ஆறு செய்யுட்களைக் கொண்ட உண்மை நெறி விளக்கத்தின் முதற் செய்யுள் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி ஆகியவற்றையும். இரண்டாம் செய்யுள் ஆன்மரூபம். ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி என்பவற்றையும் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய செய்யுட்கள் முறையே சிவரூபம் சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகியவற்றையும் எடுத்துரைக்கின்றன.

சகல நிலையில் உள்ள உயிர் சுத்த நிலையை எய்தி இறைவன் திருவடியைத் தலைக்கூடும் நெறியே ஞானநெறி அல்லது உண்மை நெறி ஆகும். இந் நெறிக்கண் மேற்கொள்ளப்படும் ஞானச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளை மேலே கூறப்பட்ட தசகாரியங்களாக வைத்து விளக்கும் தனிச் சிறப்பு உண்மை நெறி விளக்கத்திற்குரியது.

# சங்கற்ப நிராகரணம்

***

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஈற்றில் அமைந்தது சங்கற்ப நிராகரணம் ஆகும். இந்நூல் உமாபதிசிவாசாரியார் என்பவரால் அருளப்பட்ட "சித்தாந்த அட்டகம்" எனப்படும் எட்டு நூல்களுள் ஒன்றாகும். "சங்கற்பம்" என்பது "கொள்கை" எனப்பொருள்படும். "நிராகரணம்" என்பதற்கு "மறுத்தல்" என்பது கருத்தாகும். இவ்வகையில் பிறசமயக் கொளகைகளை மறுத்தெழுந்த நூலாகச் சங்கற்ப நிராகரணம் எனும் நூல் விளங்குகின்றது.

பரமுத்தி நிலையைத் தலைப்படும் உயிர் மேற்கொண்டு செல்லும் மெய்யுணர்வு நிலையில் ஐயமும் மருட்கையும் விளைவிப்பனவாகச் சில சமயங்களின் முடிவுகள் உள்ளன. அச் சமயங்களை மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கராந்தவாதம், ஈசுவர அவிகாரவாதம், நிமித்த காரண பரிணாமவாதம், சைவவாதம் என ஒன்பது வகையாக வகைப்படுத்தி அவற்றின் துணிபுகளை சங்கற்பங்கள் (கொள்கைகள்) என வைத்துக்கூறி, அவற்றை இந்நூல் நிராகரிக்கின்றது. இவ்வொன்பது சமய சங்கற்பங்கள் நிராகரிக்கப்படுவதன் காரணமாகவே இந்நூல் இப்பெயர் பெற்றது.

இருபது ஆசிரியர் பாக்களால் இயன்ற இந்நூலின் முதலாவதாகிய காப்புப் பாடல் மூத்தபிள்ளையாரின் திருமேனி நலத்தைப் புனைந்துபாடி நினைந்து வணங்குவதாக அமைந்துள்ளது.

அடுத்துவரும் பாயிரம் பாடலில் நூல் தோன்றிய காலமும் களமும் காரணமும் காட்டப் பெறுகின்றன. சாலிவாகன ஆண்டு 1235 (கி.பி 1313) இல் திருத்தில்லையில் ஆனிப் பெருவிழாவில் ஆறாம் நாளன்று சிவாகம வழியொழுகும் எண்மரும், மயாவாதி ஒருவனும் தேர்மண்டபத்தின் ஒருபுறம் இருந்தனர். மெய்கண்ட தேவரின் அருள்பெற்ற அடியவராகி சைவ சித்தாந்தி ஒருவர் மற்றொரு, பக்கம் இருந்தார். உண்மை விழைவோன் ஒருவன் அங்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாவாதியை நோக்கி "தம்பிரானார் திருவருள் நிலை எத்தகையது?" என வினவினான். அம்மாயாவாதி தான் கற்றதை அவனுக்கு விடையாகத் தர, ஏனைய எண்மரும் அப்பேச்சிற் குறுக்கிட்டு ஒருவரை ஒருவர் மறுத்துத் தத்தம் கருத்துக்களைக் கூறினர். அக்கூற்றுக்களைக் கேட்டிருந்த மெய்கண்ட தேவர் அருள்பெற்ற அடியவர் அவற்றைச் சங்கற்பங்களாக வைத்து உரைத்து நிராகரித்தார். நிராகரித்து உண்மை விழைவோனைச் "சிவப்பிரகாச செழுந்தமிழ் நூலை" திருவருள் சார்பாக நின்று சிந்தித்து உணர்ந்தால் மெய்யுணர்வு நிலையைத் தலைப்படுதல் கூடும் என அறிவுறுத்துகின்றார். இவ்வாறு இந்நூலின் பொருள்நிலை அமைந்துள்ளது. இந்நூலினைச் சிவப்பிரகாசத்தின் பரப்பக்கம் எனவும் சிவஞான சித்திப் பரபக்கத்தின் ஒழிபு எனவும் கொள்ளுதல் தகும் என அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

இதன்கண் நிமித்தகாரண பரிணாம வாதம் என்றது சிவாத்துவித சைவம் எனவும், சைவவாதம் என்றது சுத்த சைவம் எனவும் குறிக்கப்படும். இவையிரண்டும் சைவசித்தாந்தத்தோடு பெரிதும் ஒத்து, சில குறியீட்டு வாய்பாடுகளாலும் முத்தி நிலைபற்றிய அதிநுட்பக் கருத்துக்களாலும் வேறுபட்டுத் தோன்றுவன ஆகும்.

சகல நிலையில் உள்ள உயிர் சுத்த நிலையை எய்தி இறைவன் திருவடியைத் தலைக்கூடும் நெறியே ஞானநெறி அல்லது உண்மை நெறி ஆகும். இந்நெறிக்கண் மேற்கொள்ளப்படும் ஞானச் செய்திகளை மேலே கூறப்பட்ட தசகாரியங்களாக வைத்து விளக்கும் தனிச்சிறப்பு உண்மை நெறி விளக்கத்திற்குரியது.

சைவசித்தாந்த நூல்களிற் காலவரையறையறிவிக்குங் குறிகளில்லை என்ற பொதுக் குறைபாட்டிற்கு உட்படாத தன்மை சங்கற்ப நிராகரணத்தின் தனிச் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைநூற் பட்டியல்

***

## மெய்கண்ட சாத்திரங்கள்

| | |
|---|---|
| 1. அருணந்தி சிவாசாரியார், | சிவஞானசித்தியர் சிவஞான சுவாமிகள் (உ.ஆ.), சமாசம், 1940. |
| 2. " | இருபா இருபஃது, சீகாழித் தத்துவநாதர் சமாசம், 1940. |
| 3. உமாபதிசிவம் | உண்மைநெறி விளக்கம், சிந்தனையுரை, சமாசம், 1940. |
| 4. " | கொடிக்கவி, பழைய உரை, சமாசம், 1940. |
| 5. " | சங்கற்ப நிராகரணம், ஞானப்பிரகாசர் தேசிகர் உரை, சமாசம், 1940. |
| 6. " | சிவப்பிரகாசம், மதுரைச் சிவப்பிரகாசர் உரை, சமாசம், 1940. |
| 7. " | திருவருட்பயன், சிந்தனையுரை, சமாசம், 1940 |
| 8. " | நெஞ்சுவிடுதூது, பழையவுரை, சமாசம், 1940. |
| 9. " | போற்றிப்பஃறொடை, பழையவுரை, சமாசம், 1940. |
| 10. " | வினாவெண்பா, நமச்சிவாயத் தம்பிரான் உரை, சமாசம், 1940. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. திருக்கடவூர் — திருக்களிற்றுப்படியார். உய்யவந்ததேவர், பழைய பொழிப்புரை, சமாசம், 1940.

12. திருவியலூர் — திருவுந்தியார், உய்யவந்ததேவர், பழைய பொழிப்புரை, சமாசம், 1940.

13. மனவாசகங்கடந்தார், — உண்மை விளக்கம், சமாசம், 1940.

14. மெய்கண்டதேவர், — சிவஞானபோதம், சிவஞானசுவாமிகள் உரை, சமாசம், 1940.

****

## துணைமை ஆதாரங்கள்

***

15. அரங்கசாமி முதலியார், க., — சிவஞானபோதம் எளியவுரை, சேலம் கூட்டுறவு அச்சகம், சேலம், 1969.

16. இராமநாதபிள்ளை, ப.(உ.ஆ.), — சங்கற்ப நிராகரணம் உரையும் விளக்கமும், கழகம், சென்னை, 1968.

17. " — மெய்கண்டசாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் முதற்பகுதி, கழகம், 1969.

18. இராமநாதபிள்ளை, ப.(ப.ஆ.), — மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும் இரண்டாம் பகுதி, கழகம், 1969.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இராமலிங்க முதலியார், கீ., உண்மை நெறி விளக்க ஆராய்ச்சியுரை, மெய்கண்டார் கழக வெளியீடு, காஞ்சிபுரம், 1948.

20. ஈசுவரமூர்த்திப்பிள்ளை, ஆ., போற்றிப்பஃறொடையும் வினாவெண்பாவும், மகாலட்சுமி விலாசம் பிரஸ், சென்னை, 1928.

21. சிவபாதசுந்தரம், க., திருவருட்பயன், சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 1950.

22. சுப்பிரமணிய பிள்ளை, கா., சைவசித்தாந்த சந்தானா சிரியர்களும் அவர்களின் அருள்நூல்களும், கழகம், சென்னை, 1958.

23. " மெய்கண்டாரும் சிவஞானபோதமும், சமாசம், சென்னை, 1932.

24. சுப்பிரமணியபிள்ளை,கா., மெய்கண்ட நூல்கள் உரைநடை, தொண்டை நன்னாட்டுச் சைவசித்தாந்தக் கழகம், காஞ்சிபுரம், 1938.

25. சுந்தரமூர்த்தி, கு.(ப.ஆ.), இருபா இருபஃது (தெளிவுரையுடன்) காசிமடம், திருப்பனந்தாள், 1981.

26. " உண்மைநெறி விளக்கம், (தெளிவுரையுடன்), காசிமடம், திருப்பனந்தாள், 1978.

27. " உண்மை விளக்கம் (தெளிவுரையுடன்) காசிமடம், திருப்பனந்தாள், 1978.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. " கொடிக்கவியும்
வினாவெண்பாவும்,
(தெளிவுரையுடன்),
காசிமடம், திருப்பனந்தாள்,
1980.

29. சுந்தரமூர்த்தி, கு.(ப.ஆ.), திருக்களிற்றுப்படியார்,
(தெளிவுரையுடன்)
காசிமடம், திருப்பனந்தாள்,
1980.

30 " கொடிக்கவியும்
வினாவெண்பாவும்
(தெளிவுரையுடன்),
காசிமடம், திருப்பனந்தாள்,
1980.

31. " திருவருட்பயன்,
(தெளிவுரையுன்)
காசிமடம், திருப்பனந்தாள்
1978.

32. திருவுந்தியார்,
(தெளிவுரையுடன்),
காசிமடம், திருப்பனந்தாள்,
1979.

33. சுந்தரமூர்த்தி, கோ., சைவசமயம்,
சர்வோதய இலக்கியப்
பண்ணை,
மதுரை, 1977.

34. திருவிளங்கம், மு.(உ.ஆ.), சிவஞானசித்தியார்
சுபக்கம்,
கூட்டுறவு அச்சகம்,
யாழ்ப்பாணம், 1971.

35. " சிவப்பிரகாசம்,
திருமகள் அச்சியந்திரசாலை,
கண்ணாகரம், 1933.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கலைவாணி இராமநாதன்., சைவசித்தாந்த மெய்ப்பொருளியல், கங்கை (பிறைவேற்) லிமிடெட், கொழும்பு- 1997.

37. ஞானகுமாரன், நா., சித்தாந்தத் தெளிவு, செல்வம் வெளியீடு, பருத்தித்துறை, 1997.

38. பாஸ்கரன், க., சைவசித்தாந்த அறிவாராய்ச்சியல், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்- 2003.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு – 01

## சித்தாந்த சாத்திரங்கள் பற்றிய விபரங்கள்

திருவுந்தியார் முதல் சங்கற்ப நிராகரணம் வரை மெய்கண்ட நூல்கள் பதினான்கு உள்ளன. இவற்றை வேறு வேறு காலத்தில் வேறு வேறு ஆசிரியர்கள் அருளியுள்ளார்கள். அவற்றின் விபரம் வருமாறு.

| நூலின் பெயர் | அமைப்பு | ஆசிரியர் பெயர் | காலம் |
|---|---|---|---|
| 1. திருநவுந்திரியர் | 45 கலித்தாழிசை களால் அமைந்தது | திருவியலூர் உய்யவந்த வேதநாயனார் | கி.பி 1147 |
| 2. திருக்களிற் றுப்படியார் | 100 திருவெண்பாக் களால் அமைந்தது | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் | கி.பி 1177 |
| 3. சிவஞான போதம்' | 12 சூத்திரங்களால் அமைந்தது. உண்மை இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என்று நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. | மெய்கண்டார் | கி.பி 1232 |
| 4. சிவஞான சித்தியார் | பரபக்கம் - 301 விருத்தங்களை உடையது. சுபக்கம் - 328 திருவிருத்தங்களைக் கொண்டது. | திரு மெய்கண்டாரின் மாணவர் அருணந்திசிவனார் | கி.பி 1232 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| # | | | |
|---|---|---|---|
| 5. இருபா<br>இருபஃது | வெண்பா ஆசிரியப்பா<br>இருவகைப் பாக்களால்<br>அந்தாதித் தொடை<br>அமையப்பாடப்பட்டது.<br>20 செய்யுட்களால் ஆயது | | கி.பி 123 |
| 6. உண்மை<br>விளக்கம் | 53 வெண்பாக்களால்<br>அமைக்கப்பட்டது. | மெய்கண்டாரின்<br>மற்றொரு மாணவர்<br>திருவதிகை மன<br>வாசகங்கடந்தார் | கி.பி 1232 |
| 7. சிவப்பிரகாசம் | 100 விருத்தங்களால்<br>ஆயது | அருணந்திசிவனாரின்<br>மாணவர்<br>ஆகியமறை<br>ஞானசம்பந்தரின்<br>மாணவர்,<br>உமாபதி சிவனார்<br>என்னும் | கி.பி 1313 |
| 8. திருவருட்பயன் | அதிகாரம் ஒன்றுக்குப்<br>பத்துக் குறள் வீதம்<br>100 குறட்பாக்களால்<br>ஆயது. | சிவப்பிரகாசம் முதல் சங்கற்ப<br>நிராகரணம் வரையுள்ள<br>எட்டுநூல்களும் உமாபதிசிவம்<br>அருளியது. | |
| 9. வினாவெண்பா | 13 வெண்பாக்களால்<br>ஆயது. | | |
| 10.போற்றிப்<br>பஃறொடை | 95 கண்ணிகளையும்<br>இறுதியில் ஒரு<br>வெண்பாவையும்<br>உடையது. | | |
| 11. கொடிக்கவி | ஒருகட்டளைக்<br>கலித்துறையும்<br>நான்கு<br>வெண்பாக்களும்<br>ஆக ஐந்து<br>பாட்டுக்களால்<br>ஆனது. | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. உண்மைநெறி ஆறுசெய்யுட்களைக்
கொண்டது

13. சங்கற்ப நிராகரணம் 13 அகவற் பாக்களையும்ஒரு வெண்பாவையும் உடையது.

***

# பின்னிணைப்பு - 02

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சந்தானாசாரிய புராண சங்கிரகம்

***

### பாயிரம்
### விநாயகர்

பொன்னா ரிதழி சடைக்கணிந்த புனிதப்
பெருமான் பூங்கழலே
முன்னா விரும்பு மெய்பொருளுமென்று
முன்னி முறைபரவும்
மின்னார் கயிலைச் சந்தான குரவர்
சரிதம் விளம்பிடுவான்
என்னே ரோடை யைங்கரத்த னிருதாட்
கமல மிறைஞ்சிடுவாம் (1)

### சபாநாதர்

துடிய தனிற்படைத் தன்மிகு தூய்மையொடுமமைகரத்திற்
காத்த றொல்லைப்
படிபுகழு மங்கியினி லழித்தலுற வூன்றுமலர்ப்
பாதந் தன்னில்
மடியுறவே மறைத்த னற்குஞ் சிதசரண மலரின்க
ணருள லாகத்
திடமுறுத்திச் சிற்சபையிற் றிருநடஞ்செய்துறைதேவைத்
தியானஞ் செய்வாம். (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயாசாரியர்கள்

தம்மானைச் சுட்டியருந் தந்தையர்க்குப் புலப்படுத்தார்
சரணம் போற்றி
அம்மானை மறைக்கதவந் திறப்பித்துத் தரிசித்தா
ரடிகள் போற்றி
எம்மானைப் பரவையிடைச் சந்துசெல வேவினர் தம்
மிருதாள் போற்றி
பெம்மானைப் பரிவயவ ராக்கினர்தம் பிரசமலர்ப்
பாதம் போற்றி (3)

## சந்தானாசாரியார்கள்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டா
ரிணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த அருணந்தி
நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான சம்பந்தர்
நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகருமாபதியார் செம்பதுமத்
திருத்தாள் போற்றி (4)

## புராண வரலாறு

சம்புவிற் றெளிந்த நந்தி யருள்பெறு சனற்கு மாரன்
நம்புநல் வியாதற் கோத நவையறு மவன்சூ தற்குப்
பம்பிட நவில்பு ராணம் பதினெட்டுட் பவிடி யத்தில்
எம்பெரு மக்கள் காதையினையன திகழு மன்றே (5)

## நூற்பயன்

எவ்வுலகுந் தொழுமெழிலோர் சந்தான குரவர்கட
மியற்பு ராண
திவ்வியநன் மான்மியத்தைத் தீவிரமா மன்பினொடு
செவியிற் கேட்போர்
இவ்வுலக விந்திர ராயினிமையுறு செல்வமெலா
மெய்திப் பின்னர்
நவ்விவிழி யுமைபாக னருளாலே பரமுத்தி
நண்ணி வாழ்வார் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அவையடக்கம்

இவ்வுலகிற் புலவரெலா மிலக்கியமு மிலக்கணமு
மிசைய வாய்ந்து
திவ்வியநற் பிரபந்தம் பலவிழைப்பார் திடமொன்று
மில்லாத் தீயேன்
செவ்வியபன் மயிலாடல் கண்டிடுவான் கோழியுறு
சிறைவி ரித்தே
எவ்வமுற வாடுதல்போ லெழிற்குரவர் மாண்மியத்தை
யியம்ப லுற்றேன். (7)

பாயிரம் முற்றிற்று

# மெய்கண்ட சிவாசாரியர் புராணம்

***

அம்பொன் மேருவிற் கரத்தினி லேந்திநல் லருள்செய்
நம்பன் மேவிய குலஞ்செறி நன்னடு நாட்டின்
உம்ப ராரும்வந் தொழிவுறா தாடுறு நிவாவின்
கம்பமாமணி திரை யெறி கரைவட பாங்கர். (1)

கடந்தை மாநக ரமர்ந்தகா ராளர்தங் குலத்திற்
படர்ந்த நாமவச் சுதர்களப் பாளர்தம் பக்கல்
இடம்பெ றும்பல செல்வமு மெய்திமேம் பட்டே
அடங்கி டாதபே ரறிவுறு மதலையை யடைவான் (2)

தங்கு ருச்சக லாகம பண்டிதர் தாளில்
அங்க மெட்டுறப் பணிந்தரு மகவினை யளிக்குந்
துங்க நல்வர மருளெனத் தொல்லைநூ லுணர்ந்தோன்
புங்க மார்தமிழ் மறையினைப் போற்றிநாண் சாத்தி (3)

வேறு

தூயமறைக் குலமேவு தமிழ்விரகர் துதிசெய்த
பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ள நினை
வாயினவெ லாம்பெறுவ ரென்னவமை யருட்பதிகஞ்
சேயதமிழ் மறையதனிற் றெளிவுறக்கண் டுளமகிழ்ந்தே (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்ன டித்தலம் பணிவுறுந் தன்மைசால் கடந்தை
மன்னு பேரறி வுறுநன்மா ணாக்கனை நோக்கிப்
பொன்னி மாநதி வடகரைப் பொலியும்வெண் காட்டிற்
பன்னு நல்வர மளித்திடு முக்குளம் படிந்து (5)

பிரம வித்தியா நாயகி தன்னையும் பிறைசேர்
அருண வேணியா ரரனையு மடிபணிந் தேத்திக்
கருணை யன்பர்தம் பூசனை கவினுற விழைத்துச்
சரண மென்மலர் தலைக்கணி யாமெனத் தாழ்ந்து (6)

ஏனை நல்லற மில்லொடு மியற்றியே வதியிற்
பான லங்கணாள் பங்கன தருளினாற் பரம
ஞான நல்லுருப் புதல்வனை நயமுறப் பெறுவை
ஈன மற்றிடு மிம்மொழிக் கையமின் றென்றார். (7)

என்று கூறிய தங்குலக் குரவன திணைத்தாள்
ஒன்று மன்பொடு பணிந்துகை யுச்சிமேற் கூப்பி
அன்று தன்மனைக் கிழத்தியோ டகங்களி துளும்பிச்
சென்று செய்குவ லென்றுநல் விடைகொடு செல்வார். (8)

திடம்பெ றுங்கலை முழுதுணர் தேசிக ருரைத்த
நடந்த ருஞ்சிவன் சுவேதமா வனத்திடை நண்ணி
இடம்பெ றும்பல தருமமு மியற்றியே வதிந்தார்
அடங்க லில்லருஞ் செல்வவச் சுதர்களப் பாளர் (9)

வதிய லுற்றவோ ராண்டினின் மருவுமோர் வைகன்
மதிய மாருநற் சடையினான் கனவில்வந் தெம்பாற்
பதியு மன்பகே ளிம்மையிற் பாலனைப் பயக்கும்
விதிநி னக்கிலை யென்றருள் செய்தனன் விமலன் (10)

அன்னவாசகங் கேட்டவச் சுதர்களப் பாளர்
பொன்னங் கொன்றையம் மதியொடு மௌலியிற் புனைந்தோய்
மன்னு பூம்புக லிப்பெரு மான்மன மகிழ்ந்து
சொன்ன லங்களும் பொருள்களுஞ் சுரந்தருள் பொழிய (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மை யேத்துநற் றமிழ்மறைப் பாடலை யுன்னி
மெய்ம்மை யாகவே நம்பினேன் விதியிது கண்டாய்
அம்மை காணநல் லருணடம் புரியுமா ரமுதே
இம்மை மயிற்கதி யருளுநற் புதல்வனை யீவாய் (12)

வேறு

என்றுபல முறையிறைஞ்சித் துதித்து நிற்க
இமயமலைக் கொடிபாக னியம்ப லுற்றான்
நன்றுனது துதிகேட்டு மகிழ்ந்தோ முன்னம்
ஞானபோ னகனம்மைத் துதித்த பாடல்
ஒன்றுறுதி கொளுநின்பா லுலக மேத்த
உயர்காழிக் கவுணியன்போ லொருவன் வந்து
நன்றருளு மகவுருவாய் நண்ணு மென்ன
நவிற்றியருள் செய்தனன் நன் மகிழ்ச்சி பொங்க. (13)

வேறு

இம்மொழிகேட் டுக்கடந்தை யச்சுதர்க ளப்பாள
ரின்ப மேவிச்
செம்மையுறு மறமனைத்து முன்போல இனிமையொடு
செய்யுங் காலைக்
கொம்மைவரிக் குயமனையா டுருவயிற்றிற் சிறுகருப்பங்
குலவித் தோன்ற
மெய்ம்மறையிற் சடங்கனைத்து மையிரண்டு திங்களினும்
விரும்பிச் செய்தார். (14)

இந்தமுறை கிரியையெலா மீரைந்து திங்களினு
மியற்று நாளிற்
சந்தமறை யாகமங்கள் வழியொழுகு தாபதர்கள்
சலிப்பற் றோங்க
மந்தபரி பாகருநல் லத்துவித மெய்யுணர்ந்து
மகிழ்ச்சி யெய்த
எந்தையருள் சிவஞான போதமறை யியற்றமிழி
னினிது மேவ (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வியாத முனியுரைசெய் சூத்திரத்தின் பாடியமோர்
நான்குங் கொண்ட
சொல்வாய்மை பொருள்வாய்மை தெளிதலுறத் தேராது
சோக முற்றோர்
எல்லாரு மத்துவித சுத்தநிலை யினிதெய்திச்
சோக மேயப்
பொல்லாத சமயகளு மதிசயிற ப்பபப்புவனிமிசைப்
போத மேற (16)

நலமலியுஞ் சிவனடியா ரெஞ்ஞான்று மானந்த
நண்ணி யோங்கத்
தலமலியு மெந்தாட்டுந் தென்னாடு தலையெனவே
சகங்கொண் டாடக்
கலைமலியும் பிள்ளையா ரொருவர்தாந் தந்தைமனக்
கவலை தீர
நிலவலயத் தவதரித்தார் நிறையன்பர் சுற்றத்தார்
மகிழ்ச்சி நீட (17)

அந்நாளிற் றந்தையா ரகமகிழ்ச்சி மிகவெய்தி
யந்த ணர்க்குப்
பொன்னாதி பல்வகைய தானங்கள் பூமிசையிற்
பொலிய நல்கி
மின்னாரும் புத்திரர்க்கு மரபுளிமுற் செய்சடங்கு
விதியிற் செய்து
பின்னாளிற் சாதகநல் வினைமுற்றிப் பேரின்பம்
பெருகி வாழ்நாள் (18)

வேறு

வெள்ளை மாவனத் தடிகள்பால் விடைபெற்று மீண்டு
பிள்ளை யோடுநன் மனைவியுஞ் சுற்றமும் பிறரும்
உள்ள மாருநன் மகிழ்ச்சியி னொருவுதங் கடந்தை
என்ன ருங்கதிர் மாளிகை யிடத்துமே வினரால் (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ண லாகுமச் சுதர்களப் பாளர்தா மரிய
வண்ண நன்மக வோடுவந் தணைந்தநற் செய்தி
கண்ண கன்பொழிற் கடந்தையார் களிப்புறக் கேட்டு
நண்ணு மன்பொடு நாடொறும் வந்துபார்த் துவப்பார் (20)

பிள்ளை மாமதி போன்றுநற் பிள்ளையார் வளர
வெள்ள வேணியா ரன்பராம் விமலரைக் கொண்டு
வள்ள லார்க்குநன் நாமமிட் டழைத்திட வரத்த
தெள்ளு மாகம விதிமுறை செய்துநற் சடங்கு. (21)

ஒருசு வேதவனப்பெரு மாளென வொண்பேர்
உரிமை யாலிடக் கடந்தையா ருவப்புற வருநாள்
இருமை சேர்திரு வெண்ணெய்நல் லூரினி லுறையும்
அருநன் மாமனார் தம்மனை யெடுத்துவந் தணைந்தார் (22)

அணைந்த காதல ரும்மையி லரன்றனற் சரினாய
மணந்த வாதநற் கிரியைநல் யோகமே மன்னி
இணங்கு சாமுசித் திகநிலை யாண்டிரண் டினராய்ப்
புணர்ந்தி ருக்குநா ளங்ஙனம் நிகழ்ந்தது புகல்வாம் (23)

வெள்ளி வெற்பமர் விமலனா ரருள்பெறு நந்தி
வள்ள லாரடி மலர்புனை சனற்குமா ரன்பால்
தெள்ளு சத்திய ஞானநற் றரிசினி திருத்தாள்
உள்ளு முள்ளமா ரொருபரஞ் சோதிமா முனிவர் (24)

அன்ன குன்றொரீஇத் தென்மல யாசல மணுக
மின்னு பேரொளி விமானமீ தேகுறும் வேலைப்
பொன்னி னோடுமுத் தெறிதிரைப் பெண்ணைநீர் புடைசூழ்
சென்னி மாமதிச் சிவனுறை வெண்ணைநற் பதிக்கு. (25)

நேர தாகவவ் விமானநின் றிடுதலு நிறைந்த
தீர வாலறி வுடைப்பரஞ் சோதியார் தேர்ந்து
வார மோடிழீ இச் சுவேதவ னப்பெரு மாட்குச்
சேர மெய்யுணர் வெய்திய திறந்திரு வருளால் (26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்து தீக்கையு மெய்கண்ட நாமமுஞ் செறித்துச்
சார்ந்த மந்தண மாஞ்சிவ ஞானபோ தத்தை
ஈந்து தங்குரு வறிவுறுத் தியபொழிப் பிசைத்தே
ஆர்ந்த செந்தமி ழாக்கெனப் பொதிவரை யடைந்தான். (27)

அருட்டு றைக்கணே யமர்பொலாப் பிள்ளையா ரருளால்
மருட்டி லாமலே சிந்தித்துத் தெளிந்துபின் மாட்சிப்
பொருட்ட தாஞ்சிவ ஞானபோ தத்தைத்தென் மொழியில்
அருட்டி றத்தினாற் பெயர்த்துவார்த் திகப்பொழிப்
பறைந்தார். (28)

இன்ன காலையிற் பலர்பரி பாகர்க ளீண்ட
அன்னர் சென்னிமேற் றிருவடி வைத்தருள் செய்தே
மன்னு மச்சிவ ஞானபோ தத்தினை வகுத்துப்
பின்னர் முன்னொடு மாறுகோ ளின்றியே பெருக்கி (29)

வேறு

உரைத்தருளி வாழ்நாளிற் சின்னாட் பின்னர்
உயர்வுடைய தங்குலத்துக் குரவ ரான
திருத்துறையூ ராகமபண் டிதர்தாந் தம்மைத்
தெரிசிக்கா திருக்கின்றான் றிருவெண் காடன்
பொருத்தமுற நாமங்குச் சென்று காண்டும்
பூம்பொழில்வெண் ணெய்ப்பதியிற் பொலியவென்றே
வரச்சிலரை முன்விடுத்தா ரவர்கள் கூறும்
வாய்மைகேட் டகமகிழ்ந்தார் வெண்ணெய் வாழ்வார் (30)

வாழ்வுற்று நகரெங்குங் காவ ணங்கள்
வாழைதோ ரணங்கமுகு வகைகள் நாட்டித்
தாழ்வற்ற சூதமலி கும்ப மாடி
தனைமுதலா மங்கலங்கள் எவையுந் தந்தே
ஏழுற்ற மாடங்கள் புதுக்கி யாரும்
இயலுறவே யெதிர்கொண்டு வணங்கி யெங்கள்
ஊழுற்ற வினைமுருக்கி யோதி நல்கும்
உத்தமசற் குருநாத வுய்ந்தோ முய்ந்தோம் (31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபல முறைபழிச்சி வெண்ணெய் நல்லூர்
இகலறுநல் வேளாளர் யாருஞ் சூழ
நன்றுதவு மக்குரவர் விருதி னோடு
நல்லசிவா கமசகட நண்ணச் சென்றே
ஒன்று றுமங் கலவெண்ணெய் நல்லூர் மேவி
யுயர்வீதி வலம்வந்தங் கும்பர் போற்ற
அன்றுகட னஞ்சுண்ட வண்ணல் பொற்றாள்
அன்பினொடு மிறைஞ்சியருள் பெற்று மீண்டார் (32)

மீண்டு திரு மடத்தெய்து குரவர் பாதம்
விருப்பினொடும் பணிந்தேத்தி விருந்த ளித்தார்
நீண்டதிரு முண்டநுத லரனார் பாதம்
நினைந்துய்யு மெய்கண்டார் நினைவிற் சற்றும்
காண்டகைய குருவரவை எதிர்நோக் காது
கழல்பணியா திருக்குமதைக் கருதி நோக்கி
ஆண்டகைய வக்குரவ ரவர்பா லேகி
அண்மையராய் நின்றுலவ அப்போ தங்கன் (33)

ஆணவமென் மொழியதனை நூல்முன் னாக
அங்கொரு மாணவகர் அறைதல் கேளாக்
காணுறுநன் மெய்கண்டார் தம்மை நோக்கிக்
கருதுமா கமகுரவர் கனலு நெஞ்சார்
ஏணமரா ணவசொருவம் என்னை என்ன
இயலுறுநற் செவிகேட்டே இனிமையோடும்
மாணுறுதந் தர்ச்சனியங் குயிலி னாலே
மற்றவரை நேர்சுட்டி மதிக்கவைத்தார். (34)

மெய்கண்டார் இவ்வாறு சுட்ட லோடும்
விநயமுறு சிந்தையராய் மெய்ம்மை தேர்ந்தே
கைகண்ட சிவஞானந் திகழச் சென்று
கருதுமா கமகுரவர் கண்ணுற் றாங்குப்
பொய்கண்ட சமயநெறிப் புரைநீக் கந்தப்
புண்ணியர்தங் கழல்பணியப் புகழ்ந்த ளாவி
நெய்கொண்ட குழலுமையாள் பங்கன் பாதம்
நிலவியபே ரன்புடையார் நினைந்து செய்வார் (35)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

ஆதி சைவநல் லருணந்தி யேயென அழைத்துப்
பூதி ஈந்துதங் குருவருள் புரிந்திட்ட படியே
தீது தீர்சிவ ஞானபோ தப்பொருள் தெளிய
ஓது செந்தமிழ்ச் சூத்திரங் களைமுனம் உரைத்து (36)

வார்த்தி கப்பொழிப் புரைபினர் வகுத்தருள் செய்து
கூர்த்த அன்பொடு முதன்மைமா ணாக்கராகக் கொண்டு
பார்த்த லத்ததி பக்குவ ரெனப்பலர் புகழத்
தீர்த்தனைந்தெழுத் தோடுமா வாக்கியஞ் செப்பி (37)

வேறு

மெய்யுணர்ந்தார் புகழுமரு ணந்தியோடு
மேவதிகை மனவாச கங்க டந்தார்
பொய்யகல்சிற் றம்பலநா டிகண்முன் னாகப்
புகழுறுமா ணாக்கர் நாற்பத் தொன்ப தின்மர்
மையகலும் பரிபாக நன்கு ணர்ந்து
மன்னுசிவ தீக்கைமுறை மருவச் செய்து
தெய்வவருண் மேவிடமுப் பொருளு ணர்த்திச்
சின்மயராந் தன்மையினைச் செய்து பின்னர் (38)

சுத்த மானவத் துவிதநற் சோகம்பா வனையே
நித்த முந்நினைந் திருத்தலால் நிருமல சீவன்
முத்த ராகிப்பே ரானந்த மூர்த்தியாய் முடிவில்
சித்த சித்தெலா நிறைந்திடு சிவபர னானார். (39)

மண்ணு ளார்கடம் மாசுதீர்ந் தரனருண் மன்ன
எண்ணி லாகம சாரங்க ளினிதெடுத் தியம்பும்
அண்ண லாகிய மெய்கண்டா ரடியிணை வழுத்தி
விண்ணு ளார்பணி அருணந்தி யார்திறம் விரிப்பாம் (40)

முதலாவது
மெய்கண்ட சிவாசாரியர் புராணம்
முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணந்தி சிவாசாரியர் புராணம்

***

வேத வொலியு முழவொலியும்
வேள்வி யியற்றுந் திருமுறையோர்
நாதவொலியு மோவாத
நன்மை பெருகுந் திருத்துறையூர்
ஆதி சைவ குலம்புரிந்த
அருமை யான பெருந்தவத்தால்
நீதி சாலுஞ் சிவாகமங்கள்
நிலவ வொருவ ரவதரித்தார் (1)

செல்வ மலியுந் தந்தையர் தஞ்
சீராட் டோடு வளர்நாளில்
மல்ல லாதி சைவர்கடம்
மரபிற் கேற்ற முறைமையினால்
தொல்லை வேத வாகமங்கள்
சொல்லுநல்ல விதிமுறையின்
வல்ல பல்ல பெரியோராற்
சாத கன்மம் வகுத்துப்பின் (2)

சேய்மை யான பதிவதியுஞ்
சிவவே தியருஞ் சூழ்ந்துறைய
நாம கரணஞ் செய்துவந்து
நலமார் கேச வினைமுற்றி
ஓம மாற்றி அன்னம்நுகர்
கிரியை முடித்தே யொளிர்பருவந்
தூய்மை யோடு மேறப்பின்
துகடீர் சுற்றஞ் சூழலுற (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை யில்லாச் சிறப்போடும்
இனிய வேதா கமமுறையிற்
புல்லும் பூணூற் கடிமுடித்துப்
புரையில் காயத் திரியதனை
நல்ல வோரை தனிலுரைத்து
நவைதீர் காண்டோ பக்கிரமந்
தொல்லை முறையிற் செய்வித்தார்
துகடீர் சைவ மறையோர்கள் (4)

அந்நாட் டொடங்கிப் பொது நூலாம்
அரிய மறையின் கன்மவகை
பொன்னார் பத்தி காண்டவகை
போத மாருங் காண்டவகை
பன்னா ளோதி அங்கவகை
பயின்று சிறப்பு நூலாகும்
மின்னார் சைவா கமங்களெலாம்
விதியா லங்குப் பயிலுறுவார் (5)

வேறு

காமி காதியா மாகமங் கவினுறச் சொல்லு
நாம நற்சரி யைப்பொரு ணயமுறு கிரியை
தூய்மை யெட்டுறுப் பார்சொலும் யோகபா தத்தின்
வாய்மை நற்பொருண் ஞானபா தப்பொருள் வகையும் (6)

ஏனை நற்கலை யாவையு மினியசெந் தமிழும்
ஈன மற்றிடப் பயின்றதா லியாவரு முவந்து
ஞான நற்சக லாகம பண்டித நாமம்
மான முற்றிட வைத்தனர் மண்ணகம் புகழ (7)

வேறு

புன்மை நீங்காப் புறச்சமய
நெறிகள் போக்கிப் புரைதீர்ந்த
நன்மை பெருகுஞ் சைவநெறி
நாட்டி நான்கு வருணத்திற்
றொன்மை யாக வருமடியார்
தொல்லை வினையின் றுகள்முழுதும்
இன்மை யாகச் சிவாகமங்கள்
இயம்பு தீக்கை முறைபுரிந்து. (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரு நாளிற் றிருவெண்ணெய்
மெய்கண் டருளும் வள்ளன்முன்
கிளரு ஞானந் தடையுண்டு
கீழ்மை யகற்று மவர்பாதம்
மிளிரு மன்பிற் பணிந்தேத்தி
மெய்மைச் சிவஞா னமும்பெற்றே
தளர்வு நீங்க மறைஞான
சம்பந் தர்க்குத் தக்கமுறை (9)

சுத்தாத் துவித நிலை யுணர்த்திச்
சொல்லற் கரிய சிவஞான
சித்தி யாரும் நல்லிருபா
விருபஃ தினையுஞ் செய்தருளிப்
பத்த ராவார் பலர்பணியப்
பரசி வோகம் பாவனையால்
நித்த வகண்ட பூரணமா
நிலைமை யெய்தி நின்றனரால் (10)

அந்தண் பெண்ணைக் கரைத்துறையூர்
அமரு மருணந் திப்பெருமாள்
பந்த மவிழ்ந்து மணங்கமழும்
பதும பதத்தைத் துதித்திறைஞ்சிக்
கந்த அடவி புடைசூழுங்
கடந்தை மறையோர் களிதுளும்ப
வந்த நல்ல மறைஞான
முனிவர் சரிதம் வகுத்திடுவாம்.

இரண்டாவது
அருணந்தி சிவாசாரியர் புராணம்
முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைஞான சம்பந்த சிவாசாரியர் புராணம்

***

மாவாழ் திருமார் பனுமயனு
மகவான் முதல்வா னோரெவரும்
ஓவா தென்றும் பணிந்துவக்கு
முயர்வாம் வெள்ளாற் றின்பாங்கர்
தாவா மறைநான் கோதுசிவன்
தணவாத் தூங்கா னைமாடப்
பூவார் கோயிலினி தமரும்
பெண்ணா கடமாம் புரியதனில். (1)

வேறு

தூயமறைக் குலம்விளங்கச் சொற்கலைகள் தெளிவெய்த
மேயசிவ னடியார்கண் மேல்வினையின் துகளகற்ற
மாயவயற் சமயங்கண் மறையவர்தங் குலத்தொருவர்
தீயனவெ லாமாழத் திருவவதா ரஞ்செய்தார். (2)

தந்தையார் சுற்றத்தார் தாய்மார்க ளெடுத்தேந்திச்
சிந்தைகளிப் புறவேத விதிவழியே செய்சடங்கு
சந்தமறை யொலிமுழங்கச் சாதகா திகள் செய்து
வந்தமுறை ஏழாண்டின் மறைமுந்நூன் மணமுடித்தார். (3)

வந்தமர பினுக்கேற்ப வளர்மறையு மாகமமும்
முந்தைமநு முதலறநூன் மூவறுதொல் புராணங்கள்
சந்தமுறப் பயின்றாறு சாத்திரமும் வந்தபினர்
எந்தைபிரான் மறைஞான சம்பந்தர் எனப்பெற்றார். (4)

அந்நிலையிற் றிகழ்வார்தாம் அருணந்தி யாரையடைந்
தென்னுடைய பந்தமறுத் திணையடிசூட் டிடுமென்னச்
சொன்னமுறை சிவதீக்கை சோகமறச் செய்வித்தே
பன்னரிய சிவஞானம் உணர்த்துநூல் பலவுரைத்தார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன தேசிகர் அடியிணை தொழுதவண் நீங்கிச்
சென்னி யாறுடை யார்சிதம் பரதலஞ் சேர்ந்து
மன்னு சிற்சபா நாதரை வலங்கொடு பணிந்து
பன்னு மைந்தெழுத் தோது றூஉம் பணியடைந்தனர் பின் (6)

உத்த மப்பரி பாகராம் உமாபதி யார்க்குச்
சுத்த தத்துவ ஞானத்தைத் துகளற வருளிச்
சித்தர் சூழ்ந்துவாழ் தீருக்களாஞ் சேரியி லமர்ந்து
முத்தி எய்தினார் முழுமுதற் சிவனடி முன்னி (7)

வேறு

கண்ணகன் புரிசை மாடக் கடந்தைமா நகரில் வந்த
அண்ணல்சம் பந்தனார்தம் அடியிணை தலைமேற்கொண்டு
விண்ணுளார் பரவுந் தில்லை வேதஅந் தணரின் மிக்க
ஒண்மைசேர் உமாப திப்பே ருத்தமர் திறமு ரைப்பாம். (8)

மூன்றாவது
மறைஞான சிவாசாரியர் புராணம்
முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமாபதி சிவாசாரியர் புராணம்

***

பொன்னிவளந் தருசோழ நன்னாட்டிற்
புகழ்மலியும் புலியூர் தன்னின்
மன்னுமறைக் குலமகிழ மாமுனிவர்
போற்றிசைப்ப வனிதை பாகன்
சொன்னசிவா கமம்விளங்கத் திருவுடையந்
தணர்மரபி லொருவர் தோன்றிப்
பன்னரிய அபிதானம் உமாபதியார்
எனவெவரும் பரவப் பெற்றார். (1)

அப்பெற்றி யுடையபிரா னருமறையா
கமமுதலா மனைத்துந் தேர்ந்தே
எப்பற்று மறவெறிவா ரெழில்வளர்பொன்
னம்பலவ ரிருதாள் பற்றிக்
கைப்பற்று மலர்கொண்டு காலமுறப்
பூசித்துக் கருதி வாழ்நாள்
ஒப்பற்ற மறைஞான சம்பந்தர்
பாலுற்ற உண்மை சொல்வாம். (2)

வேறு

மூவா யிரநாட் கொருநாளின்
மூல முதல்வன் பூசைபுரிந்
தோவா விருதோ டுயர்சிவிகை
யாரோ கணரா யுண்ணின்றுந்
தாவா வடியார் புடைசூழத்
தகுநல் வீதி வருவாரை
நாவார் மறைஞா னப்பெருமான்
நண்ணுஞ் சிவிகை யுறநோக்கி. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பட்டகட்டையிற் பகற்குரு டேகுதல் பாரீர்
சிட்டர் சூழ்தர என்றசொல் செவியுறக் கேட்டே
அட்டமூர்த்திதா ளகமல ரன்புமா பதியார்
மட்டி லாதபே ரன்பராய் மகிழ்வுகொண் டனராய். (4)

வார்த்தை கேட்டவக் கணத்தினே வாகனத் திழிந்து
தீர்த்த ராகிய சம்பந்தர் திருவடி தொழுது
பார்த்த அக்கணம் பகற்குரு டென்றருள் செய்தீர்
சீர்த்தி எய்தினீர் நாயினேற் கப்பொருள் செப்பி. (5)

பூர்த்தி ஞானநல் வரம்பினைப் புகலுவீ ரென்ன
நார்த்த தும்பிய குரவரும் அதன்பொருள் நவிலப்
போர்த்த தம்வரு ணாபிமா னம்புறக் கணித்துக்
கூர்த்த அன்பொடு மாங்கவர் குறிவழி நின்றார். (6)

வேறு

இந்நிலை நிற்கு நாளி லெழில் வளர் மறையோர் வாழும்
மன்னுதண் கடந்தை வந்த மறைஞான முனிவர் தாமும்
தன்னிகர் பணியி யற்றிச் சாருமா பதியார் தங்கண
இன்னருள் சுரந்து நோக்கி எய்துநற் பாகம் பார்ப்பான் .(7)

பாரகம் புகழும் நல்ல பண்புடைத் தொழிலென் றுன்னிக்
காருக வினைமேற் கொண்ட கரிசிலார் வீதி சென்று
சீரகம் புகுநாற் பாவிற் செலுத்திய கூழின் சேடம்
வாருமவ் விடைத்தாஞ் சென்று கரத்தினில் வாங்கி உண்டார். (8)

உண்ணுறு காலை அந்தக் கரத்தினி லொழுகுங் கூழை
அண்ணலார் உமாப திப்பே ரந்தண ரேந்தி யுண்ணத்
தண்ணருள் சுரந்தே யாங்குத் தனிச்சிவ ஞான போதம்
புண்ணியர் திருவாக்காலே பொலிவுற உரைத்தாரன்றே (9)

உரைத்தலு மேனை நாலு மொழிவுறா தோதுங் காதல்
வரப்பினும் வணங்கிக் கேட்ப மறைஞான முனிவர் தாமும்
திரத்தநற் பத்தி சான்ற திருவுடை யந்த ணர்க்குக்
கரத்திலா மலக மென்னச் சிவாகமப் பொருள்கள் காண (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஞான நூல்கள் யாவையு முரைத்துத் தம்மெய்ஞ்
ஞானசற் குருவு ரைத்த நல்லுப தேசஞ் செய்து
தேனினோ டினிமை முற்றுஞ் சிவனுறா அமிழ்த முண்ட
வானவ ரெனக்களிக்க மகிழ்வருள் செய்தா ரன்றே. (11)

இம்முறை வாழ்வார் தம்மை எழிலரு ணிருத்தர் தாளை
மெய்ம்முறை பூசை செய்யும் வேதிய ரறியா ராகித்
தம்முறை பிறழ்ந்தா ரிந்தத் தனியுமா பதியா ரென்ன
எம்மர பிழந்தீ ரென்றே எள்ளினா ரெவருங் காண. (12)

மற்றது காலை தன்னின் மனுகுல வேந்தாற் பெற்ற
கொற்றவன் குடியி லேகிக் கோதிலா மடங்கண்டாங்கே
பெற்றிசா லடியர் குழப் பேரருட் சிவனைப் பூசை
சொற்றநூல் விதியா லாற்றித் துயக்கறு தியானஞ் செய்வார். (13)

வேறு

இந்தமுறை ஞானநிட்டை புரியுநாளில்
எழில்வளரு நடராசர்க் கியற்றும் பூசை
அந்தமுறை நாள்வரவுந் தில்லை வாழும்
அந்தணர்கள் மேவுதிரு வம்ப லத்தே
பந்தமகல் உமாபதியார் பரிவு கூர்ந்து
பரமனடி பூசிப்பான் பணிந்து செல்லச்
சிந்தைவே றாகியநல் லந்த ணாளர்
செல்லன்மின் போமெனவே செப்பி விட்டார். (14)

இக்கொடிய மொழிகேட்ட முனிவர் தாமன்
றெய்துமனத் தளர்வோடு மேகி அந்தத்
தக்கதனி மடமெய்திச் சம்பு பூசை
தணவாமே மானதத்திற் றயங்கச் செய்ய
மிக்கவெறுப் பொடுதடுத்த மறையோர் தாமும்
வேதநா யகர்பூசை விரும்பிச் செய்வான்
புக்குமணிப் பொன்மன்றின் கதவம் நீக்கிப்
புண்ணியஅம் பலவாணர் திருமுன் போந்தார் (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியசிற் றம்பலவன் பேட கத்தை
ஆங்குற்று நோக்கினார் காணா ரஞ்சி
மழவிடையான் திருமுன்னர்ப் பணிந்து மாழ்கி
மாயமிதென் மன்றின்வளர் மணியே மாலும்
அழகுறுதா மரையயனு மாதி யந்தம்
அறிவரிய அழற்பிழம்பாம் அண்ணால் அண்ணால்
பழகியஎம் அபராதம் பற்றாய் எங்ஙன்
பழவடியார்க் கருள்புரிவான் புரிந்து சென்றாய். (16)

தாட்டுணையே புணையாகப் பற்றி நின்று
தனிமாயைக் கடல்நீந்துந் தக்கோர் பாலோ
கோட்டமிலா மனத்தோடுங் குளத்தி லுன்னைக்
குறித்துமதி அமிழ்துண்ணுங் குணத்தர் பாலோ
ஈட்டமரு மலராதி கொண்டன் பாக
எழிலுறுபூ சனைபுரியு மியல்போர் பாலோ
நாட்டமொரு மூன்றுடையா யெங்க ணுற்றாய்
நடமிடுவா யென்றழுது நைவா ரானார். (17)

வேறு

இம்முறை அந்த ணாள ரியாவரு மிரங்கிப் போற்ற
மெய்ம்முறை வேத நாதன் விண்ணிடை விளம்ப லுற்றான்
தம்முறை பூசை யாற்றுந் தகுதிசா லுமாப திப்பேர்
அம்மறை யோனம் மன்ப னவனிடை யமர்ந்தோ மென்றான்.(18)

விளம்புமா காய வாணி வேதியர் யாரும் கேட்டுக்
தளர்ந்தநெஞ் சுடைய ராகித் தாயிடைப் புகுமான் கன்றிற்
கிளர்ந்தெழு மன்பினோடும் கேடிலா ஞானச் செல்வ
வளர்தரு முமாப திப்பேர் மறையவர் பால்வந் துற்றார். 19)

உற்றடி பணிந்தி யாரு மோதிசால் முனியே எங்கள்
குற்றநற் குணமாக் கொண்டு குறைவுதீர்த் தருளு மாறு
பற்றிலார்க் கருளுந் தில்லைப் பரனடிப் பூசை யாற்ற
இற்றைக்கே வருதல் வேண்டு மெம்பிராற் குரியா யென்றார். (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ன ணந் தில்லை வாழும் அந்தணர் வேண்ட ஏகிப்
பொன்னணி மன்ற வாணர் பூம்பதப் பூசை யாற்றித்
தன்னிக ரந்த ணாளர் தனிமட மேவிப் பின்னர்
மன்னுறு சீவன் முத்தி வரத்தராய் வைகும் நாளில். (21)

முன்னொரு முனிவன் பன்னாள் முதுசிவ புண்ணி யஞ்செய்
தன்னநற் பலத்தினாலே அகக்கர ணந்தி ருந்தி
உன்னரு ஞான நூல்க ளோதிமா மேதை யாகிப்
பின்னொரு பாவந் தன்னை இழைத்தனன் பேதை போல. (22)

அன்னதோர் கார ணத்தா
லவனியிற் புலையர் தங்கள்
உன்னருங் குலத்து தித்தா
னொப்பில்பேர் பெற்றா னென்னப்
பன்னருந் தாதை கூறப்
பாலனாம் பருவம் நீங்கித்
தன்னருங் குலத்துக் கன்னி
தனைமணம் புரிந்தா னன்றே. (23)

இன்னணஞ் சின்னாட் செல்ல
எம்பிரா னருளி னாலே
முன்னைநற் பவத்திற் செய்த
புண்ணிய முதிர்வா லங்ஙன்
உன்னுதம் மரபி லுற்ற
குறையெலா முன்னி உன்னிப்
பின்னரு வருப்புக் கொண்டு
சேரியிற் பிரிந்தா னன்றே. (24)

சுற்றமுந் துணையும் நீத்துத்
துகளறு போத மேவக்
கற்றைவார் சடையான் வாழுங்
கவினுறு தில்லை மேவிப்
பொற்றிணி மதில்சூழ் கோயிற்
புறத்தினில் வணங்கிச் சின்னாள்
உற்றபின் விறகு வெட்டி
ஒவ்வொரு நாளும் கொண்டு. (25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமலர்ச் சடையான் கோயில்
மடைப்பள்ளி யூடு செல்லத்
திருவுடை அந்த ணாளர்
வாயிலாச் செலுத்துங் காலை
வரிசிலை வரையாக் கொண்ட
வள்ளலா ரருள்வந் தெய்தக்
கருமலி பவந்து டைக்குங்
காலமு மணிமை யாக. (26)

வேறு

விரவு மடியார் துயர்தீர
வெள்ளி விடைமேல் வரும்பெருமான்
பரவும் பெற்றான் சாம்பாற்குப்
பரமுத் தியினை நல்கிடுவான்
திரமெய் யடியார்க் கெளியனெனத்
தீட்டும் பாவார் திருமுகத்தை
வரமார் கனவில் வந்தருளி
வனிதை பாகர் சிலமொழிவார். (27)

என்பா லன்பா ருமாபதிவா
ழெழிலார் கொற்ற வன்குடியில்
அன்பா லேகிப் பணியியற்றி
அளித்தி யாலித் திருமுகத்தைத்
துன்பார் மலக்கூட கல்வித்துத்
தூய முத்தி தனைநல்கும்
நின்பா லன்பா யெனவுரைத்து
நீத்தார் பொன்னம் பலக்கிழவர். (28)

கனவு நீங்கிச் சாம்பானார்
கருத வரிய திருமுகத்தை
மனம்வாக் கெட்டாச் சிவனளித்த
வண்ணம் நோக்கி மகிழ்ந்துருகிப்
பனவர் தில்லைப் பரனேயோ
பதித னேன்பா லருள்செய்யும்
அனகா பொன்னம் பலக்கூத்தா
அரசே அமுதே எனத்துதித்தார். (29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முறையாற் றுதித்திறைஞ்சி
இனிய சிவனார் திருமுகத்தைப்
பந்தஞ் செய்து பரனுரைத்த
வாறே போந்து பலநாட்கள்
கொந்தார் தளவக் கொடிபுடைசூழ்
கோமான் கொற்றவன் குடிவா
ழந்த ணாளர் திருமடத்தி
னருகு விறகுப் பணிசெய்வார். (30)

பன்னாள் விறகுப் பணிசெயுநாள்
மழையா லொருநாட் பணிமுட்ட
அந்நாள் மடத்தி லமுதமைக்கத்
தாழ்த்த தாக அஃதறிந்தே
மின்னார் பொன்னம் பலக்கூத்தர்
விரும்பு மடியார் தாமதமென்
இந்நா ளென்ன மடைக்தொழிலோர்
இறைஞ்சி இனைய இயம்புவரால். (31)

வேறு

பனவர்தங் குரவீர் கேட்பீர்
பஞ்சம னொருவன் பன்னாள்
நனிவிற களித்தா னிற்றை
நல்கில னென்று ரைத்தார்
அனையனை நாளை வந்தால்
நம்மிடை அழைமின் என்னப்
புனிதஅந் தணர்கள் கோமான்
புகன்றனன் புகலக் கேட்டார். (32)

மற்றைநா ளிரட்டி யான
காட்டங்கள் மல்கக் கொண்டே
உற்றனர் சாம்பா ருற்ற
எல்லையி னோடித் தாழ்ந்து
கற்றவர் பணியு மெங்கள்
கருணையங் கடலே இந்நாள்
மற்றவன் போந்தா னென்று
மகிழ்வுற வோதி னாரே. (33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைவளத் தடியார் கூறும்
மகிழ்வுரை கேட்டெ ழுந்து
நடைகொடு திரும டத்தின்
முன்றிலை நண்ணி யுற்ற
அடியனை நோக்கி அப்பா
ஆரைநீ யாங்ங னுற்றாய்
படிதவிர் குணத்தா யெல்லாம்
பகர்தியென் றருளிச் செய்தார். (34)

இம்முறை அந்த ணாளர்
அருளலு மெழிற்சாம் பானார்
மெய்ம்முறை அரனார் தந்த
திருமுகம் வைத்து வீழ்ந்தார்
கொம்மென அடியா ரோடிக்
குலவுசீர்த் திருமு கத்தைத்
தம்மிடைத் தரலும் அந்தத்
திருமுகந் தன்னை நோக்கா. (35)

அரனருள் செய்த அந்தத்
திருமுக மதனை அன்பாற்
சிரமிசை யேற்றிக் கூப்பித்
திருநய னங்க ளொற்றிக்
கரசர ணாதி யங்கம்
கம்பித்து நடனஞ் செய்து
வரதனே நாயே னுய்ந்தே
னுய்ந்தன னெனவ ணங்கா. (36)

எழுந்துபே ரின்ப மெய்தி
ஏகனா ணையைநி னைந்து
தொழுந்தகைச் சாம்பார் சுத்த
சத்திநி பாதம் நோக்கி
அழுந்துசத் தியநிர் வாண
தீக்கையா லளித்தார் முத்தி
செழுந்திரு அந்த ணாளர்
தெய்விக குரவ ராவார். (37)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநன் முறைமை கேட்டே
எய்தி சாம்பா னார்தஞ்
சந்தமார் மனைவி சுற்றந்
தக்கநட் பாளர் கூடிப்
பந்தநான் மறையோ னெங்கள்
பதியமர் சாம்பா னாரைச்
செந்தழல் கொளுவச் செய்தான்
என்றிசை செவியிற் சொற்றார். (38)

அந்தநல் வசனம் கேட்டே
அரசனு மதிசயித்துச்
சுந்தர மறையோர் தம்பால்
வந்தடி தொழுது சொல்வான்
அந்தண ரேறே எங்கள்
அருந்தவப் பயனே இன்றென்
சிந்தனை அயிர்க்கு மாறு
செய்தனர் சில்லோ ரென்றான். (39)

என்றலும் அந்த ணாளர்
இயம்பினர் தீக்கை மேன்மை
நன்றுறு மரசன் கேட்டு
நாயினேன் அறியு மாற்றால்
இன்றொரு தீக்கை தன்னை
இயற்றிட வேண்டு மென்ன
அன்றவர் சூழ்ந்து நிற்கு
மடியவர் குழாத்தை நோக்கி. (40)

சத்திநி பாதம் பெற்ற
தகைமையர் தமைக்கா ணாது
நித்தலு மருச்சித் தேத்தும்
நிருத்தன்மஞ் சனநீர் தன்னால்
அத்தனி மடத்தின் பாங்கர்க்
கோமுகப் புறத்த மர்ந்த
சுத்ததா வரம தான
முள்ளியை நோக்கிச் சொல்வார். (41)

 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனே கேட்டி இங்ஙன்
அடியவர் பலரை ஆய்ந்தும்
வரதபோ தனரா யுள்ள
பக்குவர் மருவக் காணோம்
பரசிவ னடியர் நாளும்
பரிந்துணக் காய்க ளீந்த
உரைபெறு முள்ளி இத்தை
உயர்கதிக் குய்த்தும் காண்டி. (42)

என்றுரை புகன்றே அந்த
எழிலுமா பதியார் முள்ளி
தன்றனி உருவம் நோக்கத்
தகைபெறு சோதி யாகி
அன்றர சனையுள் ளிட்டார்
அரகர வெனச்சே விப்பச்
சென்றுயர் விசும்பி லேகிச்
சிவனுரு வாய தன்றே. (43)

இன்னணம் நிகழ்ந்த செய்தி
கண்டவவ் வரச னேதம்
மன்னிடா வகையா னந்த
மருவுமா பதியார் பாதம்
பொன்னணி ஆடை மாலை
முதலிய கொடுபூ சித்து
நண்ணுநின் பெருமை யோரா
நாயினேன் பிழைபொ றுத்தி. (44)

என்றப ராத மீந்து
விடைகொடு மீண்ட தற்பின்
நன்றுசால் அருண மச்சி
வாயர்முன் னயக்குஞ் சித்தர்க்
கொன்றுமுப் பொருளு ணர்த்தி
உயர்சிவ ஞான மீந்து
பொன்றுதல் பவித்த லில்லாப்
புனிதரா லயத்தி னண்ண. (45)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கம ரந்த ணாள
ரியாவரு மருவ ருத்துத்
தீங்கிலாப் பெரியோர் தம்மைச்
செறுத்துடன் கொண்டு சென்றே
ஓங்கெயில் வட்டப் பாங்க
ரோவுறத் தள்ளி விட்டுத்
தீங்கிலா அரனார்க் கேயுந்
திருவிழாத் தொடக்கஞ் செய்வார். (46)

மெய்ம்முக மறையோ ரேற்றும்
விழாக்கொடி எழாமை காணாப்
பைம்முக அரவப் பூணான்
பதநினைந் திரங்க ஆங்கோர்
மைம்முக விசும்பின் வாணி
எழுந்தது மறையோர் கேட்பீர்
நம்முக மன்பு மிக்க
நல்லுமா பதிவந் தக்கால். (47)

ஏறிடுந் துவச மென்ன
இம்மென யாரு மோடித்
தேறுநும் பெருமை யெண்ணாச்
சிறியரேம் பிழைபொ றுத்தே
ஆறணி சடையி னான்றன்
அணிவிழா அமைத்தல் வேண்டும்
ஊறமு தனையீ ரென்றே
உவப்பொடும் பணிந்து நின்றார். (48)

பணிந்தபி னெழுந்து சென்றே
பயிலுமா பதியா ரென்பார்
குணங்குறி யிலாத கூத்தப்
பிரானடி குறுகிப் போற்றி
இணங்குநல் லொளிக்கு மென்னு
மின்பமார் முதற்பா வோதி
அணங்குசேர் பாகத் தண்ணல்
அணிவிழாச் செய்து பின்னர். (49)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

கொடிப்பாட்டு நூலருளிக் குலவுசிவப்
பிரகாசங் கொள்வி னாப்பா
ஒடிப்பாட்டு மருட்பயனோ டுண்மைநெறி
விளக்கமுளம் உய்க்குந் தூது
படைப்போற்றிப் பஃறொடைப்பா சங்கற்ப
நிராகரணம் பதிகக் கோவை
புடைத்தோற்று பதிக்கோவை சேக்கிழார்பு
ராணமன்பர் புராண சாரம். (50)

அருளியபின் திருக்கோயிற் புராணமதை
ஆக்கியரும் பேட கத்தே
மருவியிடப் புரிகாலை அந்தணர்கள்
அம்பலத்தின் வாரா வண்ணம்
பரிவின்றித் தடுத்தனரப் பொதுவாழு
நடப்பெருமான் பரிவு கூர்ந்து
பெருகுதிரு உமாபதியார் மான்மியத்தைப்
புவனிமிசைப் பிறங்கச் செய்ய. (51)

ஒருநாட்சா யங்காலைச் சரியைசெய்
அந்தணர்க ளுள்புக் கார்க்குப்
பெருநாட கப்பெருமா னுருவமறைத்
தருளுதலும் பெம்மா னேயோ
கருமாற அருளுதவுங் கண்ணுதலே
எனக்கரைந்து கலங்க லுற்றுத்
திருநாதா அம்பலவா வெங்குற்றாய்
என்றென்றே செப்புங் காலை. (52)

சிற்சபையி னடமிடுவா ரருளாலே
விண்ணின்மிசைத் திருவாக் கொன்று
மற்சரமி லுமாபதிபே டகமதனின்
மன்னினம்யாம் வரத்தீ ரென்றே
சற்சனஅந் தணர்செவியிற் சார்ந்திடலும்
இரங்குமனத் தாய்பாற் செல்கோ
வற்சமென நற்கொற்ற வன்குடிவாழ்
உமாபதிபால் வந்து சூழ்ந்தார். (53)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்குலச் சிகாமணியே ஏழைமையால்
யாங்களிழை குற்ற மெள்ளிப்
பங்கமுறா தெமைக்காத்தி யென்றவர் தஞ்
சரணமிசைப் பணிந்து சொல்வார்
புங்கவர்கள் போற்றிசைக்கும் பொதுவினடம்
புரிபெம்மான் பூசைக் காக
அங்குசெலக் காணாதெம் பெருமானை
யழுங்கினோ மனைய காலை. (54)

உமாபதியார் பேடகத்தில் உறைகின்றோம்
என்னவொரு விண்ணின் வாணி
நமாவென்று தொழுமடியார் எல்லாருஞ்
செவிகேட்க நண்ணிற் றென்ன
எமாலொன்று குறையமிலை பேடகத்தில்
எழிற்கோயிற் புராணஞ் செய்து
சுமாவைத்துப் பூசித்தா மென்றருள
அக்கணம்பூ சுரர்கள் சொல்வார். (55)

அடிகேளிப் புராணமதை அம்பலம்வைத்
தரங்கேற்றி அருள்வீ ரென்னப்
படிபோற்றுந் தில்லைநகர்த் திருவுடையந்
தணராவார் பல்லோர் கூடிக்
கொடிதோர ணங்கள்குடை சாமரைசின்
னம்முதல குலவிச் சூழ
மடியாராத் தவமுடையீர் வைகுறுமிச்
சிவிகைமிசை யென்ன வந்தார். (56)

வந்தேறுஞ் சிவிகைதனை மலிதலுறு
மந்தணர்கள் வாங்கித் தோண்மேன்
மந்தார மலர்சொரிய வந்தார
வீதியிடை வணங்கிச் சென்றே
சந்தாரு மம்பலத்திற் றவிசினிடைத்
தகைமைபெறு புராணந் தன்னை
முந்தாக வைத்துமலர் கொடுதூவி
வாசிக்க முதல்வ னார்தாம். (57)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமிருந் ததுபோலப் பொன்மன்றி
லெழுந்தருளி யிருப்பக் கண்டு
நன்றுறுமந் தணர்மகிழ்வு கொண்டுநவில்
புராணத்தை நயந்து கேட்டுக்
கன்றையுடை ஆனெனவே கசிந்தமனத்
தினராகிக் களிப்பா ரானார்
மன்றவர்பே ரருளாலே புராணமதை
அரங்கேற்றி வைகிப் பன்னாள். (58)

வேறு

சத்திய ஞானா னந்தத் தத்துவ அனுபவ வத்தால்
பத்திசெய் அடியார் போற்றப் பரனடிக் கமல மெய்தி
நித்திய சுபாவ முத்த நிராகார பூர்த்தி யான
சுத்தவத் துவிதா னந்த சொரூபமே யாகி நின்றார். (59)

வாழிதிரு அந்தணர்கள் வாழிசெறி வானோர்
வாழிமலி ஆனிரைகள் வாழிபொழி வானம்
வாழியுல காளரசர் வாழிமனு நீதி
வாழிசிவ நேசர்குழு வாழிசிவ நாமம். (60)

நான்காவது
உமாபதி சிவாச்சாரியார் புராணம்
முற்றும்

KOHA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சந்தனாசாரியர் சரிதையும் சைவசித்தாந்த
த்திரங்களும்" என்னும் இந்நூல் சந்தான சாரியர்களின் வாழ்க்கை
லாற்றினையும் அவர்கள் படைத்த சைவ சித்தாந்த சாத்திரங்களில்
பாதிந்து கிடக்கும் சைவசித்தாந்த அடிப்படைக் கருத்துக்களையும்
ராய்வதாக அமைகின்றது. சந்தான சாரியர் மற்றும் சைவசித்தாந்த
த்திரங்கள் பற்றி அறிய விரும்பும் எவருக்கும் இந்நூல் பெரிதும்
பன்படும்.

டாக்டர், மாரிமுத்து வேதநாதன், யாழ்ப்பாணப்
ல்கலைக்கழக கலைப்பீடத்தின் இந்துநாகரிகத்துறையின் தலைவர்,
யர்பட்டப்படிப்புக்கள் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சைவசித்தாந்த
துகலைமாணிக் கற்கை நெறியின் இணைப்பாளர். தஞ்சாவூர் தமிழ்ப்
ல்கலைகத் தத்துவ மையத்தில் வருகை தரு பேராசிரியராகப்
ணியாற்றியவர்.திருவாவடுதுறை சைவசித்தாந்த நேரடிப் பயிற்சி
மயத்தில் மூன்று ஆண்டுகள் முறையாகப் பயின்று "சித்தாந்த
த்தினம்" என்னும் பட்டம் பெற்றவர். இந்துப்பண்பாடு சைவ
த்தாந்தம் தொடர்பான பல சர்வதேச கருத்தரங்குகளிலும் பங்குபற்றித்
மது ஆய்வுசார் அனுபவத்தை வளர்த்துக் கொண்டவர்.

பேராசிரியர்,
முனைவர் க.பாஸ்கரன்
இயக்குனர், தத்துவமையம்,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

ISBN 955029900-3

...ர்,சங்கானை. T.P No:- 0776915339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org